மகாஜனன்

MAHAJANAN


# தலைவர்
# தெ.து.ஜெயரத்தினம்
# நினைவு அலைகள்





மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

2013


www.officemp.org
We Wish
for a bright
future
Your Better Future
Begin with Us
TE Group of Companies
JOB
TOPEMP | OFFICEMP | TE BUSINESS & TECHNOGY COLLEGE
201 & 207 - 5200 FINCH AVE. EAST SCARBOROUGH ON M1S 4Z4
T: 416.337.2071
www.topemp.ca
T: 416.642.0208
www.officemp.org
F: 416.644.0160
E: info@topemp.ca
E : info@officemp.org

# மகாஜனன்

தலைவர்

## தெ.து. ஜெயரத்தினம் நினைவு அலைகள்


மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா

**MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA**

## மகாஜனாவின் முகப்புத் தோற்றம்




## மகாஜனாவின் அமைவிடம்



கல்லூரி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆனந்த நடராஜப் பெருமான்



# கல்லூரிக் கீதம்

(ஜன கண மன... என்ற மெட்டு)
ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப்பா புகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம்பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரையுடையோம்
உனை நீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா.

தொல்புரம் புலவர் நா. சிவபாதசுந்தரனார்

# கொடி வணக்கம்

பல்லவி

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோலமுற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா - (கொடி)

சரணம்


தீரமுற்றுத் திருவடைந்த
தெய்வதுரை யப்பரது
தீர்க்கமான தியானமதில்
தேறிவந்த மகாஜனாவின் - (கொடி)

மலர்மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர்விரித்து
தவம்பொலிந்த மகாஜனாவைத்
தாங்குகொடியின் தாள்பணிவோம் - (கொடி)

தனமளித்து தவம்மிகுந்து
தாவியாடுங் கொடியிது
மனமகிழ்ந்து மலர்கள்தூவி
வாழியென்று வணங்குவோம். - (கொடி)

தொல்புரம் புலவர் நா. சிவபாதசுந்தரனார்


## திரு.தெ.அ.துரையப்பாபிள்ளை



தீரமுற்று திருவடைந்த
தெய்வதுரை யப்பரது
தீர்க்கமான தியானமதில்
தேறிவந்த மகாஜனா

புலவர் நா.சிவபாதசுந்தரனார்

# திரு. கா. சின்னப்பா



பாவலர் வழியில் பழந்தமிழை நன்கு உணர்ந்த
காவலர் சின்னப்பா கவிஞர் அவர் தலைமையிலே
மகாஜன உயர்நிலைப் பள்ளி தொடர்ந்து மலர்ந்தது !

**ஆசி. செல்வன்**

## திருமதி. தையல்நாயகம்




அதிபர். ஜெயரத்தினத்தின் அன்னையார்

# தலைவர்
# திரு.தெ.து.ஜெயரத்தினம்



புன்னகைசெய் முகமும் புனிதம் நிறைமனமும்
மன்னு சைவப் பணியும் வாழ்வினிற் கொண்டிருந்தாய்
கல்லூரித் தாய் மகிழ்ந்த காலமெல்லாம் உழைத்தாய்
உன்னை வணங்குகின்றோம் உளமார்ந்த நன்றி செய்வோம்.

**புலவர் ம.பார்வதிநாதசிவம்**



தலைவர் தெ. து. ஜெயரத்தினம், இராணிரத்தினம் தம்பதிகளின்

மங்களம் நிறை திருமணக்கோலம்

**மலர் குழு**

**மலர் ஆசிரியர்**

கலாசூரி. ஆ. சிவநேசச்செல்வன்
MA., MSc

**இணைப்பாளர்**

திரு.க.முத்துலிங்கம்

**குழுவினர்**

திரு. பொ. கனகசபாபதி

திரு. க. ஜெயேந்திரன்

திரு. க. ஞானசரவணபவன்

திரு. சிவ கௌரிபாலன்

திரு. செ. சந்திரசேகரி

திரு. மு. சிவகுமாரன்

## தலைவர் தெ.து.ஜெயரத்தினம்

## நினைவு அலைகள்

உலகெலாம் பரந்து வாழ்வாங்கு வாழும் மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சமூகம், தமது வாழ்வையும் வளத்தையும் அளித்த மகாஜனா அன்னையின் அருந்தவப் புதல்வராகிய தலைவர் தெ.து. ஜெயரத்தினம் அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது.

அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் தனக்கென வாழாப் பிறக்குரியாளராக வாழ்ந்து நிறைந்த அர்ப்பணிப்போடு ஆற்றிய பணிகளை அவரது நிழலில் வாழ்ந்து வழிகாட்டலோடு உயர்ந்தவர்கள் நன்றியோடு நினைவு கூருகின்றனர்.

கனடாவிலே புலம்பெயர்ந்து வாழும் மகாஜனன்கள், பழைய மாணவர் அமைப்புகளுக்கு எல்லாம் முன்னோடியாக, பிறந்த நூற்றாண்டு விழா நிகழ்வினைக் "கால்கோள்" செய்து ஆரம்பித்து வைத்துள்ளனர்.

பழைய மாணவர்களின் இதயத்தில் உள்ள நினைவு அலைகளை மீட்டி உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆவணம் ஒன்றை பதிவு செய்து வெளியிடுகின்றனர்.

**"பிறந்த நூற்றாண்டு நினைவு அலைகள்"** சென்ற காலத்தின் பழுதிலாத் திறன்களைப் பதிவு செய்துள்ளது. மகாஜனாக் கல்லூரி மீண்டும் புதிய ஒளியோடும் செயலாண்மைத் திறத்தோடும் **அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நினைவுப் பீடமாக** மீண்டும் எழுச்சி பெறவேண்டும்.

**எம் கடன் பணி செய்து கிடப்பதே**

**ஆ.சிவநேசச்செல்வன்**

**மலர் ஆசிரியர்**

# யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
# J/Mahajana College Tellippalai

T.P 021 3214004
021 2223981

E.Mail :- jayamahajana2010@gmail.com
jeyamahajana2010@yahoo.com


Principal

24/12/2012

## வாழ்த்துச் செய்தி

கல்வியிலும் கலை இலக்கியத்திலும் கடவுள் பக்தியிலும் அக்கறையும் ஆர்வமும் கொண்ட மக்கள் வாழ்ந்த தெல்லிநகரில் பாவலர் துரையப்பா பிள்ளைக்கு தவப்புதல்வனாய் பாரினில் அவதரித்த செம்மல் அமரர்.தெ.து.ஜயரத்தினம் அவர்களின் அகவை நூறு நிறைவு நாளில் அவரின் நினைவாக வெளியீடு செய்யப்படும் இம்மலருக்கு நானும் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் பெரும் புலமை கொண்டு சாதனைகள் பலவற்றை நிலை நாட்டிய செம்மல் ஜயரத்தினம் அவர்கள் மகாஜன சமூகத்தாலும் மக்களாலும் "நவ மகாஜன சிற்பி" என வர்ணிக்கப்பட்டார். இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் வாழும் மாணவர்கள் கல்வியும் கலைத்துவமும் வளரவும் மெருகு பெறவும் பெரும் பங்காற்றியவர்.

'கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற அருள் வாக்கினை மெய்ப்பிக்கும் வண்ணம் உலகின் அனைத்துப் பாகங்களிலும் சகல துறைகளிலும் மகாஜனன்கள் விற்பன்னராக திகழ்ந்து வெற்றிக்கொடி நாட்டி வருகின்றனர்.

இவருடைய காலத்தில் கல்விகற்ற பெரும் தொகையான மாணவர்கள் புகழ்பூத்த வைத்தியநிபுணர்களாகவும், புகழ்பெற்ற பொறியியலாளர்களாகவும், கணித மேதைகளாகவும், கணக்காய்வு விற்பன்னராகவும், கணக்காய்வு விற்பன்னர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், ஆசிரியர்களாகவும் மற்றும் இன்னோரன்ன துறைகளிலும் உலகெங்கும் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் குறிப்பாக உதைபந்தாட்டத்துறையில் அகில இலங்கை ரீதியாக பல்வேறு வெற்றிக்கேடயங்களை கல்லூரி வசமாக்கியது, இதன்மூலம் உதைபந்தாட்டத்தில் தனக்கென ஒரு நிலையான முத்திரையைப் பதித்து வைத்திருக்கின்றது என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. அவ்வாறான பல்வேறு துறைசார்ந்தவர்களை மெருகேற்றிய மாமேதையின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு அனைவரும் ஒன்று சேர்ந்து வெளியீடு செய்கின்ற இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தந்தை தொடக்கி வைத்த பள்ளியை வானுயர்ந்த கட்டடங்கள், ஆய்வுகூடங்கள், விடுதிச்சாலை, விளையாட்டு மைதானம், நடேசர் ஆலயம் என திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைப்பை அமைத்து பௌதீக வளத்தின் அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்த உத்தமர்.

நவமகாஜன சிற்பி அமரர்.தெ.து.ஜயரத்தினம் அவர்களின் நூறாவது அகவையை நினைவு கூரும் வகையில் வெளியீடு செய்கின்ற இந்நூலிற்கு சகல வழிகளிலும் தமது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குகின்ற அனைத்து மகாஜனன்களுக்கும் குறிப்பாக கனடா வாழ் மகாஜனன்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அம்மலர் சிறப்பாக வெளிவர எமது கல்லூரி வளாகத்தில் குடி கொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

'யாவர்க்குமாம் பிறர்க்கு இன்றுவரை தானே'

திரு.கு.வேல்சிவானந்தன்,
அதிபர்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

K. VELSIVANANTHAN
Principal S.L.P.S. I
J/Mahajana College
Tellipalai, Jaffna.

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION – CANADA
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No: 001100556)

## தலைவரிடமிருந்து

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா இரு தாசப்தங்களுக்கு மேலாக கல்லூரியையும் கனடா வாழ் கல்லூரி சமூகத்தையும் இனைக்கும் பாலமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. அடுத்த வருடம் எமது சங்கம் வெள்ளி விழாவினை (25 years) கொண்டாட இருக்கிறது.

மகாஜன அன்னையின் நூற்றாண்டு விழாவினை 2010 ஆம் ஆண்டு வெகு சிறப்பாக கொண்டாடியது. 2013 இல் மகாஜனாவின் தலைவர் அமரர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நூற்றாண்டு நினைவை ஆரம்பித்து வைப்பதில் பெருமை கொள்கிறோம். இந்த ஆண்டை தெ.து.ஜெயரத்தினம் நினைவு ஆண்டாக உலகெங்கும் பரந்து வாழும் மகாஜனங்கள் கொண்டாடுவோம்.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா கிளை 1989இல் ஆரம்பித்து இன்று பல நூறு அங்கத்தவர்களுடன் கூடிய, கனடாவில் மிகப் பெரிய பழைய மாணவர் சங்கமாக வளர்ந்து நிற்கிறது. 2014 ஆம் ஆண்டு எமது சங்கம் வெள்ளி விழாவை வெகு விமரிசையாக கொண்டாட உள்ளோம்.

இருபதாம் நூற்றாண்டிலே அகில இலங்கையில் அதிசிறந்த முன்னணிக் கல்லூரியாக உருவாக்கிய மகாஜனா தலைவரின் பிறந்த நூற்றாண்டை கொண்டாடுகிறோம். இன்று எமது சங்கத்தால் வெளியிடப்படும் மகாஜனன் மலரை **"அமரர் தெ.து. ஜெயரத்தினம் அவர்களின் நினைவு அலையாக"** அவருக்குச் சமர்ப்பிக்கிறோம்.

மகாஜன மாதாவின் மைந்தர்களாகிய நாங்கள் எமது வழித்தோன்றல்களை மகாஜனாவுடன் இணைப்பதற்கு கனடா பழைய மாணவர் சங்கம் பாலமாக இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அதற்கான புதிய வேலைத் திட்டங்களுடன் செயற்பட்டு வெற்றியுடன் முன்னேறி வருகிறோம். எமது இளைய சமுதாயத்துக்கு காலத்திற்கு ஏற்ப தேவையான பயிற்சிப் பட்டறைகளை மிகவும் தேர்ச்சி பெற்ற தரமான பட்டதாரி இளைஞர்களால் புதிய இளம் மகாஜனன்களாக உருவாக்கி வருகிறோம். இன்னொரு அங்கமாக ஏழு ஆண்டுகளாக கணித, பொது அறிவுப்போட்டிகளைகனடாரீதியிலும்,இலங்கையிலும்நடாத்திவருகிறோம்.மற்றும்கலை,விளையாட்டுக்களையும் ஊக்குவித்து வருகிறோம்.

முக்கியமாக மகாஜன அன்னையின் வளர்ச்சியில் எமது அமைப்பு அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. தொடர்ந்து பல வருடங்களாக கல்லூரியில் இருந்து பத்து தேர்ச்சி பெற்ற வசதி குறைந்த மாணவர்களுக்கு கனடாவில் உள்ள மகாஜனன்களின் உதவியுடன் புலமைப்பரிசில்களை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டில் இருந்து போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்க உள்ளோம். இத்துடன் விளையாட்டுத் துறைக்கான தேவைகளுக்கும் உதவுகின்றோம்.

இன்றைய கணனி உலகத்துடன் எமது கல்லூரியும் சேர்ந்து இயங்குவதற்கு ஜெயரத்தினம் மண்டபத்தில் ஒரு பகுதியை இருபத்தெட்டு இலட்சம் ரூபா செலவில் கணனிக் கூடமாக மாற்றி அதன் மூலமாக மாணவர்களை பயிற்றுவிக்கிறோம். தொடர்ந்து கனடாவில் இருந்தே ONLINE மூலமாக கல்லூரியில் வகுப்புக்களை நடத்த உள்ளோம்

மகாஜனாவின் பன் முகத்திறமையை வளர்த்த மகாஜனத் தலைவர் தெ.து. ஜெயரத்தினம் பணிகளை நினைவு கூருவோமபாக !

**வெல்லுக மகாஜனத் தலைவர்**
**வெல்லுக மகாஜன மாதா !**

**க.ஜெயேந்திரன்**
**தலைவர்**

# மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்
# Association des Anciens Eleves du College Mahajana - France

N° d'ordre 91/4241

**PATRON:**
Principal
Mahajana College
Tellippalai
e-mail:
jayamahajana2010@gmail.com

**PRESIDENT:**
Mr S.Hariharan
e-mail:
hari@ashwi.fr

**VICE PRESIDENTS:**
Mr U.Pararajasegaran
e-mail:
thilaparara@hotmail.fr
Mr S.Naguleswaran
e-mail:
nagulaes1956@gmail.fr

**SECRETAIRES:**
Mme Karunaivel Padmayokini
e-mail:
k.nagalingam@wanadoo.fr
Mr N. Varatharajah
e-mail:
varatharajah.n@wanadoo.fr

**TRESORIER:**
Mr S.Sutharsan
e-mail:
jerusan62@hotmail.fr

**MEMBRES DU COMITE:**
Mr S.Radhakrishnan
e-mail: kurynchi@neuf.fr
Mr P. Nanthakumar
e-mail: dxnithers@live.fr
Mr S. Nanthakumar
e-mail: kannan1@hotmail.fr
Mr P.Vasuhan
e-mail: vpvasuhan@gmail.com
Mme Jeyakumar Leenaravi
e-mail:majkr@hotmail.com
Mme Thuraippah Leela
Me S.Thusyanthan
Mr S.Ithayamoorthy

*09.12.2012*

## 'மாண்புறு மகனாம் மகாஜனசிற்பி ஜெயரத்தினம் பணி நினைவோம்"

உலகம் இயந்திரத்தோடு போட்டி போட்டுக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. இயந்திர உலகில் வாசிப்பதற்கு நேர அவகாசம் இல்லை. இதனால் சமூகத்தில் வாசிப்புப்பழக்கம் அருகிக்கொண்டே செல்கிறது. அதற்காக நூல்கள் வெளியிடாமல் இருக்கவும் முடியாது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். மனிதன் பூரணத்துவத்தை எட்ட நூல்களும் வாசிப்பும் அவசியம். அந்த வகையில் நூல் வெளிவருவதையும், அது எமது சகோதர சங்கத்தால் வெளியிடப்படுவதையும், அதிலும் எங்கள் மகாஜனசிற்பி தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நூற்றாண்டு விழா மலராக வெளிவருவதையுமிட்டு நாம் மிகவும் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

எமது ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களது நினைவாக, அவரது 75வது நினைவு தினத்தில் **பவளமல்லி** என்ற மலரினை எமது பாரிஸ் சங்கம் வெளியிட்டிருந்தது. பாவலர் நூற்றாண்டு மலராக 1972 ல் மகாஜனக் கல்லூரியில் இருந்து ஓர் மலர் வெளிவந்தது. அந்த மலரின் ஆசிரியராக இருந்த திரு ஆ.சிவநேசச்செல்வன் அவர்கள், தாங்கள் வெளியிடும் இந்த மலருக்கும் ஆசிரியராக இருப்பது சிறப்பு. பாவலர் உருவாக்கிய பள்ளியை, இன்று இலங்கைத் தீவின் முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாக உருவாக்கிய பெருமை அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களையே சாரும். தன்னலம் கருதா நேர்மையும், ஆளுமைத் திறனும் மிக்க அதிபர் ஜெயரத்தினம் அவர்களை நினைவு கூருதல் எமது கடமை.

பல்வேறு நெருக்கடிகள், சிரமங்களுக்கு மத்தியிலும் தாங்கள் எடுக்கும் இம் முயற்சியை நாங்கள் வரவேற்கிறோம். தங்கள் சங்க நிர்வாகிகளுக்கும், மலர்க்குழுவிற்கும் எங்கள் ஆதரவும் நன்றியும் என்றென்றும்.

வெல்லுக மாஜன மாதா!

**தலைவர்**

**S. ஹரிகரன்**

*SIEGE*: A.A.E.C.M - P, 3 SQUARE JODELET, 93420 VILLEPINTE, FRANCE

# மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – ஜேர்மனி

## என்றும் நினைவில் நிற்பவர்

எங்கள் கல்லூரியின் சிற்பி என பாசமுடனும் பெருமையுடனும் விளிக்கப்பட்டு என்றும் நினைவில் நிலைகொள்ளப்படுபவரான அமரர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களின் அர்ப்பணிப்பை வெளிக் கொணரும் இன்னொரு கடமையாக நூற்றாண்டு மலரொன்றினை எங்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையினர் வெளியிடுவதை அறிந்து மகிழ்வுடன் அவர்களை வாழ்த்திப் பாராட்டுவதோடு அம்மலருக்கு வாழ்த்தினை வழங்குவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

அம்மகிழ்ச்சி முகிழ்வின் வெளிப்பாடாக, எங்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஜேர்மன் கிளையினராகிய நாங்கள், எங்கள் உணர்வினை இங்கே பதிவு செய்வதை ஒரு பேறாக கருதிப் பெருமையடைகின்றோம்.

"சிற்பி"என்று வியந்துரைக்கும் அடைமொழி, கல்வி நிறுவனங்களின் எல்லா அதிபர்களுக்கும் கிடைப்பதல்ல, அது அரிதானதொன்று, அது ஒரு விருதுக்கு சமமானது. ஆனால், தெல்லிப்பழை என்ற வாழ்நிலத்தின் பெயரோடும் தந்தையின் பெயரோடும் அமரர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களுக்கு "சிற்பி" என்ற பெயரும் இணைந்திருப்பது ஒரு சாதரண விளிப்பல்ல, அது விருது.

தெல்லிப்பழைக் கிராமத்தில் அம்பனைக் குறிச்சியில், மருதநில எதிர்ப்புறத்தில் வடலிகள் நிறைந்த சிறு நிலப்பரப்பு ஒன்றில் தந்தையாரால் மகாஜனா ஆங்கில உயர் பாடசாலை எனப் பெயர் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு கல்வி நிறுவனத்தை காலப்போக்கில் முழு இலங்கையின் கல்வித்தளமே வியந்து பார்க்க வைத்து மகாஜனக் கல்லூரி எனப் பெயர் கொண்டு நிமிர்ந்து நிற்பதற்கு அதிபர் அவர்களின் தணியாத தாகமாகிய கல்விச்சமுக அர்ப்பணிப்பே கரணமாகும்.

நீர் உயர வரப்பு உயரும், வரப்பு உயர நெல்லுயரும், நெல்லுயர பசி போய் மன்னனின் கொடி உயரும் என்பது போல், கல்வி உயர மாணவர்களின் தேடல் நோக்கிய சிந்தனை உயரும், சிந்தனை உயர்ந்தால் சமுகம் உயரும். அதனை எங்கள் கல்லூரி நிகழ்த்திக் காட்டியது.

கல்வி என்பது ஒரு சமுகத்தை நகர்த்துகின்ற நெம்புக் கோல். ஒவ்வொரு சமகாலங்களும் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன. ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்கின்ற சிந்தனை அலகுகளே பல்துறை வித்தகர்களைப் பிரசவிக்கின்றது. அது சாத்தியமானது. எங்கள் கல்லூரியில் அது இன்னமும் தொடர்கின்றது. பல்துறைசார் ஆற்றலாளர்களை மட்டுமல்ல விளையாட்டுத்துறை எனத் தொடங்கி சமுகத்தை வடிவமைக்கின்ற கலை இலக்கியப் படைப்பாளிகள் எனும் புரட்சிகர சிந்தனையாளர்களை எங்கள் கல்லூரி உருவாக்கி வருகின்றது என்பது நாம் இறுமாந்து நோக்குபவையாகும்.

அதிபர் பொறுப்பு என்பதோ, தலைமைப் பொறுப்பு என்பதோ"பொறுப்பு" என்ற கட்டமைப்புக்குள் மட்டுமே அடங்குபவை அல்ல. அனைவரினதும் ஆற்றல்களையும் தனக்குள் குவித்து வைத்திருக்கும் பன்முக ஆற்றல் மையம் அது. ஒரு சமுகத்தை சிந்தனை பெருவெளிச்சத்திற்குள் இட்டுச் செல்லும் மிகப்பெரும் பொறுப்பை உணர்ந்த சிற்பி அவர்கள் ஆற்றல்மிகு ஆசிரியர்களை தேடித்தேடி உள்வாங்கினார்.

எவரால் எது முடியும் என்பதை உணர்ந்து அவரவருக்கு இட்ட ஆணையை அவரவரின் சமுகப் பணியென உணர்த்தியமையால்தான் நாடெங்கினுமிருந்து மாணவர்கள் எங்கள் கல்லூரியில் கல்வி கற்பதற்காகத் தேடி வரத் தொடங்கினர். மாணவர் தொகை பெருகப் பெருக நிலம் அகன்றது கட்டடிடங்கள் நிமிர்ந்தன.

ஒரு சமுகத்தின் நீட்சியாய் ஒரு கிராமத்தில் ஒரு பல்கலைக்கழக நிமிர்தலுடன், "உனை நீ அறி"என்ற கொடி கொண்டு கல்விப் பசி போக்கி சமுகத்தை மேம்பாடடையச் செய்த மன்னன் கோலோச்சிய மாணவர்களின் அரண்மனையாய் கம்பீரக் காட்சி தருகின்ற எங்கள் கல்லூரியின் சிற்பியை மறந்தால்தானே அவரை நினைக்க முடியும். எங்கள் கல்லூரி எங்களுடன்தான், எங்கள் சிற்பியும் எங்களுடன்தான் என்றுமிருப்பார். பணிந்து வணங்குகின்றோம் எங்கள் சிற்பியை, அவர் அர்ப்பணிப்பின் நினைவு நெஞ்சில் நெகிழ.

***தி. புஸ்பராஜா( தலைவர் )*** ***திருமதி. புஸ்பராணி ( செயலாளர் )***

# Message of Felicitation from Mahajana College Old Students New Zealand.

It is with immense pleasure, honour and privilege that I offer my sincere greetings to the Mahajana College Old Students' association of Canada.of the occasion of the centennial birth celebration of Late Mr. T.T.Jayaratnam, our former principal of Mahajana College Tellippalai.

Mr. T.T.Jayaratnam was not only a distinguished dignitary of yester years, but also a great architect of will and power, who shaped and moulded our college to the everlasting glory it enshrines even now. The devotion and dedication of service he displayed during his tenure of office for the wellbeing of our college is still reverberating in the heart and minds of every student of the past and the present.

I am therefore so delighted to convey this message of congratulations to the OSA Canada for their timely effort and valuable contribution in portraying such tributes in a book form, and wish them every success in their great endeavor.

***Congratulations and Best wishes,***
***Dr R.K.Velalagan***
***On behalf of Mahajana College Old Students,***
***New Zealand***

# MAHAJANANS OF VICTORIA (AUSTRALIA)
# விக்ரோறிய மகாஜன மாணவர் (அவுஸ்திரேலியா)

**Patrons**
Mrs R Ponnampalam
Dr S Kanesalingam
Mr P Rajendran
Mrs R Vinayagalingam

**President**
Mr S Kathirkhanthan

**Vice President**
Mr T Alagaratnam

**Secretary**
Mrs A Puvanenthiran

**Assistant Secretary**
Mrs C Naguleswaran

**Treasurer**
Mr T Sriskantharajah

**Committee Members**
Dr A Thevathasan
Mr K Rameswaralingam
Mr C Ranjan
Mrs L Kanthamoorthy
Mr ST Sampanthar

**Sports Secretary**
Mr S Mahalingam

**Co-Opt Members**
Dr N Mahalingam
Mrs Kamala Shatheshkuma
Mr Raja-Ravinthiranathan
Mr A Yogaparan
**Coordinator**
Mr S Vijeyakumar
**International Coordinator**
Mrs G Loganathan

## MESSAGE FROM THE PRESIDENT OF MAHAJANANS OF VICTORIA (AUSTRALIA)

It brings an immense amount of elation and pride to be given the opportunity by Mahajana College Old Students Association, Canada to deliver this message for the 100TH YEAR CELEBRATION for our late Principal Mr. T. T. JEYARATNAM.

Mr. T. T. Jeyaratnam who is the son of the founder late pavalar T. A. Thuraiappapillai, continued his farthers' vision and steered the school for 25 years, from 1945 to 1970. During this period Mahajana College went through magnificient development in education and extracurricular activities. With his own initiative, funds were raised, new classrooms were built, highly qualified teachers were brought from overseas and higher standard of education level was achieved. The students of Mahajana Martha achieved so many awards and positioned themselves for their higher education and career. As a result today we have children of Mahajana Matha across the Globe producing achievements.

Our principal always appeared in white attire. He was a man of discipline and punctuality. We are proud and it is our responsibility to honour his dedication and his service to the school and the community.

We, Mahajanans of Victoria (Australia) join with pride in celebrating the 100th year celebration for our Principal Mr. T. T. Jeyaratnam.

We wish Mahajana College Old Students Association, Canada for their success on this celebration and their continued growth.

I like to take this opportunity to thank Mahajana College Old Students Association, Canada and their families, fellow Mahajanans, friends and volunteres for their valuable contribution for the growth and support for our school.

'Mahajana Needooli Vaazha'

**Sabaratnam Kathirkhanthan**
**President**
**Mahajanans of Victoria (Australia)**

**Address:** 383 Balwyn Road, Balwyn North, Vic 3104 AUSTRALIA; **Email:** skhanth@rockwellcollins.com

**Contact Numbers:** President - (03) 9857 9203; Secretary - (03) 9846 2217; Treasurer - (03) 9802 8281

**MAHAJANA COLLEGE OSA (SYDNEY &ACT) AUSTRALIA**

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (சிட்னி & கம்பர) அவுஸ்திரேலியா

*Mahajana College – Jellippalai – Srilanka Since 1910* ABN: 73473845039

78 THE CRESCENT HOMEBUSH WEST NSW 2140 AUSTRALIA

ஜனவரி 01 2013

திரு. க ஜெயந்திரன்,
தலைவர்,
யா/மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
டொரன்டோ, கனடா

## வாழ்த்துச் செய்தி

எம்மையெல்லாம் நன்மக்களாக்கியது மட்டும்லாமல், பல சாதனைச் சிறப்புக்களை படைத்த எமது மகாஜனக் கல்லூரியின் சிற்பிக்கு நூற்றாண்டு விழா எடுப்பதையும் எமது சிட்னிக் கிளை சார்பில் பாராட்டுகின்றேன். மகாஜனாக் கல்லூரியின் சிற்பி, அமரர் தெ. து ஜெயரட்ணம் அவர்களது நூற்றாண்டு நினைவு மலர் வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இந்த மலர் வெளியீடு கனடாவிலுள்ள பழைய மாணவர்கள் முன்னெடுக்கப்பட்டு நடைபெறுவது இன்னுமொரு சிறப்பு.

அண்மைக்காலங்களில் மகாஜனக் கல்லூரியில் நடந்து வரும் அபிவிருத்திகளைக் கண்டு பெருமைப்படுகின்றேன். மகாஜனாவிற்கு இனிதொரு பொற்காலம் மீண்டும் பிறக்கும் என்ற நம்பிக்கை எமக்கெல்லாம் ஏற்படுகின்றது. இத்தருணத்தில் மகாஜனக் கல்லூரியின் அபிவிருத்தியில் எமது பழைய மாணவர் சங்கக் கிளை தொடர்ந்தும் பங்களிப்போம் என்று உறுதி கூறி, அமரர் தெ. து ஜெயரட்ணம் அவர்களது நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

இப்படிக்கு

கலாநிதி. த. பாலன்
தலைவர்,
யா/மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - சிட்னிக் கிளை

*SECRETARY*
*Dr. Bala.Vigneswaran*
*0419 361 273 02*

*PRESIDENT*
*Dr. Balan*
*9746 3850*

*TREASURER:*
*Mr. A Logathassan*
*0421 853 270*

*JOINT SECRETARY*
*Mr. Murali Chitthampalam*

*VICE PRESIDENT*
*Prof. A Kantharajah - Mr. K G Bascaran*

*JOINT TREASURER*
*Mr. S Karunalayan*

# மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம்

## THE MAHAJANA COLLEGE FOUNDATION FOR EDUCATIONAL DEVELOPMENT

**A Company Incorporated under the Companies Act of No 17 of 1982**
**Mailing Address: 19 -1/6 Station Road, Colombo-06, Sri Lanka Telephone: 011 2599796**

December 10, 2012

It gives us great pleasure in sending this message to the Tellippalai Old Student Association of Canada on the occasion of publishing the souvenir in commemoration of the one hundredth year of birth of late T.T Jeyaratnam, architect of Mahajana College who has immensely contributed for the development of Tellippalai Mahajana College.

Late T.T Jeyaratnam had been a tower of strength to the students and teachers during his engagement with the College. He inspired everyone who had been associated with Mahajana College with his vision, discipline and commitment towards all activities of the College. He still lives in the heart of all those happened to associate with him. He was one of the outstanding Principals of the Jaffna Peninsula.

We congratulate the Mahajana College Old Student Association of Canada for celebrating the 100th year of Late T.T.Jeyaratnam and take this opportunity to wish every success for the occasion when all Mahajanans gather in Canada at a dinner on January 6, 2013.

S.Jeyavarman

Director/coordinator

The Mahajana College Foundation

Colombo

Sri Lanka

**MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION – CANADA**
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
(Registered as a non profit organization in Canada, No: 001100556)

## மகாஜனன் மலர் 2013

*மகாஜனாவின் தலைவர் தெ.து.ஜெயரத்தினம் அதிபர் அவர்களின் பிறந்த நூற்றாண்டு நிறைவை நினைவு கொள்ளும் இந்த நாள் எமது வாழ்நாளில் மறக்கமுடியாத ஒன்று.*

*மகாஜனாவின் தலைவர் தெ.து.ஜெயரத்தினம் அதிபர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நடத்த வேண்டும், அதை கோலாகலமாக கொண்டாட வேண்டும் என எமது அதிபர் திரு.பொ.கனகசபாபதி அவர்கள் கடந்த பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத்தை தெரிவுசெய்ய முன்பே தலைவர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நூற்றாண்டு அக்டோபர் 13, 2012 இல் ஆரம்பமாகிறது. எனவே வரும் புதிய நிர்வாகம் அதை மனதில் கொண்டு செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். அதிபரின் கோரிக்கைக்கு இணங்க தலைவர் திரு.க.ஜெயேந்திரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் என்னை நூற்றாண்டு விழா இரவு விருந்தின் ஒருங்கிணைப்பாளராக நியமித்தனர்.*

*இன்று தலைவர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நூற்றாண்டு விழா இரவு விருந்து கோலாகலமாக நடைபெறுகிறது. இவ்விழாவில் மகாஜனாவின் தலைவர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நூறாவது வருடத்தை நினைவு கொள்ளும் வகையில் மகாஜனன் மலர் வெளிவருகிறது. இம் மலரினை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா சார்பில் கலாசூரி. ஆ. சிவநேசச்செல்வன் அவர்கள் மலர் ஆசிரியராகவிருந்து உருவாக்கியுள்ளார்.*

*மகாஜனாவின் தலைவர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நூற்றாண்டு விழாவையும் மற்றும் மகாஜனன் மலரின் ஒருங்கமைப்பாளராகச் செயல்பட எனக்கு கிடைத்த வாய்ப்புக்கு என்றும் கடவுளுக்கு நன்றியுடையவனாவேன்.*

*நன்றி*

சிவ கௌரிபாலன்
பொருளாளர்,
ஒருங்கமைப்பாளர்
(விழா & மலர்)

# கல்லூரியின் உயர்வையே கனவாக்கிக்கொண்ட "கல்விக் களஞ்சியமாக" எழுச்சி பெற்ற " மகானுபாவர் " அமரர்.தெ.து.ஜெயரத்தினம்

" இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வம் "

## "இன்றைய தினம் மகாஜனன்களுக்கு ஒரு திருவிளக்குத் திருநாள்"

கலாசூரி.ஆ.சிவநேசச்செல்வன்

**"இதழோரத்தில் மலரும் மெல்லிய புன்சிரிப்பு, நடையிலே கெம்பீரம், வெளிவரும் ஒவ்வொரு வாசகத்திலும் இழையோடும் ஆழ்ந்த கருத்துக்கள், ஆங்கிலத்திலும் சரி தமிழிலும் சரி கருத்துக்கள் ஆழமாகவும் அகலமாகவும் அள்ளிவீசி வெளிப்படுத்தும் ஆற்றல்."**

இவையெல்லாம் அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் திருக்கல்யாண குணங்கள்.

ஆங்கில உடையில் அதிபர் அவர்கள் வரும்பொது அவரது கம்பீரத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்து மனம் அசந்த நாட்கள் பல. தமிழ் உடையில் வேட்டி சால்வை அணிந்து தமிழ்மணம் கமழ அதிபர் அவர்கள் பேசும்போது ஆற்றலோடு பேசும் உணர்வு, தொனி, ஆளுமை நிறைந்தது.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் ஆனந்த நடராஜர் களிநடம் செய்யும் அருங்கலை நிதியமாக மகாஜனாக் கல்லூரியை எழுச்சி பெற வைத்தமை தந்தைவழி பெற்ற ஆழமான தீர்க்க தரிசனமான சிந்தனைகளே என்பது எனது மனதில் எப்பொழுதும் நிழலாடுகின்றது.

கல்லூரி வளாகத்ததிலுள் அவர் காலை மாலை உலாவரும் ஒவ்வொரு பொழுதிலும் அவரது மூச்சு எப்பொழுதும் கல்லூரியின் எழுச்சியாகவே இருந்தது ஆங்கில வசனங்களை எப்பொழுதும் அவர் அட்சர சுத்தமாக பேசும்போது அவர் வெளிப் படுத்தும் கருத்துகளுக்கு அப்பால் மொழியின் இசை, தொனி, ஓசை எல்லாம் எம்மை நல்ல ஆங்கிலத்தைப் பேச வைத்தது.

இலக்கண சுத்தமாக ஆங்கில வசனத்தை எழுதவும் பேசவும் வேண்டும் என்பதை பழக்கியவர் அதிபர் தெ.து.ஜெ. தான். சிறிய வசனங்கள், பேச வேண்டும் அடிக்கடி கையெழுத்துச் சரியாக இருக்கவேண்டும் என்பதற்காக தினமும் ஒரு பக்கத்தை எழுதி வகுப்பு

ஆரம்பமாக முன்னர் அவரிடம் காட்டவேண்டும். இது ஒரு தினசரி நிகழ்வு. இது ஒரு நாளாந்தப் பயிற்சி.

ஏழாம் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் செல்லும் வரை அவரிடம் ஆங்கிலம் படித்தமை நெஞ்சில் நிறைந்துள்ளது. எப்பொழுதும் அவர் **"கையெழுத்துச் சரியாக இருந்தால்தான் தலைஎழுத்துச் சரியாக இருக்கும்"** என்பதைக் கூறுவார்.

ஆங்கில இலக்கணத்தை இயல்பாகக் கற்பித்ததுபோல அதிபர் வகுப்பில் ஆங்கிலக் கவிதைகளையும் சேக்ஸ்பியரின் நாடகங்களையும் உணர்வு வெளிப்பாட்டோடும், தொனியோடும் உச்சரிப்போடும் கற்பித்த நாட்கள் நெஞ்சிலே பசுமரத்து ஆணிபோல பதிந்துள்ளது.

கல்லூரியின் மகுடவாசகமாக **"உனை நீ அறி"** என்ற மொழித் தொடரை கொண்டு கல்லூரி இலச்சினை 1946 ஆண்டு வடிவமைக்கப்பட்டது. உனை நீ அறி யென்றுரையை நினைவுறு தொண்டிற் கண்டு புனை மலராக, கல்லூரியை அதிபர் எழுச்சிபெறவைத்தார்.

**தனது வாழ் நாளில் இலட்சியங்களோடும் உழைப்போடும் வாழ்ந்து உயற்சி பெற்ற ஒரு சந்தோஷப் பறவைதான் அதிபர் தெ.து.ஜெ.**

காலங்கள் வேகமாக ஓடினாலும் அதிபர் வாழ்ந்த காலத்தில் அவர் நிழலில் வாழ்ந்த ஒவ்வொருவரும் அவருடைய நினைவுகளை மீட்டியுள்ளமை மனதிற்கு இதமாக உள்ளது. கல்லூரியின் உயர்வே அவரின் கனவாகவும் இலட்சியமாகவும் இருந்தது.

தெல்லிப்பழை என்ற கிராமத்தின் கல்வி எழுச்சிக்கு வித்திட்ட கரும வீரராகிய பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையின் கனவுக்கு எல்லாம் உயிர் கொடுத்து நாடளாவிய நிலையில் நிமிர்ந்து நிற்கும் தன்னிகரற்ற கல்விக் கோட்டமாக மகாஜனாவை மாற்றித் தந்தையின் இலட்சியங்களுக்கு உயிர் கொடுத்த ஒரு மகானுபாவராகத் தனது வாழ்வில் இறுதி மூச்சுவரை சிந்தித்துச் செயலாற்றினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து தமிழ் பேராசிரியராக விளங்கிய தெ.அ.சிதம்பரநாதன் செட்டியார், மகாஜனாக் கல்லூரியை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போல எழுச்சிபெற வேண்டும் என வாழ்த்தியமை நினைவுக்கு வருகின்றது. நிறுவியவர் நினைவுநாள் பரிசளிப்பு விழாவில் பங்கு கொண்டு அவர் தமது உரையிலே " மலர் மலிந்து மறை உரைத்து மறுவிலாத சுடர் விரித்து தவம் பொலிந்த" மகாஜனா பாவலர் துரையப்பாபிள்ளையின் தீர்க்கமான தியானமதில் தேறிவந்தது, என விதந்து நாவலர் வழிப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக, இக்கல்லூரி எழுச்சி பெறும் எனக் கட்டியம் கூறினார்.

பாவலர் துரையப்பாபிள்ளையின் வாழ்க்கையையும் பணிகளையும் பல்வேறு கோணங்களிலேயே எழுபதுகளில் விரிவாக பல்வேறு மட்டங்களில் ஆய்வு செய்து கல்லூரித்தாபகராகவும் கல்விக்கலைஞனாகவும் காணும் வாய்ப்பு எமக்கு ஏற்பட்டது. இலக்கிய உலகில் ஒரு பிதாமகனையே அறிமுகம் செய்யும் சூழ்நிலையும் அப்பொழுது தோற்றியது.

கல்லூரிப்படிப்பை நிறைவுசெய்து பல்கலைக்கழகம் சென்று பேராதனையிலே பேராசிரியர்களைக் காணுந்தோறும் பேசும் தோறும் எனது மனக்கண்ணில் அதிபர் தெ.து.ஜெயின் அசைவுகளும் ஆளுமையும்தான் நிழலாடும்.

"கல்லாமலே பாதி குலவித்தை" என்ற பாணியில் அதிபர் தெ.து.ஜெ அதிபராக, நிர்வாகியாயுமட்டுமல்ல தீர்க்கதரிசனமான கலாரசிகராகக் கல்லூரி அதிபருக்கு அப்பால் செயற்பட்டமைதான் மகாஜனாவை எழுச்சி பெற வைத்தது.

கல்லூரியின் நூற்றாண்டு விழாக் காலத்தில் மகாஜனாக் கல்லூரி ஏறத்தாழ நான்கு தசாப்த காலத்தில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியும் வரலாறும் தெ.து.ஜெயின் பல்வேறு பரிமாணமங்களையும் இனங்காண வைத்துள்ளது.

பிறந்து மொழி பயின்ற காலம் முதலாக மகாஜனாக் கல்லூரியின் நிழலிலே அருகாமையில் வாழ்ந்த காலங்கள் நெஞ்சில் பசுமையான நினைவுகளைக் கிளர வைக்கின்றன. மகாஜனாக் கல்லூரி என்ற நிறுவனம் சிறிய வளவாக இருந்து வளாகமாக மாறிய வரலாற்றிலே ஒவ்வொரு நிகழ்வையும் நேரில் கண்டு பங்குபற்றும் பெருவாய்ப்பு எனக்குக் கிட்டியது. **கல்லூரியின் வரலாற்றை ஒருவகையிலே தெ.து.ஜெ வரலாறு என்று கூறினால் அது தவறாகாது.**

மகாஜனாக் கல்லூரியின் மூலையில்தான் எனது சிறிய வீடு. வீட்டின் முன்னால் அம்பனை வீதியின் இருமருங்கிலும் பருத்து வளர்ந்த நிழல் வாகைமரங்கள். முன்னால் இயற்கை அழகு செறிந்த மிகப்பெரிய வயல்வெளி. வாய்க்காலைக் கடந்துதான் வயல்வெளிக்குச் செல்லவேண்டும்.

மகாஜனா உயர்நிலைப்பள்ளி ஒரு பனங்கூடல்,

மாஞ்சோலை நிறைந்த ஒரு வளவில்தான் அமைந்திருந்தது. அப்போது கல்லூரிக்கு மதில் கட்டப்படவில்லை. ஓலைவேலி. முன்பக்கத்திலே வானோங்கி வளர்ந்த பனைமரங்கள்

வளவில் **சரஸ்வதி வித்தியாசாலை** என்ற ஆரம்ப பாடசாலை இருந்தது. எனது வீட்டின் பின்னால் இரண்டு பெரிய கொட்டில்கள். இதுதான் பாடசாலை. இதற்கு வலது புறமாகத்தான் மகாஜனா உயர்நிலைப்பள்ளி ஒரு T வடிவிலான கட்டிடத்திலும் இன்னும் இரு தனியான கட்டிடத்திலும் அமைந்திருந்தது. பெரிய மண்டபமாக அமைந்திருந்த T வடிவ கட்டிடத்தின் இடதுபுறத்தில் உள்ள கட்டிடம் வாசிகசாலையாக இருந்தது. அங்கு பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளையின் ஒரு பெரியபடம் இருந்தது. அந்தப்படம் எப்பொழுதும் எனக்கு சேர் பொன் இராமநாதனையே நினைவூட்டியது

பாடசாலை வளவின் பின்புறமாக மாஞ்சோலையும் அந்த வளவில் ஒரு சிறிய விளையாட்டு மைதானமும் இருந்தது. இதன்பின்னால் பெரிய தென்னஞ்சோலை நிறைந்த வளவுகள் இருந்தன. ஒரு வகையில் மகாஜனா உயர்நிலைப்பள்ளி ஒரு வெள்ளக்காணியில்தான் அமைந்திருந்தது.

இந்த அளவிலே ஆரம்பத்தில் இருந்த ஒரு சிறிய பாடசாலை பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பயிலும் ஒரு மிகப்பெரிய கல்வி நிறுவனமாக வளர்வதற்குப் பாவலரின் புதல்வராக அமரர் தெ.து.ஜெயரத்தினம் அவர்கள் தன்னடக்கமாக ஆற்றிய பணிகளின் காரணமாகத்தான் அது மிகப்பெரிய கல்விக் கோட்டமாக எழுச்சிபெற்றது.

பாவலர் துரையப்பாபிள்ளையின் மறைவைத் தொடர்ந்து அவரின் உறவினரான கா. சின்னப்பா அவர்கள் தலைமையாசிரியராக இருந்து வளர்த்த பாடசாலையிலேதான் நான் தனது ஆரம்ப கல்வியினை தந்தையின் வழிகாட்டலில் பெற்றார். தந்தையார் மறைந்த பின்னர் 1945ல்தான் தெ.து.ஜெயரத்தினம் அதிபராக பதவி ஏற்றார்.

தந்தையாரின் அரவணைப்பில் ஆரம்பக் கல்வியையும், பின்னர் மகாஜனா உயர்நிலைப்பாடசாலையில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் லண்டன் மற்றிக்குலேசன் தேர்வையும் (1932), பின்னர், யாழ்ப்பாணக்கல்லூரியில், லண்டன் இடைநிலை மற்றிக்குலேசன் தேர்வுகளிலும் சித்திபெற்று 1932இல் ஆசிரியப்பணியில் சிறப்பு அதிபராகி பாடசாலையைப் பொறுப்பேற்றார்.

இதனைத்தொடர்ந்து 1936இல் கொழும்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பயிற்சி பெற்ற ஆசிரியரானார். அங்கு எஸ்.எப்.டி. சில்வா என்ற கல்வியாளரின் அபிமானத்திற்குரிய நல்மாணவரானார். 1942 இல் லண்டன் பி.ஏ பரீட்சையில் சித்தி பெற்றார்.

கல்லூரி அதிபராக இளம் வயதிலே பொறுப்பேற்ற தெ.து.ஜெ சகல துறைகளிலும் வளர்ச்சி ஏற்படுவதற்குரிய காரியங்களில் சுயசிந்தனையுடன் இறங்கினார். 1935ஆம் ஆண்டிலே கல்லூரியின் வெள்ளிவிழாவை முன்னின்று நடாத்தி ஆசிரியப்பணியோடு நிர்வாகப்பணியையும்சகல துறையிலும் திறம்படச் செய்யும் ஒருவராக மாறினார். தனித்துவமும் **அவரது தலைமைத்துவமுமே தந்தையின் இலட்சியங்களுக்கு வடிவம் கொடுக்கும் ஒரு அதிபரை உருவாக்கியது.**

எனது நினைவுக்கு எட்டியவரை நாற்பதுகளில் அதிபர் வீட்டில் இருந்து பாடசாலைக்கு நிமிர்ந்த நடையுடனும் நேர்கொண்ட பார்வையுடனும் நடந்து வந்த காட்சி தெரிகிறது. அந்தக் காலத்தில் பாடசாலை திறப்பு எங்கள் வீட்டிலேயே வைக்கப்பட்டது. நான் சிறுவனாக இருந்தபோது தூரத்தில் அதிபர் வருவதை அவதானிக்கும் பாட்டனார் திறப்பை எடுத்து அதிபரிடம் கொடுக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருந்தார்.

திறப்பை கொடுத்து பாடசாலைக்குள் சென்ற பின்னர் உள்ளே சென்று அவருடன் உரையாடியமை நினைவில் நிழலாக தெரிகின்றது. எனது பாட்டனார் வியாபாரியார் சின்னக்குட்டி, பாவலர் துரையப்பாபிள்ளையின் மீதும், அதிபர் ஜெயரத்தினம் மீதும் நிரம்பிய விசுவாசம் கொண்டவர்.

பாவலர் குடும்பம் பற்றியும் அதிபர் ஜெயரத்தினத்தின் தாய் தையல்நாயகம் அம்மையார் பற்றியும் நிறைய கதைகளை எனக்கு கூறியுள்ளார். இந்தவிதமான குடும்ப நட்பின் காரணமாகவே கல்லூரி விரிவாக்கத்தின் போது பின் பக்கத்திலிருந்த தனது நான்கு பரப்பு காணியை அந்தக் காலத்தில் அன்பளிப்பாக வழங்கினார். அங்குதான் பாலர் வகுப்புக்கான கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டது.

எனது தந்தையார் பண்டிதர் நா.ஆறுமுகம் அதிபரின் முகாமைத்து வத்திலிருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகவிருந்தார். அவர் குருதேவர் சிவயோகசுவாமியின் மீது நிரம்பிய பற்றுக் கொண்டவர். யாழ் இந்துக்கல்லூரி அருகாமையில் இருந்த சிவதொண்டன் நிலையத்திற்கு குருபூசை தினங்களுக்குச் செல்வது வழக்கம்.

அங்கு ஒருமுறை ஜெயரத்தினம் அவர்களும் வந்திருந்தார். அப்பொழுது யாழ்ப்பாணத்துச் சைவப்பாடசாலைகளில் சிவபுராணம் ஒவ்வொரு தினமும் ஓதவேண்டும் என யோகர் சுவாமிகள் வேண்டுகோள் விடுத்திருந்தார். அப்பொழுது அங்கு வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் அம்பிகைபாகனும் வந்திருந்தார். இவர்கள் இருவரும் சைவப் பாடசாலைகளில் சிவபுராணம் ஓதவேண்டும் என்பதை சகல பாடசாலைகளிலும் ஒருமுறைமையாக ஏற்படுத்துவதில் முன்னின்று உழைத்தனர்.

மகாஜனாக் கல்லூரி சைவமும் தமிழும் கமமும் ஒரு கல்லூரியாக மிளிர்ந்தமைக்கு மூலவிசை அதிபரும் ஆரம்பத்தில் அவருக்கு அணுக்கத் துணைவராக நின்று பணிபுரிந்த மல்லாகம் செ.சின்னத்துரை ஆசிரியரும்தான்.

கல்லூரியின் உபயமாக திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் திருவிழா ஆண்டுதோறும் செய்வது, மாவிட்டபுரம் கந்தனுக்கு திருவிழா செய்வது, தேவாரபாராயணத்துடன் பாடசாலையை ஆரம்பிப்பது என்ற வரிசையில் சகல சமய வைபவங்களும் நிறைந்த ஒரு கல்லூரியாகவே மகாஜனா எழுச்சி பெற்றது. மாணவர்களுக்கு சிவதீட்சை செய்கின்ற தருணங்களில் எல்லாம் அதிபர் நேரடியாக கலந்து கொள்வார்.

அதிபர் தெ.து.ஜெ யின் சமய ஈடுபாடுதான் கல்லூரி வளாகத்திலுள்ளேயே சிவகாமி சமேத ஆனந்த நடராஜருக்கு ஆலயம் அமைக்கும் பணியில் அவரை ஈடுபடுத்தியது. அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறிய பின்னர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் அவரது ஈடுபாடும் பணிகளும் இறுதி மூச்சுவரை தொடர்ந்தது.

அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் மல்லாகம் பண்டிதர் கந்தையாவை அழைத்து மாதந்தோறும் ஞாயிறுதினங்களில் சிவஞானபோத வகுப்புகளை நடாத்தி வந்தார். நான் மல்லாகம் பண்டிதர் வகுப்பில் பயின்ற காலத்தில் இடையிடையே மகாஜனாவில் நடைபெற்ற கந்தையா பண்டிதரின் வகுப்புகளுக்கு சென்றுள்ளேன்.

நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றிய காலகட்டத்தில் துர்க்கை வழிபாடு பற்றிய தரவுகளை நூல்நிலையத்தில் பெற்றுத் தரும்படி ஒரு தருணம் உசாவினர். பின்னர் அவற்றை ஆழமாகப் படித்து அவர் அம்மன் ஆலயத்தில் பேசியதை கேட்டிருக்கின்றேன்.

மருதனாமடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்து கிஸ்தவ பாரம்பரியங்களான ஒப்பீட்டாய்வு பற்றிய பொது ஆய்வுரை மகாநாடொன்றிற்கு அதிபரும் வந்திருந்தார். நான் அவரை அங்கு எதிர்பார்க்கவில்லை. அங்கு பார்வையாளராக முன்னாள் கல்வி அதிகாரி S.V.சோமசேகரம், R.N.சிவப்பிரகாசம், மல்லாகம் ஞானப்பிரகாசம், அதிபர் ச.அம்பிகைபாகன், ஜே.ஜி. அரசரத்தினம் ஆகிய பலர் வருகை தந்திருந்தனர். அங்கு எனது ஆய்வுரையை செவிமடுத்த அதிபர், எனது கல்லூரி மாணவர் இவ்வித ஆய்வில் ஈடுபட்டிருப்பது மிகுந்த மகிழ்சியளிக்கின்றது எனக் கூறிய குறிப்பு இப்பொழுதும் மனதில் இதமாக இருக்கின்றது.

மகாஜனாக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் உதைபந்தாட்டத்தில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தேன். அந்தக் காலத்தில் பாடசாலை அருகில் இருந்த அம்பனை வைரவர் ஆலயத்தில் வழிபாடு செய்து தேங்காய் உடைத்து போட்டிகளுக்கு செல்ல வேண்டும் என்பது நியமம். ஒருமுறை பாடசாலை ஆலயத்தின் வழிபாடு முடிந்த பின்னர் உதைபந்தாட்ட அணி வாகனத்தில் ஏறிவிட்டது. திடீரென அவ்விடம் வந்த அதிபர் வைரவகோவிலுக்குச் செல்லவில்லை என்பதை அறிந்து எல்லோரையும் இறக்கி வழிபாடு செய்து செல்லும்படி பணித்தார்.

எனது உதைபந்தாட்ட ஈடுபாடு காரணமாக படிப்பில் கவனம் குறைந்து சறுக்கிய தருணத்தில் எனது பாட்டனார் சின்னக்குட்டி மரணமடைந்து விட்டார். அந்தத் தருணத்தில் மரண வீட்டிற்கு வந்து அதிபர் என்னை அழைத்து படிப்புப் பற்றி விசாரித்தார். அப்பொழுது நான் கிளறிக்கல் தேர்வில் தேறியது பற்றி கூறி, தொழில் நுட்பக் கல்லூரியிலே சில பாடங்களுக்கு செல்வதாகச் சொன்னேன். அவர் மரணவீடு என்றும் பாராமல் என்னைக் கடுமையாக பேசி நாளை அலுவலகத்திற்கு வருமாறு பணித்தார்.

அவருடைய அழைப்புக்கு இணங்க அன்று சென்றபோது நீர் பல்கலைக் கழகம் சென்று படிக்க வேண்டும், அடுத்தமுறை எடுபடுவீர் என்று கூறி வகுப்பிற்கு செல்லும்படி அன்புக் கட்டளையிட்டார்.

அவருடைய நல்லாசியும் ஆலோசனையும்தான் பல்கலைக்கழகத் தேர்வில் சித்திபெற வைத்தது. நான் அதிபரை அலுவலகத்திற்கு சென்று சந்தித்த போது என்னை வாயார வாழ்த்தினார்.

பின்னர் ஒவ்வொரு முறையும் பல்கலைக்கழக மாணவனாக இருந்து விடுமுறைக்கு வரும் தருணங்களில்

எல்லாம் அவரைச் சந்திக்கத் தவறுவதில்லை. பல்கலைக்கழகப் படிப்பு, இலக்கிய முயற்சிகள்பற்றி எல்லாம் விலாவாரியாகக் கேள்விகள் கேட்பார்.

கல்லூரியில் இலக்கிய தமிழ் மன்றக் கூட்டங்களுக்கு இடையிடையே அதிபர் வருவது வழக்கம். இலக்கிய ஆர்வத்துடன் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் தவறாது அறிந்து ஆலோசனை கூறுவது எமது காலத்தில் அவருடைய வழக்கமாக இருந்தது.

மகாஜனாக் கல்லூரி பாவலர் துரையப்பாபிள்ளை காலம் தொடக்கம் நீண்ட நாடகமரபைக் கொண்டது. சபாஷ் முதலியார், துரோகி யார், தியாகி யார் என்ற நாடகங்களால் நாவாலியூர் செல்லத்துரை தாயாரித்தார் இல்ல-நாடகப் போட்டிகள், ஆசிரியர் கதிரேசபிள்ளையின் நாடகத் தயாரிப்புகள். வெற்றி பெற்ற காலங்களில் எல்லாம் சகல நாடக வெற்றிகளையும் கல்லூரியின் வெற்றியாகவே நினைத்து மகழ்ச்சியடைந்தார்.

த.சண்முகசுந்தரம் அவர்களின் **வாழ்வு பெற்றவல்லி** என்ற நாடகம் மேடை யேற்றப்பட்ட காலத்தில் மாவைக்கந்தனின் வரலாறு புதிய வடிவம் பெற்றுள்ளது என்று அடிக்கடி கூறினார். இதனைச் சண்முகசுந்தரம் ஆசிரியர் எவ்வளவோதரம் கூறி மகிழ்ச்சி யடைந்துள்ளார்.

பாடசாலை நிதி திரட்டலுக்குச் கொழும்பு நாடக மன்றங்களை அழைத்து நாடக விழாக்களை முன்னின்று அதிபர் நடாத்தினார். அதிபர் ஜெயரத்தினம் அதிபராக, நிர்வாகியாக மட்டும் அல்ல சிறந்த கலாரசிகராகவும் விளங்கினார். பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து பேராசிரியர் வித்தியானந்தன் தயாரித்த கண்ணன்போர், இராவணேசன், நொண்டிக்கூத்து என்ற புகழ்வாய்ந்த நாடகங்களை மேடையேற்ற நாம் வந்தபோது கல்லூரி அரங்கில் நடைபெற்ற ஒத்திகைகளின் போது அதிபர் ஜெயரத்தினம் அவர்களும் வந்து பங்கெடுத்தார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன், த. சண்முகசுந்தரம் அவர்களுடன் உரையாடும் தருணங்களில் எல்லாம் அமரர் அதிபர் ஜெயரத்தினம் அவர்களின் நாடக ஆர்வத்தையும் பங்கு பற்றலையும் பற்றி குறிப்பிடத்தவறுவதில்லை. பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டுவிழா ஒழுங்குகளில் முழுமூச்சாக நாம் ஈடுபட்டகாலத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பி, பாவலரின் சகலகுண சம்பன்னன் நாடகத்தைப்பற்றியும் ஜெயரத்தினம் அவர்கள் நாடகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தமையையும் விதந்து உரைத்து, அதிபர் ஜெயரத்தினத்தின் ஆர்வமான செயற்பாடும் அவரது தந்தையார் வழி வந்தது என்பதை அழுத்தியுரைத்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் நான் பணியாற்றிய காலத்தில் அதிபர் தெ.து.ஜெ யை வசதியும் வாய்ப்பும் ஏற்படும் வேளைகளில் சந்தித்து உரையாடுவதுண்டு. நான் மகாஜனாக்கல்லூரியின் பழைய மாணவன் என்பதைத் தெரிந்த அதி.வண. பேராயர் குலேந்திரன், லைமன் குலத்துங்கம் ஆகியோர் பாவலர் துரையப்பாபிள்ளை முதல் ஜெயரத்தினம் வழியாக வாழையடி வாழையாக கல்வி மரபும் கல்லூரி மரபும் மகாஜனாக்கல்லூரியில் செழித்தமையை அவர்கள் விதந்து குறிப்பிடத்தவறுவதில்லை.

**அதிபர் தெ.து.ஜெ எப்பொழுதும் ஒரு மங்களகரமான நிறைகுடமாகவே வாழ்ந்தார்.** துரையப்பாபிள்ளை நூற்றாண்டுவிழா ஒழுங்குகளில் மூழ்கியிருந்த காலத்தில் புகழ்பூத்த அதிபர்களுள் ஒருவரான ஹண்டிப் பேரின்பநாயகம் அவர்களை சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் சந்தித்தேன். அவர் பாவலர் துரையப்பாபிள்ளையின் பாரம்பரியத்தைப் பற்றி "மானங்காத்தல்" என்ற கட்டுரையைத் தந்தார். அவர் துரையப்பாபிள்ளை மரபையும் அவர் புதல்வர் ஜெயரத்தினத்தின் அயராத முயற்களையும் ஆளுமையையும் பற்றி விதந்துரைத்தார்.

மகாஜனாக்கல்லூரி கட்டிட நிதிக்காக யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெற்ற காணிவல், அதன் ஒழுங்குமுறை பற்றியெல்லாம் அப்பொழுது வெளிவந்த ஈழகேசரி பத்திரிகை பத்திபத்தியாக எழுதியதை யெல்லாம் குறிப்பிட்டார். தானும் அதே வகையில் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு காணிவல் செய்ததையும் நினைவூட்டினார். வடஇலங்கை அதிபர்கள் சங்கத்தின் பின்னணியில் ஜெயரத்தினம் அவர்களின் ஆளுமை நிறைவுபெற்ற தொன்றாகவே அமைந்தது.

மகாஜனாக்கல்லூரியின் பொன்விழா 1960 ஆண்டில் பாவலர் துரையப்பாபிள்ளை நினைவு மண்டபத் திறம் போடு ஆரம்பமாகியது. ஆந்தக் காலத்தில் நான் மாணவத் தலைவனாக இருந்தேன். அதிபருடன் அந்தக் கால ஆசிரியர்குழாமும் பழைய மாணவர்களும் விழாவெற்றிக்கும் காணிவல் எழுச்சிக்கும் பின்னணியாக இருந்தனர். பொன்விழாக் காலத்தில்தான் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் கையெழுத்துப் பிரதியாக இருந்த ஆக்கங்கள், **"சிந்தனைச்சோலை"** என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டது. இதனை கல்லூரியின் முகாமையாளராகிய சு.நடேசபிள்ளை வெளியிட்டு வைத்தார்.

இந்தத் தொகுப்பு ஈழத்து இலக்கியத்தின் மூலவிசையாக அமையும் என்று பூடகமாக அவர் குறிப்பட்டார். உண்மையில் அடுத்த பத்து ஆண்டுகளில் பாவலர் துரையப்பாபிள்ளை இலக்கிய ஆளுமையை மட்டுமல்ல அவரின் ஆக்கங்களை எல்லாம் த.சண்முகசுந்தரம், மயிலங்கூடல் பி.நடராஜனுடன் நானும் விரிவான ஆய்வுப்பின்னணியில் ஈழத்து இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக பின்னர் இலக்கிய ஆய்வுகள் தேங்கின. அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் தனது தந்தையார் உதயதாரகை பத்திரிகையின் ஆசிரியராக இருந்தகால முயற்சிகள் பற்றியும் பின்னர் இந்துசாதனப் பத்திரிகையில் ஆசிரியராக இருந்தகால முயற்சிகள் பற்றித் தெளிவாகத் தொகுக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டி வந்தார். இது நிறைவேறாத தொன்றாகவே இருக்கின்றது.

தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் சகோதரராகிய தெ.து.தர்மராஜா, நான் வீரகேசரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக சென்ற காலத்தில் கொழும்பு தமிழ் சங்கத்தின் தலைவராக இருந்தார். இளைப்பாறிய பல்கலைக்கழக பதிவாளராகிய இவர் அதிபர் தெ.து.ஜெ யின் பண்புகளைப் பற்றிப் பெருமையோடு கூறினார். அவர் கிராமத்தில் வாழ்ந்த படி தந்தை பாவலரின் இலட்சியங்களிற்கு எல்லாம் உயிர் கொடுத்தார். அப்படி என்னால் செய்ய முடியவில்லை. இது தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பாவலர் துரையப்பாபிள்ளையின் வழி ஜெயரத்தினம் அளித்த இலட்சியப்பணி என்பது அவரது அருமருந்தன்ன குறிப்பாக அமைந்தது.

அமரர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் செயலாண்மைத் திறனும் சாதனைகளும் வடபிரதேசத்தில் எழுந்த கல்விமரபிலே ஒருகலங்கரை விளக்கமாக அமைகின்றது. உலகெலாம் பரந்து வாழும் அவரின் மாணவர்களும் மகாஜனாக் கல்லூரி என்ற தண்நிழலில் கல்விக்காக ஒதுங்கியவர்களும் கல்விக்களஞ்சியமாக விளங்கிய அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களது நூறாவது பிறந்ததினத்தை தமது வாழ்விற்கு ஒளியேற்றிய தெய்வத்திற்கு அளிக்கும் திருவிளக்குத் திருநாளாக நினைந்து வணங்குவோமாக.

## வெற்றித்திருமகன் ஆனாய் நீயே...
## அஞ்சலி செய்திடுவோம்

**கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை**

இராகம்: இராகமாலிகை
தாளம்: ஆதி

பல்லவி
அஞ்சலி செய்திடுவோம் - நாமே
அமரர் ஐயரத்ன அதிபர் புகழ்பரவி

அனுபல்லவி
நெஞ்சில் உறுதியோடும் நேசம்
பரிவினோடும்
நித்தம் கலைவளர்த்த மெத்தப் பெரியவரை
(அஞ்சலி)

சரணம்
மாசனக் கல்லூரியை மாண்பால்
உயரவைத்தார்
வண்ணக் கலைக் கழகப் பண்ணையென
வளர்த்தார்
தேசம் புகழக் கல்விச் சேவையில் ஊறி
நின்று
தியாகம் பல் புரிந்த செம்மனச் செல்வரை
(அஞ்சலி)

தெல்விப்பழையி லொரு கல்விக் கழக மது
திரு நாடிலங்கைக்கோர் தீபம் திலகமென்றே
வல்லார் புகழும் மாசனக் கல்லூரியினை
வளமார்ந்த கல்விக்கோர் தளமாக்கி
வைத்தவரை
(அஞ்சலி)

தெய்வத் தமிழ் வளர்த்து சைவத்திறம்
பெருக்கி
சீலத் தெளிவுடனே ஞானத்தி லின்ப மெய்தி
உய்யும் நெறிமுறைகள் ஓங்கக் கல்லூரி தந்த
ஒப்பிலா ஐயரத்ன உத்தமரைப் பரவி
(அஞ்சலி)

# ஆசிரியர் குழாத்தின் ஆற்றலையும் தலைமைகளையும் உணர்ந்து வழிப்படுத்தி கல்லூரி வளர்ச்சியை மெருகிட்டதலைவரே அதிபர் தெ. து. ஜெயரத்தினம் !

கல்லூரி வளர்ச்சியே அவரது கனவாகவும் இலட்சியமாகவும் அமைந்தது

**அதிபர் பொ.கனகசபாபதி**

### முதற் சந்திப்பு

நான் மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக கடமை யாற்றச் சேர்ந்ததே எதிர் பார்க்காத ஒன்று. சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் விலங்கியல் ஹோர்ணேர்ஸ் இறுதியாண்டுப் பரீட்சைகாக நான் கடினமாக ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் எனது நண்பன் சிவபாதசுந்தரம் அன்றைய Madras Hindu பத்திரிகையுடன் வந்தான். "எடே தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் விலங்கியல் போதிப்பதற்கு ஆசிரியர் தேவை என இதில் ஒரு விளம்பரம் வந்துள்ளது. விண்ணப்பியேன்" என்றான். நானோ படிப்பு மும்முரத்தில் இருந்தேன். ஆகவே அவனே ஒரு விண்ணபபத்தினை எழுதி என்னிடம் கைஒப்பம் வாங்கி அனுப்பியிருந்தான். சில நாட்களில் அதிபரிடமிருந்து நற்சாட்சிப் பத்திரம் ஒன்று அனுப்பிவைக்குமாறு அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஒறேற்றர் அவர்கள் எனக்கு ஆசிரியப் பணி தருவதாக என்தமையனாரிடம் கூறியிருந்தமையால் நான் அதிபரிடமிருந்து வந்த கடிதத்தினைச் சட்டை செய்யவில்லை. வீசிவிட்டேன். பரீட்சை முடித்து ஊர் வந்து ஸ்கந்தவரோதயா அதிபரைச் சந்தித்த போது தான் ஆசிரியப் பதவி பெறுவது அத்தனை சுலபமில்லை எனத் தெரிந்தது. மகாஜனக் கல்லூரியில் ஒரு வெற்றிடம் உள்ளது என நான் கூறியதும் ஒறேற்றர் அவர்கள் என்னை அவரிடம் அழைத்துச் சென்றார். அன்று தான் அவரை நான் முதன்முதலாகக் கண்டேன். கையில் ஒரு சிகரெட் சகிதமாக சாரமும் சேர்ட்டுமாக வந்தவர் முகத்தில் ஒரு புன்முறுவல். கன்னத்தில் விழுந்த அழகுக் குழி தந்த கவர்ச்சி அவர்பால் என்னை ஈர்த்தது. அன்றைய காட்சி இன்றும் என் கண் முன்னே நிற்கிறது." முன்னம் அவருடைய நாமம் கேட்டேன் பின்னர் அவருடைய பேரூர் கேட்டேன் மன்னன் அவனுடைய வண்ணம் கண்டேன் பின்னர் அவருக்கே பித்தன் ஆனேன்." என திருத்தாண்டகத்தை இவ்விதமாக மாற்றிப் பாடலாம் போல் தோன்றியது. காப்பி வந்தது பருகினோம். ஒறேற்ரருடன் சிகரெட் புகைத்தவர் எனக்கும் நீட்டினார். நான் புகைப்பது உண்டென்றாலும், புகைப்பதில்லை எனப் பொய் கூறி நிராகரித்தேன். முதல் நாளே நான் பொய் சொல்லி விட்டேன் என்பது அவருக்குச் சில நாட்களில் புலனாகியிருக்கும்.

என்னைப் பற்றி யார் யாரிடம் விசாரித்தாரோ நான் அறியேன். கட்டாயமாக விசாரித்திருப்பார் என்பது

ஒறேற்றரிடம் அன்று மாலையே " செல்லாக்காசு ஒன்றை என்னிடம் தள்ளப் பார்க்கிறாயா" எனத் தாட்சண்யமற்ற முறையிலே கேட்டதில் இருந்து உணர முடிந்தது. ஒறேற்றர் "உனக்கு அவன் மேல் நம்பிக்கை எற்படாவிட்டால் இவ்வருட முடிவில் நான் அவனை திரும்ப எடுக்கிறேன் கவலைப்படாதே" எனக் கூறிய வார்த்தை ஒரு நம்பிக்கை எற்படுத்தியிருக்கவும் கூடும். **பாடசாலையின் வளர்ச்சியே அவரது கனவு. ஆகவே சுண்டிச் சுண்டிப் பார்த்தே ஆசிரியர்களைத் தேர்வு செய்ததில் குறைகூற முடியாது.அதனால் பாடசாலை வளர்ந்தது.**

**இரண்டாவது சந்திப்பு**

வீட்டிற்குத் தந்தி வந்தது. குறிப்பிட்ட தேதியன்று பாடசாலையில் வந்து சந்தியுங்கள் என்று. சென்றேன். விடுமுறை முடிந்து இரண்டாவது தவணை ஆரம்பமாவதற்கு இரண்டு நாட்கள் தான் இருந்தன. உப அதிபர் கிருஷ்ணபிள்ளையுடன், வாரியார் என்ற கேரளத்தைச் சேர்ந்த பௌதிகவியல் ஆசிரியரும் இருந்தார். அதிபர் நேரடியாகவே விடயத்திற்கு வந்தார். என்னை ஆசிரியராக நியமித்துள்ளதாகக் கூறி, திரு. கிருஷ்ணபிள்ளையையும், திரு வாரியாரையும் அறிமுகப் படுத்தினார். நெடிய தோற்றம், வெள்ளை வேட்டியும் நாசனலுமாகத் தேசிய உடையில் காந்தமெனக் கவர்ந்திழுக்கும் அழகுப் பொலிவுடன் காட்சி தந்தார் கிருஷ்ணபிள்ளை. உப அதிபர் என்றால் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதை நான் காலக்கிரமத்தில் கிருஷ்ணபிள்ளையிடம் கண்டேன். நான் அறிந்த வரையில் யாழ்ப்பாணப் பாடசாலைகளிலே அக்காலத்தில் இருந்த உபஅதிபர்களில் திரு கிருஷ்ணபிள்ளைக்கு முதலிடம் கொடுக்கலாம் என்பது எனது அபிப்பிராயம். ஆசிரியர்களுக்கும் அதிபருக்கு மிடையே நல்லதொரு தொடர்பினை ஏற்படுத்திப் பாடசாலை சுமுகமாக நடைபெறுவதற்கு அவர் காரணராகவிருந்தார். ஆசிரியர்களுடன் மிகவும் அந்நியோன்யமாகப் பழகுவார். நிர்வாகத்தினைச் சிறப்புற நடத்துதற்கு தகவல்களை எந்த அளவினுக்கு ஆசிரியர்களுக்கு தெரிய வைக்க வேண்டுமோ அந்த வரையறையுடன் ஆசிரியர்களுடன் பழகுவார். ஆசிரியர்கள் கோரிக்கைகள் நியாயமானதாகப் பட்டால் அதனை அதிபரிடம் எடுத்துக் கூறிச் செயற்படுத்தி வைப்பார். திரு. கிருஷ்ணபிள்ளை பதவி உயர்வு பெற்று இடம்மாறிப் போனமை அவருக்கு நன்மை பயத்தாலும் அதிபர் ஜெயரத்தினத்திற்கு ஒரு கை முறிந்தது போல இருந்தது என்பதை அக்காலத்தில் பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியர்கள் உணர்ந்திருப்பார்கள்.

திரு வாரியார் மகாஜனக் கல்லூரியின் முக்கியமாகான தூண்களில் ஒருவராக விளங்கியவர். பாடசாலையின் நேரசூசி தயாரிப்பது முதல் பல்வேறு கடமைகளை மிகத் திறம்பட செய்து எல்லோரதும் நன்மதிப்பினைப் பெற்றவர். அதிபர் ஜெயரத்தினம் வாரியாரிடம் எனக்கான நேரசூசியைக் கொடுக்குமாறு பணித்தார். வாரியார் என்னை ஆசிரியர் அறையினுக்கு அழைத்துச் சென்றார். மிக வேகமாக நேரசூசி வேலை முடிந்தது. வாரியார் என்னைப் பாடசாலையில் ஒரு சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றார். அவருடைய மலையாளத் தமிழ் கேட்பதற்குச் சுவாரஸ்யமாக இருந்தது. பொன்விழா நினைவு மண்டபம் ஏறக்குறைய முடிவுறும் நிலையில் இருந்தது. 1960ஆம் ஆண்டில் பாடசாலையின் பொன்விழா நடைபெறவுள்ளதாக வாரியார் கூறினார். பாடசாலையின் இரண்டாவது தவணை ஆரம்பமான போது என்னுடன் மேலும் இரண்டு ஆசிரியர்கள். திரு. சத்தியசோதம், திரு. பாஸ்கரலிங்கம் ஆகிய இருவரும் புதிதாக ஆசிரியப் பணியில் சேர்ந்தனர். அவர்கள் இருவரும் பாடசாலையின் பழைய மாணவர்கள். அவர்களும் விடுமுறைக்காலத்திலேயே நேரசூசியைப் பெற்றிருந்தனர். அதிபர் அவர்கள் பாடசாலை தொடங்கிய அன்றைய தினமே பாடசாலை ஒழுங்காக நடைபெற வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார் என்பதை இதனால் அறிய முடிந்தது. பாடசாலையின் ஏறுபடிகளில் இதுவும் ஒன்று என்பது புலனாகியது. திரு வாரியார் அவர்கள் அந்த வருட இறுதியில் ஏடன் நாட்டில் ஆசிரியப் பணியினை ஏற்பதற்காகச் பாடசாலையை விட்டு விலகிவிட அவரது நேரசூசிப் பணியினை திரு. சத்தியோசோதம் ஏற்றுத் திறம்படச் செய்தார்.

**அடுத்தடுத்து சந்திப்பு:**

1957 மே. மாதம் நான் ஆசிரியப் பணியில் அமர்த்தப் பட்டேன். 1959ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நான் ஆசிரியர் குழாத்தின் செயலர் ஆகினேன். அதன் விளைவாக அதிபரை அடிக்கடி சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதிபரின் குணாதிசயங்களை நெருக்கமாக அறிவதற்கு ஒரு வாய்ப்பாக இது அமைந்தது. **"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்."** *( 517)* என்பது வள்ளுவன் வாக்கு.

அதிபர் அவர்கள் வள்ளுவனின் இலக்கியத்திற்கு இலக்கணமாக அமர்ந்தார் என்பேன். பாடசாலை ஒன்றினை நடத்துதல் கூட்டு முயற்சி. அதிபர் மீகாமனாக நிற்க ஆசிரியர்களே படகோட்டிகள். மகாஜனா மிகக் குறுகிய காலத்திலேயே யாழ்ப்பாணப் பாடசாலைகளிலே முதன்மை ஸ்தானத்திற்கு வந்தது என்றால் இந்தக் கூட்டு முயற்சி பெரு வெற்றியை அளித்தமையால் தான். பாடசாலைச் சமூகத்தின் தொழிற்பங்கீட்டில் அவரவர் திறனறிந்து அவ்வேலையை அவரிடம் ஒப்படைப்பதில் அவர் சமர்த்தராக விளங்கினார். முகம் நிறைந்த புன்னகையுடன் காந்தம் போலக் கவர்ந்திழுக்கக் கூடிய வார்த்தைப் பிரயோகம் நிறைந்த அவரது வேண்டுகோளினை நிராகரிப்பதற்கு எவருக்குமே மனம் ஒப்பாது. அவரது நிர்வாகத்தினை ஒரே கூற்றினில் சொல்வதானால், **"ஜனநாயகம் சிறிது புகுத்தப் பட்ட சர்வாதிகாரம்"**எனலாம்.

திரு மு. கார்த்திக்கேயன் மிகவும் செயற்றிறன் மிக்கவர் அதிகம் பேசமாட்டார். கொடுத்த கடமையை சிறப்பாக நிறைவேற்றுவதில்கண்ணும்கருத்துமாகஇருப்பவர்.நான் செயலாளராக இருந்த சமயம் அவரே ஆசிய குழாத்தின் தலைவராக இருந்தார். எமது முயற்சியின் காரணமாக அப்போது வாங்கப் பட்ட கதிரைகள் இன்றும் ஆசிரிய அறையினை அழகு செய்வதைக் காணமுடிகிறது. கார்த்திக்கேயனுடைய திறமையை அதிபர் நன்கு உணர்ந்தவரென்பது அவரிடம் ஒப்படைக்கப் பட்ட பணிக் கூறுகளிலிருந்து அறிய முடிகிறது. ஒரே காலத்தில் அவர் உயர்தர மாணவர் மன்றத்தின் பொறுப்பாளராகவும், நூலகப் பொறுப்பாளராகவும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். கார்த்திக்கேயன் கல்வித் திணைக்களத்தில் வேலைபார்ப்பதற்காக இடமாற்றம் பெற்று கொழும்பு சென்றதும் உயர்தரமாணவர் மன்றமும், பெற்றோர் ஆசிரியர் சங்கமும் என்வசம் ஒப்படைக்கப் பட்டன. மேலதிகமாக ஒழுங்காட்சியின் பிரதமஆசிரியப் பொறுப்பும் என் கைவசம் இருந்தது.

அதிபர் அவர்களுடைய பணிக்கூறுகள் பங்கீட்டில் மிகவும் முக்கிய நபராக விளங்கியவர் திரு. வே. தியாகராசா அவர்கள். அவர்கள் இருவருக்குமிடையே நிலவிய உறவினை நான் எப்பொழுதும் திருவாதவூரருக்கும் சிவபெருமானுக்குமிடையேயான உறவு என வர்ணிப்பது வழக்கம். அதிபர் பெயரை உச்சரிக்கும் பொழுதே தியாகராசா அவர்கள் மெய்ம்மறந்து போகும் இயல்பினர். பாடசாலை சிறியதாக இருந்தகாலத்திலே ஆசிரியப் பணியில் வந்தமர்ந்த தியாகராசா அவர்கள் சிறந்த புவியியல் ஆசிரியராக மிளிர்ந்ததுடன் நல்ல விளையாட்டு வீரராக அமர்ந்திருந்தமையால் விளையாட்டுத்துறைக்கும் பொறுப்பேற்றுத் திறமையாக செயலாற்றினார். பாடசாலை வளர்ந்தது. விளையாட்டுத்துறைக்கென திரு ஏகாம்பரம் ஆசிரியராக நியமிக்கப் பட்டார். பாடசாலை மாணவர்கள் சின்னையா ( அடிகார்) அருளம்பலம்( லோட்டன்), சின்னப்பா, துரையப்பா என நான்கு இல்லங்களாக வகுக்கப் பட்டு அவற்றுக்கிடையே வருடாந்தப் போட்டிகள் நடைபெற்றன. மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக இருக்க விடாது அவர்களுடைய பன்முக ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும் என்பது அதிபரின் குறிக்கோள். பாடசாலை அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற இலக்கிலே வருடாவருடம் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியுடன் நின்று விடாமல் கிறிக்கட், கரப்பந்து, ஹொக்கி, உதைபந்தாட்டம், வலைப்பந்து போன்ற சகல விளையாட்டுக்களுடன், கல்விக்குப் புறம்பான கூறுகளான பேச்சுப் போட்டி, இசைப் போட்டி மற்றும் நாடகப் போட்டி என வருடம் முழுவதுமே மாணவர்களுடைய சகல துறை விருத்தியை அளவிடும் போட்டிகள் நடத்தப் பட்டன. இதனால் பாடசாலை ஒரு உயிர்ப்பான நிறுவனமாக வருடம் முழுக்கத் துலங்குதல் சாத்தியமாயிற்று. இந்தப் போட்டிகள் எல்லாவற்றிலும் மொத்தமாக முதலிடம் பெறும் இல்லத்திற்கு சகலதுறைகளிலும் வெற்றியீட்டிய இல்லம் என பாவலர் துரையப்பா பிள்ளை சுழற்கேடயம் நிறுவியவர் தினமான ஜூன் 24 வழங்கப் பட்டது. ஏறக்குறைய வருடம் முழுவதுமே ஏதோ ஒரு போட்டி நடந்து கொண்டேயிருந்தது. இதற்கான அமைப்பாளராக திரு தியாகராசாவை அதிபர் நியமித்தார். இந்தப் போட்டிகள் நடைபெறுகின்ற சமயங்களிலே இல்லத்து ஆசிரியர்கள் பலர் நேரடியாகவே தியாகராசாவுடன் மல்லுக்குப் போவார்கள். எதனையும் சிரித்தபடியே எதிர்கொள்ளும் பண்பு தியாகராசா அவர்களிடம் இருந்தது. அவரைத் தவிர இன்னொருவர் அந்தப் பதவியை இத்தனை சிறப்பாக ஆற்றியிருக்க முடியாது.

ஆசிரியர்களுக்கு உதவும் முகமாக பாடசாலையில் கடன் வழங்கும் சபை ஒன்று உருவாக்கப் பட்டது. அதன் மூலம் பல ஆசிரியர்கள் அனுகூலம் பெற்றனர். ஒரிரு ஏமாற்றுப் பேர்வழிகளும் இருந்தார்கள் என்பதை கூறியே தீரவேண்டும். வில்லங்கம் நிறைந்த இந்த அமைப்பின்

செயலாளர் - பொருளாளராக திரு. தியாகராசாவைத் தவிர வேறு யாரையாவது நியமிக்க அதிபர் யோசித்திருப்பாரா? எந்த ஒரு பிரச்சினையையும் தன்புன்னகை மூலம் சந்தித்து வெற்றிகாணும் தியாராஜரே நிரந்தரமாக அப்பதவியில் தங்கினார். பிரதமபகுதியின் தலைமைஆசிரியராக பதவி வகித்த திரு நாகலிங்கம் ஓய்வு பெற்றார். அந்த இடத்திற்கு ஒருவர் தற்காலிகமாகத் தேவைப் பட்டார் .அதிபரின் மனதில் தோன்றியவர் தியாகராசா. இடைநடுப் பகுதியில் புவியியல் கற்பித்த அவரை கீழ்ப்பிரிவுக்கு தலைமை ஏற்குமாறு அதிபர் பணித்தார். அதிபரின் வாக்குதேவ வாக்காகக் கொள்ளும் தியாகராசா மறுபேச்சில்லாமல் ஒப்புக் கொண்டார்.

அதிபரின் மூத்தமகள் ஜெயபவானியின் திருமணம் வந்தது. வெகுவிமரிசையாகக் கொண்டாடப் பட்டது. தனக்கு உதவி செய்வதற்காக ஆசிரியர்களில் மூவரைத் தேர்வு செய்தார். திரு தியாகராசா, திரு கனகராசா மற்றும் திரு கனகசபாபதி. நிதிப் பொறுப்பு தியாகராசாவிடமும் , சோடினையும் திருமணத்தன்று சிற்றுண்டி உபசாரமும் கனகசபாபதியிடமும், மணவறை புதிய முறையில் மலர்களால் அலங்கரித்தல் கனகராசாவிடமும் ஒப்படைக்கப் பட்டன. அதிபரின் நிதி நிலமை அவரது அருமை மனைவிக்கு முழுமையாகத் தெரிந்திருக்குமோ தெரியவில்லை ஆனால் தியாகராசாவுக்கு அத்தனையும் அத்துபடி. திருமணவிழா மிகவும் போற்றப் பட்ட முறையிலே, மழை கொஞ்சம் குழப்பம் விளைவித்தாலும் அமோகமாக நடந்தது என்பது சொல்லத் தேவையில்லாதது.

1960ஆம் ஆண்டினில் கல்லூரியின் பொன்விழா நடந்தது. அதனை இரண்டு வாரங்கள் தொடர்ச்சியாக நடத்த அதிபர் விரும்பினார். பொருட்காட்சி களியாட்ட விழா என அத்தனை அம்சங்களும் கொண்ட ஒரு பெரு விழாவாக அது அமைந்தது. பழைய மாணவர் சங்கத்தின் இணைச் செலாளர்களாக விளங்கிய திரு மு.கார்த்திக்கேசனையும் திரு K.S நடராசா அவர்களையும் பொன்விழாவிற்கான இணைச் செலாளர்களாக நியமித்தார். பொருட்காட்சியினுக்குப் பொறுப்பாளராக என்னை நியமித்தார். இவை எல்லாவற்றினுக்கும் மேலாக திரு. ஸ்ரீபாஸ்கரனில் உள்ள நிறைவேற்றுத் திறமையை உணர்ந்த அதிபர் அவருக்கு அமைப்புச் செயலாளர் என்ற பிரத்தியேகப் பதவியை வழங்கினார். திரு பாஸ்கரனின் முயற்சியால் பல வெளிநாட்டு ஸ்தானிகர்கள் எமது களியாட்ட விழாவினுக்கு வருகை தந்து சிறப்பித்தனர். பொன்விழா ஆண்டிலேயே பாடசாலையின் அமைந்துள்ள சிவகாமி சமேத ஆனந்த நடராசர் ஆலயமும் பாடசாலையில் தோன்றியது. ஆலயத்தில் வரவு செலவுகளை கண்காணிப்பதற்காக ஒரு இந்து மன்றத்தினை உருவாக்கி அதற்கான தகுதி வாய்ந்த தனாதிகாரியாக திரு பரமேஸ்வரநாதனை நியமித்தார். பரமேஸ்வரநாதன் உயர்தர வகுப்புகளிலே இரசாயனவியல் போதிப்பவர். எதனையும் மிகவும் ஒழுங்காகச் செய்பவர். தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து அம்பனைச் சந்திவரை உள்ள வீதியை எமது நிறுவுனர் துரையப்பாபிள்ளை அவர்களைக் கௌரவிக்கு முகமாகப் பாவலர் துரையப்பாபிள்ளை வீதி என தெல்லிப்பழைக் கிராமச் சங்கம் பெயரிட்டுயுள்ளது. இந்த வீதியில் அதிபர் ஜெயரத்தினம் வீட்டிற்குச் சிறிது தூரத்தில் ஒரு ஆட்டு இறைச்சிக் கடையிருந்தது. திரு பரமேஸ்வரநாதன் அவர்கள் சனிக்கிழமைகளில் அக்கடைக்கு வந்து ஆட்டு இறைச்சி வாங்கிச் செல்வது வழக்கம். அதிபர் என்று திரு பரமேஸ்வரநாதனை இந்து மன்றத்தின் தனாதிகாரியாக்கினாரோ அன்று முதல் பரமேஸ்வரநாதன் அவர்கள் அங்கு வந்து இறைச்சி வாங்குவதை நிறுத்தி விட்டார். ஏன் இப்படிச் செய்தீர் என நான் கேட்டேன். அவர் எனக்கு இந்தப் பதவியைத் தந்து விட்டார். நான் வந்து இறைச்சி வாங்கிக் கொண்டு போனால் "உங்கை பார் இந்து மன்றத் தனாதிகாரி இறைச்சி வாங்கிக் கொண்டு போகிறார்" என ஊரவர்கள் ஏளனமாகச் பேச மாட்டார்களா என்றார். அதிபர் வழங்கிய பதவிக்கு இத்தனைகௌரவம் கொடுத்த அவரின் பண்பை நயப்பதா,அவரின் குணமறிந்து பதவி வழங்கிய அதிபரின் எடைபோடும் திறனை வியப்பதா என என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

பாடசாலைகள் அரசுடமையாக்கப்பட்ட பின்னர் 1970ஆம் ஆண்டு வரை விசேட ஆசிரியர் பதவிகள் வழங்கப்படவில்லை. 1970ஆம் ஆண்டினிலே அது மீண்டும் அமுலுக்கு வந்த போதிலும் அப்பதவியை கல்வி அமைச்சே வழங்கியது. இதன் விளைவாக திரு இராமசாமி விசேட ஆசிரியர் பதவி பெற்றார். 1970 டிசம்பருடன் அதிபர் அவர்கள் ஓய்வு பெற்ற பின்னால் திரு பி. ஏஸ் குமாரசாமி அதிபராக இருந்தகாலத்திலே இராமசாமி அவர்கள் துணை அதிபராகக் கடமையாற்றியுள்ளார்கள். அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றதும் ஆங்கிலம், விஞ்ஞானம் தொழில் துறைப் பாடங்களுக்கான பகுதித் தலைவர்களை அதிபர் நியமிக்கலாம் என சுற்று நிருபம் ஒன்றினை திணைக்களம் அனுப்பியது. அதிபர் அவர்களுக்கொரு

இக்கட்டான நிலை ஏற்பட்டது. அப்பதவியை பாடசாலையின் மூத்த ஆசிரியர்களுக்கா அல்லது கடினமாக உழைப்பவர்களுக்கா வழங்குவது என்பது அவருக்கு ஏற்பட்ட சிக்கல். இது விடயமாக என்னுடன் சில சமயங்களில் பேசியும் உள்ளார். ஈற்றிலே சில மூத்த ஆசிரியர்களுக்கே இப்பதவிகளை வழங்குவதெனத் தீர்மானித்து அறிவிக்கவும் செய்தார். ஆனால் அவரது மனதில் ஒருகுற்ற உணர்ச்சி இருந்ததையும் அதனை அவர் எப்படியாக ஈடுசெய்தார் என்பதையும் அவ்வருடத்திய நிறுவியவர் தின அறிக்கையில் காண முடிந்தது. அந்த அறிக்கையில் மூன்று மேலதிக பதவிகளைக் குறிப்பிட்டு Prefect of Discipline: Mr. P. Kanagasabapathy Prefect of Studies. Mr. S. Kanagarajah Prefect of Games: Mr.V. Sivasubramamaniam எனக் குறிப்பிட்ட பின்னரே பகுதித் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தார். தகுதியானவர்களுக்குக் கௌரவம் வழங்கப் படவேண்டும் என்பதில் அவர் எத்தனை கண்ணியராக இருந்தார் என்பதை இதனால் உணர முடியும்

**திசை மாற்றும் சந்திப்பு:**

1968 என எண்ணுகிறேன். ஒரு தினம் என்னை அழைத்தார். "சில நாட்களுக்கு முன்னர் ராஜ் நகைச்சுவை நாடகமன்றத்தின் உரிமையாளர் திரு. ராஜரத்தினம் என்னை வந்து சந்தித்த போது துரையப்பா பிள்ளை மண்டபத்தினைப் பார்த்தவர் அதன் அழகில் மயங்கி எனது நாடகம் ஒன்றினை இங்கே வைக்க உதவி செய்யுங்களேன் எனக் கோட்டார். நான் சம்மதித்து விட்டேன். எமது ஆலயத்திற்கு முன்னர் இரும்பினால் ஆன கிறில் படலை ஒன்று போட வேண்டும், அவரது "வா கோட்டடிக்கு" நாடகத்தினை நடத்தி அதற்கான நிதியைச் சேகரிக்கலாமா எனக் கேட்டார். "அந்தக் "கிறில் படலை" போடுதற்கு எவ்வளவு பணம் தேவை" எனக் கேட்டேன். ஐயாயிரம் ரூபா வரையில் தேவை என்றார். அதற்கான பணத்தினை எமது பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நிதியிலிருந்து நான் தருகிறேன் இந்த நாடகத்தினை இன்னொரு பெரிய நோக்கத்திற்காகப் பயன் படுத்துவோமே" என்றேன். "என்ன?" எனக் கேட்டார். "1970இல் எமது கல்லூரியின் வைர விழா வருகின்றமையால் அதற்கான ஒரு நினைவு மண்டபம் நிறுவுதற்கு வேண்டிய நிதி சேகரிப்பதற்கான ஆரம்ப நிகழ்ச்சியாக இந்த நாடகத்தினை நடத்தினால் என்ன" எனக் கேட்டேன். முகத்தில் புன்னகையுடன் சம்மதம் தெரிவித்தார். உடனடியாகச் செயலில் இறங்கினோம். தெல்லிப்பழையினையும் சுற்று வட்டாரத்தினையும் தெல்லிப்பழைச் சந்தியை மையமாக வைத்து நான்கு கால் வட்டங்களாக பிரித்தோம். நான்கு ஆசிரியர்களுடைய தலைமையில் மாணவ தலைவர்களுடன் நுளைவுச் சீட்டுக்கள் விற்பனையாகின. சரித்திரம் காணாதவகையிலே 24,000 ரூபா சேகரித்தமை பேராச்சரியமே. அதிபர் பெயர் மந்திரக்கோல் போலச் செயற்பட்டதை நுளைவுச் சீட்டு விற்பனையில் ஈடுபட்டோர் அத்தனை பேரும் உணர்வார்கள். 1970 மார்ச் மாதத்தில் வைரவிழா மண்டபத்திற்காக அத்திவாரம் இடப்பட்டது. ஆனால் துர்ரதிருஷ்ட வசமாக 1970இல் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை இழக்க, ஆளும் கட்சியாக வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் படி அதிபர் அவர்கள் 1970ஆண்டு டிசம்பர் மாதம் ஓய்வு பெற வேண்டி வந்தது. அதிபர் அவர்கள் 1976ஆம் ஆண்டு அமரத்துவம் அடைய 1980ஆம் ஆண்டினிலே அந்த வைரவிழா நினைவு மண்டபம் திறக்கப் பட்ட பொழுது அது வைரவிழா நினைவு ஜெயரத்தினம் மண்டபம் ஆகியது.

1976ஆம் ஆண்டு மே மாதம் 22 ந்தேதி நான் மகாஜனாவின் அதிபராகப் பதவி ஏற்றேன்.ஜூன் 24ந்தேதி நிறுவியவர் தினம் நடத்த வேண்டும். அதற்கு முன்னர் விளையாட்டுப் போட்டி வைக்க வேண்டும்.ஜூன்15 விளையாட்டுப் போட்டி வைப்பதாகத் தீர்மானித்தோம். அதிபர் இல்லம் சென்று அது பற்றி அவரிடம் சொன்ன பொழுது, அன்றைய தினம் தனது குடும்பம் முழுவதுமே கொழும்பினில் நெருங்கிய உறவுக்காரரின் குடும்ப விசேடம் சம்பந்தமாக நிற்க வேண்டும் என்பதால் தன்னால் சமூகம் கொடுக்க முடியாது என்றார். மனம் வருந்துவதாகப் பாசாங்கு காட்டிவிட்டு வந்தாலும் உண்மையில் அவர் அன்றைய தினம் சமூகம் கொடுக்காமையையே நான் மிகவும் விரும்பினேன். நான் பதவி ஏற்ற பின்னர் நடைபெறுகின்ற முதல் நிகழ்ச்சி. அது சீராக நடைபெறுமா என்ற பயம் மனதில். ஒழுங்கு பிழையாகிவிட்டால் அவர் முன்னிலையில் எத்தனை அவமானம். ஆகவே அவர் இல்லாமையைப் பெரிதும் விரும்பினேன். ஆனால் அவரோ அன்றைய தினம் கொழும்பில் இருந்து விழா சிறப்பாக நடைபெற வாழ்த்து அனுப்பினார். மீண்டும் தெல்லிப்பழை வந்ததும் விளையாட்டுப் போட்டி மிகச் சிறப்பாக நடந்தது என்பதை அறிந்து மிகவும் பாராட்டினார். கனவிலும் நினைவிலும் மகாஜனாவே அவரது

மனத்தினில் நின்றது.

**இறுதிச் சந்திப்பு:**

1976 தீபாவளி தினம். அன்று பாடசாலையின் ஆலயத்தில் பூசை நடைபெற்றது. நான் சென்றிருந்தேன். அதிபர் அவர்களும் வந்திருந்தமை கண்டு வியப்புற்றேன். பூசை முடிந்ததும் நடந்து கொண்டிருக்கின்ற வைரவிழா மண்டபக் கட்டிடவேலையை மிக அக்கறையுடன் என்னுடன் வந்து பார்த்தார்கள். அந்த வாரத்து சனிக்கிழமை எமது மற்றும் யாழ் இந்துக்கல்லூரியின் முதல் அணிகளுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது வருகிறீர்களா எனக் கேட்டேன். தனது உடல்நிலை அத்தனை சுமுகமாக இல்லை என்றும் அது சீரானால் கட்டாயம் வருவதாகவும் கூறினார். அந்தப்புதன்கிழமை யாழ் இந்துக் கல்லூரிக்கும் உரும்பராய் இந்துக்கல்லூரிக்குமிடையே உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. அதனைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். போட்டி முடிந்து வீடு திரும்பிய என்னை மல்லாகம் சந்தியில் எமது கல்லூரியில் அலுவலக ஊழியராகச் சேவையாற்றிய குழந்தை என்பவர் மறித்து அதிபரது மறைவுச் செய்தியைக் கூறினார். என்னால் நம்ப முடியவில்லை. நேரே அதிபர் வீடு சென்றேன். ஓடி ஓடி பாடசாலைக்கெனவும் , பின்னர் துர்க்கை அம்மனுக்கெனவும் உழைத்த உடல் நிம்மதியாக உறங்குவது போலக் கிடந்தது. கன்னத்தில் குழி விழுந்த புன்னகை மறையவில்லை. யார் அழைத்தும் காந்த மெனக் கவர்ந்திழுக்கும் கண்கள்திறக்கவில்லை. பாடசாலைக் கீதத்தில் புதிதாக" மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி ஜயரத்தினம்பணி நினைவோம்" என்ற இரண்டு அடிகளைப் புலவர் சிவபாதசுந்தனார் சேர்த்தார். பாடசாலைப் பிள்ளைகள் பாடினார்கள். காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. கடைசியாக அவரது உடலையாகிலும் அவரது கால்களால் அளந்த கல்லூரி தரிசிக்கட்டுமே எனக் கேட்டோம். குடும்பத்தவர் சம்மதிக்கவில்லை. எனவே பாடலைச் சமூகம் இடுகாடுவரை சென்று கண்களின் ஊடாகவழியும் கண்ணீருக்கிடையேயும் அவரது உடலைக்கண்டு பிரியாவிடை கொடுத்துச் சென்றது. 31ஆம் நாள் கிரியைகள் முடிந்தன அன்று மாலை அனுதாபக் கூட்டம் ஒன்றினை துரையப்பாபிள்ளை மண்டபத்தினில் நடத்தினோம். அதிபரின் முழு உருவப் படம் துரையப்பா மண்டபத்தில் திறந்து வைக்கப் பட்டது. 1988ஆம் ஆண்டு மேமாதம் 5ந்தேதி வைரவிழா நினைவு ஜெயரத்தினம் மண்டபம் திறந்து வைக்கப் பட்டது. பாடசாலை மாணவர்கள் சேகரித்த செப்பினைக் கொண்டு அதிபரின் மார்பளவு வெண்கலச்சிலை மண்டப வாயிலில் திறந்து வைக்கப் பட்டது.

**என் நினைவில் நிற்கும் இரு தினங்கள்:**

ஏறக்குறைய 13 ஆண்டுகள் நான் அவரின் கீழ் கடமையாற்றியுள்ளேன். பல சமயங்களில் அவரைச் சந்திக்கும், அவரை அவதானிக்கும், அவரது உளப்பாங்கினை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன. ஆனால் என் நினைவில் இன்றும் பசுமையாக நிற்பவை இரண்டு தினங்களே. நீல் ஆம்ஸ்ரிறோங் சந்திரனில் கால்பதித்துவிட்டார் என்ற செய்தி வெளியான தினம் ஒன்று. மற்றையது திரு ஏகாம்பரம் காலமாகிவிட்டார் என அறிந்த தினம். 1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ந்தேதி நீல் ஆம்ஸ்ரிறோங் அவர்கள் சந்திரனில் கால்பதித்தார். 22ந்தேதி காலை அதிபர் அவர்கள் பாடசாலைக்கு வரும் போதே பரவசத்துடன் வந்தார். அவர் மிகவும் சமய நம்பிக்கை உடையவர். ஆனால் விஞ்ஞான முன்னேற்றத்தினைப் பெரிதும் வரவேற்பவர். சந்திரனில் மனிதன் கால்பதித்தது அதிபருக்குப் பேராச்சரியம் தரும் நிகழ்ச்சியாக அமைந்தது. மாணவர் யாபேரையும் காலையில் துரையப்பாபிள்ளை மண்டபத்தற்கு அழைத்து இச்செய்தி பற்றி அறிவித்துப் பெருமைப் பட்டார் ஆம்ஸ்ரிறோங் சந்திரனில் கால் வைத்ததும் கூறிய வார்த்தைகளை மாணவர்கட்கும் எடுத்துக் கூறினார் "That's one small step for a man but a giant leap for the mankind" என்ற அவர் கூற்றினுக்கு விளக்கம் தந்து தனது உரையினை முடித்தார்.

ஏகாம்பரம் அவர்கள் அமரரானது 1967ஆம் ஆண்டு என எண்ணுகிறேன் அன்று காலை பாடசாலை ஆரம்பமாகி விட்டது. அவர் காலையில் சுற்றுலாவாக பிரதம பகுதியில் நின்ற போது இந்தச் செய்தி அவருக்குச் சொல்லப் பட்டது. அவரால் நம்பமுடியவில்லை. மனம் ஏற்கத் தயக்கம் காட்டியது.அவரது முகத்தில் அவலக்குறி. அழுகை வந்து விடும் போல இருந்தது. ஓட்டமும் நடையுமாக அலுவலகம் வந்தார். அந்தச் செய்தி பொய்யாக இருக்க வேண்டுமே என வேண்டியபடி வந்தாரோ. தொலைபேசியில் செய்தியை ஊர்ஜிதம் செய்தவர் செய்வதறியாமல் நிலையாக நின்றார். மாணவர்களை அழைத்து செய்தியை விம்மல்களுக்கிடையே அறிவித்த காட்சி பரிதாபமாக இருந்தது.

# MY TRIBUTE TO T. T. JAYARATNAM
# "OUT OF DUST, HE MADE US INTO MEN"

***by M.Karthigesu, B. A. ( Cey )***
*Patron, MCOSA, Canada*

Memories of my twelve years in Mahajana from 1952 to 1964 come crowding into my mind as I begin to appreciate the greatness of T.T.J in the light of my experiences as a Assistant teacher who worked under him. I remember vividly the first day when I met T. T. J and Mr.K.Krishanapillai, the Vice-Principal of that time in the College-office. I was twenty three years of age, innately shy and quiet, but inwardly proud of the fact that I had gone through my University career at a time when Sir Ivor Jennings, a reputed authority on International and Constitutional Law and Parliamentary System of Government was the Vice-Chancellor of the then prestigious University of Ceylon.

T.T.J and K.K, conquered me by the sheer force of their personalities - they formed a wonderful duo – the Principal clad in a grey-coloured suit, and the Vice-Principal in an immaculate white national-shirt, verti and shawl; T.T.J looked a person of cheerful disposition with a captivating and charming smile and K.K, loud in voice and words with lots of wit and humor; Within minutes, I had a glimpse of their determination and drive to make Mahajana a Super Educational Institution. No wonder, soon they reached this goal triumphantly winning the acclaim of one and all through-out the length and breadth of Sri Lanka.

To begin with, the internationally acclaimed Bombay Journalist, D.F. Karaka of the 1940s wrote a biography of M.K.Gandhi entitled, "Out Of Dust, He Made Us Into Men and into a Nation." Suffice to say, this title befits well to portray T.T.J's accomplishments too. If Mahatma Gandhi had aroused his countrymen from their political slumber to become a Nation of Freedom Fighters, T.T.J, by the dint of his indefatigable energy for hard work, intellectual power and inspirational skills, transformed the Mahajanans into a perennial "Talents-Tank"of Eminent Men in all fields, Science, Medicine, Engineering, Education, Economics, Arts and Letters; He dinned into their ears Mahajana's motto, "Know Thyself". He inculcated into their minds a sense of humanity, compassion and the

spirit of selfless service for the entire humanity. Thus T.T.J and his team of dedicated teachers of great intellectual attainments inspired Shun Sunders and Sivagnanavels, Karunakarans and Paskaralingams, Navams and Subramaniams, Chandrasegarams and Sinnathambys, Mahendrans and Thuraisinghams, Poopals and Chandrans, Pushparanees and SriPaskarans, SivaPaskarans and Lankanesans, Selvaskandans and Ranjans, Jeganathans and Natkunams, Sivanesachelvans and Cherans and not to mention the names of a host of hundreds and thousands of Mahajanans, some of them even facing the risks of lurking dangers to their own lives extended their help and support to their distressed compatriots in their homeland. He made them the Standard-Bearers of Mahajana's traditions and values which they themselves carried to distant lands. Viewed from this perspective, therefore, it can be rightly claimed that "Out of the Dust" that started emanating in 1910 from the backyard-verandah of the humble residence our Revered Founder, T.A.Thuraiappapillai, T.T Jayaratnam "Made Us, Mahajanans, Into Men"

T.T.J's claims for greatness are many and varied. Our Founder and Paavalar, the late T.A.Thuraiappapillai was the Crusader and his illustrious son, T.T.J was the Accomplisher. He was Principal par excellence. He was a Colossus in the field of Education. He presented a heroic image of a man of pure heart and noble mind. His intellectual power was enormous. His moral courage was immeasurable. His title for fame was not by his giving us Mahajana, but also his transcendent humanity. He had the inordinate capacity to discover the talents in his team of teachers and coordinate them to the best advantage of his students. His premonition of things to happen was stupendous as demonstrated in his Annual Prize Day Address of 1957 when he declared, "Ever since the Sinhala Only Act was passed a year ago, the political situation in the country has deteriorated. It is feared that the cold war which has been raging between the two communities of the island for the past few months may very soon develop into an open warfare bringing destruction to life and property in its wake."

He had a distinctive style of thinking; style of talking; style of translating his ideas into action, thus befitting wonderfully the words of the French Poet, Buffon "The Style is the Man."

To conclude these humble tributes of mine, I can do no better than quote these lines of the Poet, Philosopher, and Artist, Khalil Gibran:

"It is long time since the Cheddar Tree

has fallen, but its fragrance

endures and will forever

seek the four corners of the Earth."

This fragrance – T.T.J. – endures widely in London, France, Germany, Australia, New Zealand, Canada, Norway, Denmark, Sweden, and in several countries where Mahajanans are living and thriving today. T.T.J is the quintessence of Mahajana's Spiritual Soul; he is the quintessence of Mahajana's Culture, he is the quintessence of all what Mahajana stood for in the past, and what it stands for today, and in the years to come.

Wishing Our Dear, the late T.T. J a Very
Happy BIRTH Centenary !
God Bless Mahajana !
God Bless Canada !

# My father the great Mr T T Jayaratnam

*Jayabawani Vicknesvaran*

Everyone knew how much my father contributed to the growth of Mahajana College and to the community as a Justice of the peace. Equally he was a wonderful family man. My father was a very kind, thoughtful, caring and affectionate person towards his family and relatives.

Unfortunately when he was 16 years old he lost his dear father.

Over night, a care free studious person became the head of the family to his loving mother, elder sister Ratammah, younger brother Dharmarajah and two year old cousin Thanabalasingam . He took responsibility and looked after them with great affection.

After we were born our father always found time for our needs and well being. Whatever we wanted he did it with out us asking him.

One day we went to town and I saw a saree and I kept on looking at it. I didn't say anything to anyone. We came home. After two months was my birthday and that morning I opened my wardrobe and to my surprise I found that particular saree in it. This shows my father's observation power, his thoughtfulness and his affection.

He took us to show all the important places in Sri Lanka,, and day out , driving us around to visit different places in Jaffna. This happened very often. He planed with my mother and she would cook lunch and make coffee in flasks and we were off. It could be any where we wanted. He loved relaxing with us. Whatever was new in the country, like the escalator in Silinco House in Colombo in 1960's and the industrial exhibition, he took us to see . He always wanted us to enjoy the things he didn't have with his father.

One day my father called my brother and I and put RS 100 on the table, he asked us to spell the name of our car 'Peugeot'. If you spell it correctly, the money is yours he said. We couldn't. Then he asked us to go to the garage and check the spelling. This was how he taught us to observe things around us.

My father took my brother Kannan to Peradeniya in the weekends to give him the best dental care. He took Kannan to the Dental school, practically every month for a year. While he was in Peradeniya Gardens my father bought unusual plants for my mother to plant in our garden. When the plants were blooming, the flowers were used by the school temple every day.

My father loved to have meals with us as a family every day and my mother would serve us.

After dinner he would spend time talking to us about the activities of that day or he would ask us to read the English news paper and get the dictionary and would show us how to find the meaning of difficult words. Also he would make us listen to the BBC world service to understand the news. He was preparing us for our future in the big wide world. He felt proud and happy to listen to my sister and I playing Veena , my singing and my brother playing Mruthangam.

We have so many happy and wonderful memories with our beloved father. He was one in a million. We were so very lucky to have such a great and wonderful person as our father.

# T. T. JAYARATNAM

## IMPORTANT EVENTS AND ACHIEVEMENTS

1913 Born—15th October.

1917 Initiation to letters and Admission to the Tellipallai Saivaprakasa Vidyasalai.

1919 Admission to the Tellipallai Mahajana English High School for education under his father's care.

1924 Successful in the E. S. L. C. Examination conducted by the Education Department obtaining First Division.

1929 Passing away of his father—Pavalar T. A. Thuraiappa-pillai. Admission to the Jaffna Hindu College and success in the London Matriculation Examination in 1930.

1931 Admission to Jaffna College, Vaddukoddai and success in the London Intermediate in Arts Examination in 1932.

1932 Commencement of Teaching Career at the Mahajana English High School, (number of students on roll—180)

1936 Selected for training as an English Trained Teacher at the Government Training College, Colombo. Successful completion of training in 1937.

1940 Member of the Board of Directors of the Prathma Chikitsa Aoushadhalayam till 1948.

1942 Success in the London Bachelor of Arts Examination. Jayaratnam—Raniratnam join in holy matrimony.

1945 Birth of his elder daughter—Jayabavani.Induction as Principal, Mahajana English High School. Change of name to Mahajana College.1946 Elected Honorary Secretary, Northern Province Teacher's Association. Designs the present College Crest.

1947 Mahajana elevated to a Grade II College.

1948 Birth of his elder son—Jayakumaran.
Ambitious building programme launched for Mahajana.

1949 Mahajana elevated to a Grade I College.
Elected President of the Northern Province Teachers' Association.
Founder Member and President of the Tellipallai Co-operative Hospital.

1950 Birth of his younger son—Jayakanthan.

1953 Birth of his younger daughter—Jayavarni.
Elected President of the Tellipallai Co-operative Hospital for two successive years—till 1955. Raised Funds by organising a Carnival.

1954 Passing away of his mother—Thyalnayagam.
Raised funds for Mahajana College buildings by organising a successful carnival at the Jaffna Esplanade.

1955 Foundation for a storeyed building to house the College Assembly Hall, Administration Block, Library and workshops for vocational training.

1956 Completion of twentyfive years of service as a Teacher at Mahajana College. Toured Malaysia and Singapore on a successful fund raising mission for the college buildings.
Participation of the college in the annual festivals at Maviddapuram Kandasamy Temple and at Thiru-ketheesvaram.

1959 Built for himself a home~"Amirtha Surabi". Open-air Theatre for Mahajana for Cultural Development.

1960 Golden Jubilee celebrations of the College. Assembly Hall declared open by Sir Nicholas Attygalle, Vice-Chancellor of the University of Ceylon.

1964 -1966 Mahajana College elevated to Supra Grade. Consecration of Temple to Lord Natarajan in the college premises. Mahajana College becomes a vested school. Elected President of the Jaffna Schools' Sports Association. Mahajana receives trophy from the Governor-General for gaining first place in the All-Ceylon P. T. contest for girls. Elected Honorary Secretary, All Ceylon Headmasters' Conference. Wedding of his elder daughter Jayabavani to Vickneswaran.

Elected President of the Dhurga Devi Temple Managing Committee which office he held till his passing away in 1976. Actively involved in Temple restoration work and administration.

Elected President of the Tellipallai Hindu Young Men's Association which office he held till his passing away in 1976.

1967 Appointed a Justice of the Peace for the Jaifna District. Elected President of the Northern Province Principals' Association. The College begins a series of Soccer Championships which continued for eight long years.

1968 Inauguration of the Three Lakh Diamond Jubilee building fund for the College.

1969 Foundation for a storeyed Science block for the College. Fund raising for aviddapuram Kandasamy Templerestoration work.

1970 Diamond Jubilee celebration of Mahajana College. First-eleven Soccer Champion—Ceylon School Foot ball Association, and Winners of the Sir John Tarbat Shield. Passing away of his sister — Mrs. Ratnammah Nadarajah. Retirement from Service.

1971 Inauguration of the Tellipallai Education Bureau,

1974 Registration of marriage of his elder son Jaya-kumaran to Yogini.

1975 Marriage of his younger daughter Jayavarni to Dr. Maheswaran. Birth of his grand child—Sowmya Vicknesvaran.

1976 Elected Founder-President of the Tellipallai Lions Club.

Attained the Lotus feet of the Lord — 29th October.

> *" Religious education forms the very foundation of all our work here at Mahajana. Schools of our type will cease to have their distinctive character and torfeit all claims to exist as denominational schools if religious education is not given its due place, not merely inform but in actual fact. In these days when the demon of irreligion has begun to rear its ugly head and teachers themselves are charged in some places with active propagation of godless idologies it is our duty as educators to set our faces resolutely against ihe foes of religion ".*
>
> **- Founder's Day Address 1952.**

# The legend of Mr. Jayaratnam, the late principal of Mahajana College.

*C.Thiruvarudchelvan*

Several years had gone by since Mr. Jayaratnam passed away. I recall getting to know him and understanding him from the late 1930's. He was not only my first cousin but also my teacher, guardian and mentor throughout the early years of my life. I was in his English grammar, English literature and Latin classes for about 2 years. He was well versed in several subjects such as history, geography, civics and many other studies. In short, he was an intellectual. He was also involved in the school's sports activities a lot. He took over the reigns of stewardship in 1945 from Mr. Chinnappah (my late father) who passed away while still young and in active service as head master of Mahajana English High School. From then on it was an uphill struggle for Mr. Jayaratnam for many years until his retirement. He achieved many things with regards to Mahajana during his tenure as principal, a feat that could only be compared with the accomplishments of successful leaders of nations throughout history. The list of Mr. Jayaratnam's achievements in bringing Mahajana to the highest level in educational development is almost endless. He added several new subjects (especially in Science) to the curricula. To this purpose he recruited highly qualified teachers not only from Sri Lanka but also from India. He expanded the various activities in several fields that the school was engaged in until then. He was very concerned with the dire need for additional funds Mahajana was desperately seeking. To that effect Mr. Jayaratnam worked tirelessly by traveling within Sri Lanka and Malaysia. He was successful to a great extent in that effort. With the funds thus raised he was able to get new extensions built as additions to the existing structures thus expanding the entire formation of the school buildings. Then he did add more classrooms and new teachers to meet the needs of the ever increasing number of students who were clamouring to enter Mahajana College at that time. Thus Mahajana became a pre eminent college, not only in Jaffna, but in the whole of Sri Lanka. Mahajana was always coeducational, a fact which one doesn't find even in the western countries, to this day! During all this Mr. Jayaratnam bought extra property surrounding the school to increase the size of the school premises. This needed extra money. Here too Mr. Jayaratnam managed to bring out his genius

in dealing with a very difficult task successfully. By then I had already left Sri Lanka for England to pursue my advanced studies in engineering and secure myself a successful career. But, I always followed the developments in Mahajana and the strides it was making in peace times as well as during the civil strife Sri Lanka was going through afterwards. I heard that Mr. Jayaratnam added boarding facilities for students from far away places and also a Hindu shrine for students to worship in. All this was a gigantic leap from my own school days at Mahajana. It seems that my time at Mahajana was rather primitive compared to the later developments Mr. Jayaratnam brought about so wonderfully. Looking back I feel that perhaps I was born too early! Mr. Jayaratnam had already become a legend in his own life time and deservedly so. There will never be another man like him in the affairs of Mahajana and its long history and the personal sacrifices he made with regards to his own family often neglecting his family for pushing Mahajana ahead will long be remembered. We will always miss him, but will continue to celebrate his work and presence in Mahajana.

## A Prospect and A Retrospect

On my appointment to the Principalship of Mahajana College in August, 1945, a good friend of mine who is himself the Head of one of the leading boys' schools, cautioned me that Headmastering was one of the most irksome and enervating responsibilities a young teacher could be called upon to shoulder. But the long and happy relationship which had existed between me and the school from the time of my school days here, the most congenial environment in which it has been my lot to work and the not uneviable record of someting attempted something done during the comparatively short period I have been in the saddle, make me look back on my work, however arduous and time consuming, with pleasurable satisfaction.

***Jeyaratnam***

***Mahajana College Carnival Souvenir 1954***

# குடும்ப உறவின் பின்னணியில் நான் கண்ட அதிபர் பெரியப்பா

திருமதி. கிருபா லோகேஸ்வரன்

அமரர். திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் எமக்கு பெரியப்பா முறை. எழுதமுன்னர் ஒரு தலையங்கம் வைக்கவேண்டுமென எண்ணி ஒருவாறு மேற்கண்ட தலையங்கத்தை தயார் படுத்திக்கொண்டேன். இனி ஒருவாறு எழுத வேண்டுமே? ஒவ்வொருவரும் பலவாறு பல கோணங்களில் எழுதுவார்கள். ஆகவே என்னாலியன்றளவு அன்னாரைப்பற்றி ஓரிரு விடயங்கள் எழுதக் கடமைப்பட்டுள்ளேன். அமரர் தெ. து .ஜெயரத்தினம் அவர்கள் எங்கள் குடும்பத்துடன் பெரியப்பா என்ற முறையில் மிகவும் நெருங்கிப் பழகியிருக்கிறார்கள் என்ற அடிப்படையில் மகாஜனாக் கல்லூரியில் படித்தவர் என்ற முறையிலும் சில வரிகள் எழுத முடிகின்றது.

எனது தந்தை அமரர் தனபாலசிங்கம் (கிச்சான்) அவர்களுக்கு அமரர் ரி.ரி.ஜெயரத்தினம் அவர்கள் அண்ணை முறை, எனது தந்தையை யாவரும் கிச்சான் என்றே அழைப்பார்கள். எனது தந்தை மலேசியாவிலே பிறந்தார். பின்னர் சிறுவயது காலத்தில் தெல்லிப்பழை வந்து பின்னர் இங்கேயே திருமணம் செய்து கொண்டு வாழலானார். மலேசியாவில் இருந்த காலத்தில் இருந்தே எனது தந்தையை கிச்சான் என்றே செல்லமாக அழைப்பார்கள். இன்று பெரியப்பாவும் எனது தந்தையும் இப் பூவுலகில் இல்லாவிடினும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பெரியப்பாவும் எனது தந்தையை கிச்சான் என்றே அழைப்பார். பெரியப்பாவும் மூன்று பேர் உள்ள குடும்பத்தில் அவர் மூத்தவர். அவரது தந்தையால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட மகாஜனாக் கல்லூரியிலேயே தனயனும் ஆசிரியராக இருந்து அதிபராகவும் சேவையாற்றினார். பெரியப்பாவினது குடும்பமும் எமது குடும்பமும் அந்நாளில் அந்நியோனியமாக வாழ்ந்து வந்தோம். அவர்கள் வாழ்ந்த காலத்தில் அடிக்கடி அப்பாவும் அவர்கள் இல்லத்திற்குப் போய் வருவார். அதேபோல் பெரியப்பா குடும்பத்தினரும் அடிக்கடி எம்மிடம் வந்து உறவு கொண்டாடினர்கள்.

அப்பாவும் அப் பாடசாலையில் படித்து வெளியேறிய பின்பும் மகாஜனாக் கல்லூரிக்கு சென்று பெரியப்பா வுடன் கல்லூரியை மேன் மேலும் எப்படி பெரிய கல்லூ ரியாக தரமுயர்த்தலாம். கட்டணங்களை மேலும் கூட்ட என்ன செய்யலாம் மற்றும் விஞ்ஞான வகுப்புகளுக்கு வேண்டிய உபகரணங்களை எப்படி வாங்கலாம் என்பதாகவே அவர்களது ஆலோசனைகள் இருக்கும். குறிப்பாக சொன்னால் பெரியப்பாவின் சிந்தனைகள் சதா பாடசாலையைப் பற்றியதாகவே இருந்தது.

பெரியப்பா தனது பராய வயது வந்ததும் இராணி ரட்ணம் அவர்களை மணமுடித்தார். அதன் பின்னரும் அவரது மனைவியும் மகாஜனாவின் வளர்ச்சிக்கு அவருக்குக் கிடைத்த சொத்து என்றால் மிகையாகாது. பத்தாவிற்கு ஏற்ற பதிவிரதை ஆமாகில் எத்தாலும் கூடி வாழலாம் என்ற பட்டினத்தாரின் கூற்றிக்கு இலக்கணமாய் கருத்தொருமித்த குடும்பமாய் பெரியப்பாவின் செயல் திட்டத்திற்கு எல்லாம் உறுதுணையாக விளங்கினார். ஏனென்றால் உங்களுக்குத் தெரியும் மகாஜனா பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் திருமணமான பின்னர் சிலருக்கு சிந்தித்து செயலாற்ற முடியாது. ஆனால் அவர்களது வாழ்வில் அப்படியிருக்கவில்லை. பொது வாக கூறுவார்கள் ஒரு ஆண் மகனின் வெற்றிக்குப் பின்னாலே ஒரு பெண் இருப்பாள் என்று. அது

போலத்தான் இங்கேயும் யாரும் மறுக்க முடியாது.

பெரியப்பா மகாஜனாவின் அதிபராய் இருந்த காலத்திலேயே எனது தந்தையும் சிறுவயதிலிருந்து அங்கேயே கல்வி கற்றார். குறிப்பாகக் கூறினால் கல்வி, நற்பழக்க வழக்கம் சமய வழிபாடு, யாவும் பெரியப்பா மூலமே கற்றுக் கொண்டார். அப்பா மாத்திரமின்றி மகாஜனாவில் கல்வி கற்ற அனைவரும் நற்பண்புடன் திகழ அவரே வழிகாட்டியாகவும் இருந்தார். இன்னும் மாகாஜனாவில் கல்வி கற்ற மாணவர்கள் சமுதாயத்தில் திறம்பட வாழ்வதற்கும் சான்றோர்களாக தலை நிமிர்ந்தது நடப்பதற்கும் அவர்கள் தமது பிள்ளைகளையும் நல்ல முறையில் வளர்ப்பதற்கும் பெரியப்பாவிடம் கற்றவை தான் என இன்றும் கூறிக் கொள்ளும் போது நான் பெருமிதம் அடைகிறேன்.

அவர்களது காலத்தில் மகாஜனா சிறிய பாடசாலை யாகவே இருந்து வந்தது. அப்பாடசலையை சிறந்த கல்லூரியாக தரமுயர்த்த வேண்டும். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் தமது உயர்தரக் கல்வியை அங்கேயே கற்ற வேண்மென்றும் பெரியப்பா அவர்கள் மலேசியா நாட்டிற்குச் சென்று சிங்கப்பூர், கோலாலம்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கிருந்த நண்பர்களிடமும் உறவினர்களிடமும் மகாஜனாவின் நிலைமையை விளக்கி பணம் சேகரித்து வந்து மகாஜனாவை புது மிளிர்வுடனும் புதுப் பொலிவுடனும் திகழ புதிதாகக் கட்டடம் அமைத்து ஆரம்பப் பாடசாலையாகவிருந்த மகாஜனாவை கல்விப் பொதுத்தராதர உயர்தர உயர் வகுப்பு வரை மிளிர அயராது பாடுபட்டார். அந்நேரத்தில் அவருக்கிருந்த பிரச்சினைகள், துன்பங்கள் யாவற்றையும் உடைத்தெறிந்து மகாஜனா மேல் தனது உயிரையே வைத்திருந்தார். எனக்குத் தெரியாத சில விடயங்களை அவரோடு அந்நேரத்தில் உதவிக்கரம் கொடுத்து உதவிசெய்தவர்களுக்கு நன்கு தெரியும். அதிகமானோர் உலகின் ஒவ்வொரு பாகங்களில் புலம் பெயர்ந்திருப்பார்கள். இன்னும் சிலர் இப்பூவுலகில் இருந்து மறைந்திருப்பார்கள். இன்னும் சிலர் இலைமறைகாய்களாக இருப்பார்கள். இன்னும் சிலர் இம்மலரை வெவ்வெறு கோணங்களில் சிறப்பிப்பார்கள்.

ஒரு மனிதன் இவ்வுலகில் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல. தான் வாழ்ந்த சமூகத்திற்கு எவ்வாறு தொண்டாற்றினான் என்பதே முக்கியம். இதற்கு எடுத்துக் காட்டாய் **"என் கடன் பணி செய்து கிடப்பதே"** என்றே உயிர் மூச்சோடு உறங்கி விட்ட பெரியப்பா எம்மிடையே வந்துதித்து மகாஜனா செய்த தவப் பயன் என்றே கூறலாம். பெரியப்பா மேற்படி செய்ய பலாபலன் காரணமாக மாணவர்கள் பலர் திறம்படக் கல்விகற்று உயர் வகுப்புகளில் நல்ல புள்ளிகளைப் பெற்றுசர்வகலாசாலை வரை சென்று தமது பட்டப் படிப்புக்களை முடித்து சமுதாயத்தில் நற் சான்றோராகவும் பட்டதாரிகளாகவும் வெளியேறக் காரணமாய் விளங்கினார்கள். மலேசியா சென்று வந்த பெரியப்பா மகாஜனாவின் வகுப்பறைக்கான கட்டடம் நிறுவுவது மட்டுமின்றி புதிதாக மைதான மண்டபத்தையும் இன்னும் புதிதாக வகுப்பறைகளையும் நிறுவித் தரமுள்ள கல்லூரியாக உருவாக்க அல்லும் பகலும் அயராது பாடுபட்டார். வீட்டில் அவர் இருக்கும் வேளைகளில் நண்பர்கள் உறவினர்கள், சக ஆசிரியர்கள் அவரிடம் போனால் எப்போதும் மகாஜனாவின் வளர்ச்சி பற்றியே உரையாடுவார். அவருக்கு உறுதுணையாக மகாஜனா ஆசிரியர்களும் அந்நேரத்தில் உறுதுணையாக விளங்கினார்கள் என்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டும். அப்போதைய ஆசிரியர்களை தனித்தனியாக கூறமுற்பட்டால் பல பேருடைய பெயர்கள் எனது ஞாபகத்தில் இல்லாதபடியால் இங்கு அவர்கள் பெயர்களை குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறேன்.

நாமும் அப்பாவின் தொழில் மாற்றம் காரணமாக இலங்கையில் ஏனைய பாகங்களுக்கு அப்பாவுடன் சேர்ந்து செல்லும் போதெல்லாம் அங்காங்கு கல்வி கற்று வந்தோம். அப்படியிருந்தும் 1970ம் ஆண்டில் எமது பட்டப்படிப்புக்கான கல்வியை தொடருவதற்குரிய நேரத்தில் மகாஜனாவில் சேருவதற்கான ஒழுங்குகளை அப்பா உருவாக்கி வைத்தார். அதனாலும் அங்கு பெரியப்பாவினது செயல்திறனால் மாணவரிடையே புரிந்துணர்வு அன்பு பண்பு, ஐக்கியம் போன்ற நற்பண்புகளையும் பெரியப்பாவினது ஆங்கிலப் புலமை காரணமாக நாமும் ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெறுவதற்கு பெரியப்பா தான் காரணமாய் இருந்தார் என்றால் அதைவிடச் சான்று எதுவும் தேவையில்லை.

மேலும் நாம் தெல்லிப்பழையில் இருந்த காலத்தில் ஒவ்வொரு கிழமையும் பெரியப்பா வீட்டிற்கு போவது வழக்கம் அந்நாட்களில் போகும் வேளைகளில் எல்லாம் மகாஜனாவை எப்படி பெரிய கல்லூரியாக்கலாம் வேறு தன்னலியன்றவரை என்ன செய்ய வேண்டும் என்றவாறு தான் அவரது கதைகள் இருக்கும். இப்படியாக அவரது மூச்சும் செயலும் மகாஜனா மகாஜனா என்றிருந்த வேளையில் 1970 ம் ஆண்டளவில் கல்லூரியிலிருந்து ஒய்வு பெறலானார். அவர் ஒய்வு பெற்ற பின்பும் மகாஜனாவில் சேவையாற்றிய அதிபர்களோ ஆசிரியர்களோ மகாஜனா பற்றிய என்ன

விடையமானாலும் பெரியப்பாவைச் சந்தித்துத் தான் முடிவு எடுப்பார்கள். அப்படியாக அவர் மகாஜனாவிற்கு செய்த சேவைகள் அன்பு மரியாதையின் பொருட்டே அப்படி நடத்திருப்பார்கள் என்று நான் அப்போதும் இப்போதும் எண்ணுவதுண்டு.

இவ்வாறு பெரியப்பாவும் தனது மூத்தமகளின் திருமணத்தின் பின்னர் தனது இரண்டாவது மகள் ஜெயவாணியை (பாமா) டாக்டர். மகேஸ்வரன் என்பவருக்கு 1979-ம் ஆண்டளவில் திருமணம் செய்து கொடுத்தார். அவர்களும் திருமணத்தின் பின்னர் திருகோணமலை வைத்தியசாலைக்கு சேவை நிமித்தம் காரணமாக அங்கு சென்றிருந்தனர். ஆனால் பெரியம்மா (திருமதி. இ. ஜெயரத்தினம்) வும் சில நாட்கள் அவர்களோடு கொஞ்சக்காலம் இருந்துவிட்டு வரலாம் என்றுபோயிருந்தார்கள். அந்நாட்களில் பெரியப்பா தனது தெல்லிப்பழை இல்லத்தில் குடும்ப சகிதம் இருந்து வருகையில் திடீரென பெரியப்பாவும் நோய்வாய்பட்டு நான்கு நாட்களில் மிகவும் இளைத்துப் போய் காணப்பட்டார் அதேநேரம் பெரியப்பா கந்தசட்டி விரதத்தையும் தவறாது அனுட்டித்துக் கொண்டு வந்தார். கந்தசட்டி கடைசித் தினமன்று இயலாத நிலையிலும் தனது பூஜை வழிபாட்டை முடித்துக் கொண்டு தனது இல்லத்தின் முன் விறாந்தையில் உள்ள கதிரையில் இருந்து கொண்டு மூத்தமகள் பவானியுடனும் இதே வேளை எமது அப்பாவும் (அமரர். திரு. தனபாலசிங்கம்) முதல் நாளே வழமை போல் வேலையிலிருந்து விடுப்பில் வந்திருந்தவர். அவரும் (அப்பா) அங்கு கதைத்துக் கொண்டிருந்த போது திடீரென பெரியப்பாவும் நோய் காரணமாக இளைத்துப்போயிருந்தபடியால் அவர் இருந்த கதிரையிலேயே நித்திரையாகிவிட்டார். (அப்போது அப்பாவும் மூத்தமகள் பவானியும் அங்கிருந்தார்கள் என்று ஏற்கனவே கூறியிருந்தேன்.) அப்போது பெரியப்பாவின் மூத்த மகள் பவானி பெரியப்பாவை எழும்பி உள்ளே வந்து கட்டிலில் படுக்கும்படி அழைத்தார் ஆனால் பெரியப்பாவோ வழமைபோல் எழும்பவில்லை. பெரியப்பாவோ தன்னாலே இயலவில்லை என்றோ ஏதாவது தனக்கு கடுமையாக, எதும் செய்கின்றதோ என தெரிவிக்காமல் சிவபதமாகிவிட்டார்.

ஆமாம், கடைசி நேரத்தில் தனது மூத்தமகள் பவானி பேரப்பிள்ளை, அன்பும் பாசமும் கொண்டு வளர்த்த எங்கள் அப்பா சகிதம் பெரியப்பாவினது ஆத்மா சாந்தியடைந்தது. மகாஜனாவை நாளும் பொழுதும் சிந்தித்து மகாஜனாவிற்காகவே தன் உடல் பொருள் ஆவி அத்தனையையும் ஈர்த்து கொண்ட மகாஜனாவின் மிகப் பெரிய தூண் சரிந்து விழுந்தது என்றே யாவரும் எண்ணினார்கள்.

அவரது இறந்த செய்தி கேட்டு அதிபர்கள், ஆசிரியர்கள், மகாஜனாவில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள், பழைய மாணவர்கள், அயலவர்கள், ஊரார், உற்றார் உறவினர்கள் வெளி நாடுகளில் இருக்கும் பழைய மாணவர்கள் மெல்ல மெல்ல தெல்லிப்பழை கிராமத்தில் யாவரும் இடி விழுந்த நிலையிலெ பதறி அழுதார்கள், பெரியப்பாவின் சேவை செய்ய கரங்கள், மகாஜனா கல்லூரி வளவில் நடந்து திரிந்த கால்கள் விறைத்தும் பாடப் புத்தகங்களைப் பார்த்த கண்கள் மகாஜனாவில் மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தந்த திருவாய் எல்லாமே இறுக மூடிக் கொண்டன.

பெரியப்பாவின் தந்தையாரின் சிலை யொன்று கல்லூ ரியின் (மகாஜனா) முன்னே நிறுவப்பட்டுள்ளது என்பது யாவருக்கும் தெரியும் அதே போல பெரியப்பாவினது உருவமும் (சிலை) முன்னால் இந்நாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், அயலவர்கள், உறவினர்கள் தெல்லிப்பழை கிராம மக்கள் அனைவரினதும் மனதில் நீங்கா நினைவாக நிறுவப்பட்டுள்ளது. மகாஜனாக் கல்லூரி இருந்து கொண்டிருக்கும் வரை அன்னாரது (பெரியப்பா) நாமமும் எல்லோருடைய மனதிலும் இறவாப் புகழ் பெற்று விளங்கும். எனக்குப் பெரியப்பா என்ற முறையில் அவரது சேவையை நான் விதந்து எழுதுவது பண்பாகாது அவரது ஆத்மாவும் அதை விரும்புமோ எனவும் தெரியவில்லை.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற வார்த்தைகளின் வாக்கிற்கிணங்க மகாஜனாவில் மத்திரமன்று நீங்கள் எங்கு இருப்பினும் கற்கை நன்றே என மகாஜனாவை விட்டு நீங்கிச் சென்றுவிட்டர் பெரியப்பா. அவரது சிந்தனைகள் யாவும் மாணாக்கர்கள் கல்வியில் சிறந்தோங்க வேண்டு என்பதே ஆகும். இன்னும் அதிகமாக பெரியப்பா செய்த சேவைகளை அப்பாவிடம் கேட்டு எழுதுவதற்கு இன்று அப்பாவும் கூட இப் பூவுலகில் இல்லை. அவர் கனடாவில் இறைபாதம் அடைந்தார் என்பது யாவருக்கும் தெரிந்ததே.

நாட்டில் முன்னர் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இடம்பெயர்ந்து மீண்டும் மகாஜனா தனது சொந்த இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது. மகாஜனா மேலும் வளரவும் சிறம்பெற்று விளங்கவும் எனது அப்பாவினதும் பெரியப்பாவினதும் சார்பான ஆசிகள் என்றும் தொடர வாழ்த்துகள்

# மகாஜனாவின் ஒளி!
# "வரலாறு ஒருவரை உருவாக்கியது அவர் வரலாற்றை உருவாக்கினார்"

**அம்பனை க. முத்துலிங்கம்**

நாடு ஆங்கில மொழியை ஆட்சிமொழியாகவும் நிர்வாகமொழியாகவும் கொண்டிருந்த காலம். அநேக பாடசாலைகள் ஆங்கில மொழியை கற்கை மொழியாகக் கொண்டு கற்பித்தனர். தெல்லிப்பழை சூழலில் உள்ள ஊர்களில் ஏழைப்பிள்ளைகள் ஆங்கிலக் கல்வி பெறமுடியாத நிலையைக் கண்டார் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள். அவர்கள் அம்பனை வயல் காற்றும், அழகிய வாகை மரங்கள் சூழலில் மகாஜனா ஆங்கில உயர் பாடசாலையை 1910ம் ஆண்டு நிறுவி, அதன் முதல் தலைமையாசிரியராக பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து உறவினரான கவிஞர் சின்னப்பா அவர்கள் பாடசாலையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். கவிஞர் சின்னப்பாவின் பின் 1945ம் ஆண்டு அதிபர் தெ. து. ஜெயரத்தினம் அவர்கள் தலைமைப் பொறுப்பில் அமர்ந்தார்கள். இளம் வயதில் பொறுப்பு மிக்க பதவியில் அமர்ந்து, ஒவ்வொரு மணித்துளியும் மகாஜனாவை தன் உயிரிலும் மேலாக மனதில் கொண்டு தந்தை அளித்த மூலதனத்தை ஒவ்வொரு அடியாக உயர்வு நிலைக்கு எடுத்துச் சென்று சிறப்படைந்தார். அன்றுமுதல் மகாஜனாவின் எழுச்சி ஆரம்பமாகியது.

புதியதொரு வாழ்க்கை நிலைக்கு ஏழை மாணவர்கள் மறுமலர்ச்சி பெறும் அடித்தளம் அமைக்கப்பட்டது. பல ஊர்மாணவர்கள் பல மைல்கள் நடந்து வந்து கற்கத் தொடங்கினார்கள். மகாஜனாவின் கல்வித்தளம் விரிவடையத் தொடங்கியது. அதிபர் பதவி ஏற்ற அடுத்தாண்டு மகாஜனாவில் உட்புகுந்தேன். ஏற்கனவே மகாஜனா மண்ணில் 1941ம் ஆண்டு காலைப்பதித்து, அதன் அருகாமையில் அதிபரின் முகாமையில் உள்ள சரஸ்வதி வித்தியாலயத்தில் தமிழ்மொழி மூலம் ஆரம்பக் கல்வியைப் பெற்றேன். சரஸ்வதி வித்தியாலயம் 1948ம் ஆண்டு மகாஜனாவுடன் இணைக்கப்பட்டது.

அதிபர் பதவி ஏற்ற காலத்தில் பல பிரபல கல்லூரிகளின் அதிபர்கள் அனுபவமிக்கவர்களாகவும், ஆளுமையும் நிர்வாகத்திறமையும் கொண்டவர்களாக இருந்துள்ளனர். கல்லூரிகள் நிதிவளமும் போதிய கட்டிட வசதியுடையனவாகவும் இருந்தன. அத்தனையும் அதிபரின் மகாஜனாவின் இலட்சியக் கனவுக்குச் சவாலாக அமைந்திருந்தும் அதற்கு மேல் செல்லக்கூடிய ஆற்றல் அர்ப்பணிப்பும் அவரின் மனதில் குடிகொண்டிருந்தது. அதிபர் பதவி ஏற்ற காலகட்டத்தில் கலைத்துறைப் பாடங்கள் அதிமுக்கியமாக இருந்தது. அறிவியல் துறைக்கு தகுந்த ஆசிரியர்கள் இல்லாமையால் அப்பாடங்களைக் கற்பிக்க முடியாமல் இருந்தது. அதே நிலை அநேக கல்லூரிகளிலும் காணப்பட்டது, இந்த நிலைக்கு நல்லதொரு முடிவை எடுப்பதற்காக இந்தியா சென்று நான்கு நல்ல மணியான ஆசிரியர்களை தெரிவுசெய்து அழைத்து வந்தார். அவர்கள் தான் திருவாளர்கள் வாறியர்(Warrior), சாமுவேல் (Samuel), இடிக்குலா (Idicula), ஞானராஜா (Gnanarajah) ஆகியோர். இவர்களின் வருகையின் பின் பல்கலைக்கழக அறிவியல்

பீடங்களுக்கு தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு அதிகளவு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதிபர் எப்பொழுதும் எதையும் பல கோணத்தில் உற்று நோக்கி முடிவுசெய்தல் அவரது ஆளுமையின் சிறப்பு.

சகல துறைகளிலும் கல்வி வளர்ச்சி சிறந்த நிலையில் முன்னேற்றம் கண்டது. ஒவ்வொரு பகுதிக்கும் சிறந்த ஆசிரியர்களைத் தெரிவு செய்து அல்லது வேறு இடங்களில் இருந்து அவர்களின் விருப்பத்துடன் கல்லூரிக்கு மாற்றம் பெறச்செய்தார். கொழும்பில் இருந்தும் யாழ்ப்பாணக் கல்லூரிகளில் இருந்தும் ஆசிரியர்கள் முழு மனதுடன் பணியாற்ற வந்தனர். புலவர் சிவபாதசுந்தரனார் கூற்றுக்கமைய அவர் ஒரு சிற்பிதான் என்பதைப் பல வழிகளில் நிருபித்தார். அன்று யாழ்ப்பாணத்தில் சித்திர ஆசிரியர்கள் இருந்தும் மாத்தளையில் சித்திர ஆசிரியராக இருந்த உபசேன நிமால் அவர்களை தேர்வு செய்தது, சிங்கள மக்களின் கலைவடிவங்களையும், சித்திர நுணுக்கங்களையும் மாணவர்கள் அறிந்து கொள்வதற்கு. ஒவ்வொரு நுண்கலைப் பிரிவுக்கும் தொழிற் கல்விக்கும் அந்தந்தப் பிரிவுகளுக்கேற்ற சிறந்த ஆசிரியர்களை நியமனம் செய்தார்.

ஒரு கல்லூரியின் சிறப்பு கல்வி ஊடாக காண்பிக்கப்படும் திறமை மட்டும் சிறப்பல்ல. அது கல்வி சாரா வெளிக்கள விடையங்களிலும் தங்கியுள்ளது. அதற்காக விளையாட்டு ஆசிரியர்கள், பயிற்றுனர்கள் எங்கிருந்தாலும் எக்கல்லூரி பழைய மாணவர்களாக இருந்தாலும் அவர்களின் அனுபவங்களை, சாதனைகளை மதிப்பிட்டு தெரிவு செய்வதில் கூர்மையாக இருந்தார். இதனால் மாணவர்கள் பலதுறை விளையாட்டுகளில் சாதனை நிகழ்த்துவதற்கும் பெருமை பெறுவதற்கும் காரணமாய் இருந்தார். இதனால் இன்றும் மகாஜனாவின் விளையாட்டுத்துறையின் சாதனைகளையும், விளையாட்டு வீரர்களைப் பற்றியும் நினைவு கூரவைத்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் மாணவர்கள் தொகை வருடத்துக்கு வருடம் அதிகரித்த வண்ணம் இருந்தது. ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதற்கேற்றவாறு கூடியது. இதற்கமைய கல்லூரியின் சுற்றாடலில் உள்ள காணிகளைப் பெற்று கட்டிட வசதிகளை விரிவாக்கினார்.

அதிபரின் காலத்தில் நாடகங்களின் மூலம் நிதி சேகரித்தது உண்டு. அந்த நாடகங்களுக்கு அதிகமாக அனுமதிச் சீட்டுக்கள் விற்பனை செய்த வகுப்பு மாணவர்களை அனுராதபுரம் கூட்டிச் சென்று, வரலாற்று இடங்களைப் பார்வையிட வழி செய்தார். இதன் மூலம் ஒரு திட்டம் இருவித பலனை அளித்தது. நாடகங்களை எழுதி அரங்கேற்றுவதில் சிறந்த ஆசிரியரான நவாலியூர் வி. செல்லத்துரை அவர்களிடம் அப்பணியை ஒப்படைத்தார்.

1954ம் ஆண்டு கல்லூரியின் காணிவெல் பொருட் காட்சி யாழ்ப்பாண முற்றவெளித்திடலில் ஒரு மாதகாலத்திற்குச் சிறப்பாக நடைபெற்றது. அதிபரும் ஆசிரியர் குழுவும் மிகவும் சிறப்பாக திட்டமிட்டு நடாத்தினர். மாணவர்கள், தன்னார்வத்தொண்டர்கள் இரவு பகல் பாராமல் பணி செய்தனர். அக்காலத்தில் பத்து மைல்களுக்கு அப்பால் காணிவெல் நடாத்தியது ஒரு சாதனையாக இருந்தது, அத்துடன் முதல் முதலாக பல நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மேலும் விலை மதிப்பு மிக்க பெஜோ கார் (Paugeot – France) அதிக்ஷ்ட லாபச்சீட்டு மூலம் பரிசளிக்கப்பட்டது.

எமது கல்லூரியின் இலட்சனையை நோக்கும் போது அவரது தெளிந்த அறிவினையையும், நுண்ணிய சிந்தனையையும் அறியலாம். அதில் அமைந்துள்ள வாசகம் "உனை நீ அறி" . . . மாணவனே ஏன் இங்கு வந்தாய் என்பதனை நீ அறிந்து கொள். அதற்கமைய அறிவைப் பெற்றுச் செல்.

அதிபர் காலம், நேரம், ஒழுங்கு விடயங்களில் மிகவும் கண்டிப்பானவர். அதை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் அக்கறை உடையவர். நிறுவியவர் தினம் விளையாட்டுப் போட்டி ஏனைய விசேட சிறப்பு நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நேரத்திற்கும் வகுத்த அட்டவணைக்கமைய நிறைவு பெறவேண்டுமென்பதில் மிகவும் கவனம் எடுத்துக் கொள்வார். மாணவர்களின் ஒழுக்கத்திலும் ஒழுங்கு முறைகளிலும் கூடிய கவனம் காட்டினார். மாணவர்கள் யாராக இருந்தாலும் தவறுகளுக்கு தண்டனை அளிப்பதில் எந்த விதமான பாராபட்சமும் காட்டியதில்லை.

அதிபரின் பல்துறை அறிவும் அதனைச் செயல் படுத்தும் முறையும் அற்புதமானது. இன்று அகிலமெல்லாம் "மகாஜனா" என்று ஒலிக்கச்செய்த பெருமை அவரையே சாரும். தனித் திறமையும் தன்னடக்கமும் கொண்டு எந்நேரமும் புன் முறுவலுடன் தாமரைமலர் போன்ற பொலிவுடன் காட்சி அளித்த அறிவுச் செம்மலை மகாஜனங்கள் என்றும் மனதில் பதிவுக் கொள்வார்கள்.

# Mr. T.T.J - The One Beyond Measure

***N. R. Kanthiah***

Some men are born great, some acquire greatness, some have greatness thrust on them. Mr. Jeyaratnam had been a three-in-one phenomenon. Born in the hamlet of Tellippallai, step by step through his loving creativity, nuanced craftsmanship, tolerant wisdom and all devouring Largeness of heart built a Peoples' Institution – Mahajana – that bestrode the little parish, bounded out to dominate the province, and then the teardrop of our beloved Sri-Lanka, and finally crossed the vast oceans and the continents, speckling the round terra firma with stars of her handiwork – the Mahajans – contributing their best in different capacities from the noblest profession to the ordinary nuts and bolts minders.

How did this miracle happen? Springing from the loins of a courageous, determined, and self-sacrificing soul – Pavalar – who led his band of the faithful from the American Mission School and managed to survive in spite of continuous starvation of the legitimate grant; the father bequeathed the son the greatness of vision that was not limited by narrow walls of domesticity, provincialism and penny pinching. Vision is the one thing and reality is another. The young man had the wherewithal within to spin out the dream fed by the dad, who had left the scene after the Long Struggle.

With the bestowal of the genetic ingenuity of the father, the young man had the genius and imagination to fly high and pluck one bright star after another from the diamond spanked firmament of his ideal world to decorate the embodiment of his soul's joy: Mahajana. Though Mr. Jeyaratnam moved among us, he was someone special. He was a Renaissance man, the one in many or rather many in one. In him was forged the suavity and grace of the west with the natural spontaneity and overarching beauty of the Indian culture. This magnetic combination is evidenced in two of his choices. The college motto "Know Thy Self" which is the Hellenic ideal counterpointed with the Shakespearean maxim uttered by Polonius. This reflects his understanding of western values. The East is represented by the Cosmic Dancer, Natarajah, enshrined in the college temple.

To realize the interconnectedness of the purity of the self with Thillai Natarajah is apparently reconciling two irreconcilables. But to Mr. Jeyaratnam's metaphysical mind it was not a possibility but the basis of Vedanta. In fact, according to the great quantum physicist Fratjof Capra: '' the Hindu Cosmic Dance of Shiva is the most perfect personification of the dynamic universe where everything is fluid and ever-changing."

To one who comprehends the oneness of everything, education is something more significant than book learning. It is really an initiation into the sacredness of the process of steady communion between the teacher and the taught, leading to great inner transformation. The Institution his dad and he nurtured is really a Temple of learning driven by a Power larger than life. If not how could the "thinnai" (verandah) school Pavalar started, which the son took control over in 1945 – the nondescript Mahajana High School – within three decades blossom into the top institution in Sri Lanka in 1976, with 81 students from the Advanced Level Class securing 4 passes at the University Admission exam and another 35, 3 passes. It is a tribute to the genius and magnanimity of the heart of a great being and the blessings bestowed by the Cosmic Dancer. Generations to come people would hardly believe that there was in Mahajana a great one who with his winsome smil e could bring rain to the parched land and make pundits out of clods. Some of us were fortunate enough to have been alive, to have walked with him, talked with him, and managed to catch a bit of him and made our life richer and more meaningful than what it had been.

*Religion is the bond which holds an individual to his creator. If we accept that life with all its complexities, is god centered and that one of the aims of Education is the interpretation of llife, we see the close correlation between Education and religion. We do realise the importance of Education being religion centered It is therefore our duty, no less than that of parents, to see that the growing minds of our pupils are steeped in our time honoured religions concepts and practices.*

***- Jayaratnam***
***Founders Day***
***Report 24th June 1955***

# THE CROWN JEWEL OF SELFLESS SERVICE.

***Arumugam Mahendran***

Our Principal Hon MR.T.T Jeyaratnam was one of the greatest sons of Tellippalai. I was very fortunate to have witnessed his rise and his great contribution to the massive development of Mahajana College from 1950 to 1962.

I remember him from the day I started schooling at Mahajana college. He walked to school at that time. He was a well dressed young man with quick and brisk walk. Then he came in his first car a Morris CL234.

My father who was a teacher at Mahajana College told me that both of them were very close friends and they used to spend time together in the evenings. He said Mr.T.T.Jeyaratnam was a very clever, smart, sportive and energetic,fun loving young man. His life style changed when his uncle

Mr.S.Chinnappa died and he took the full reponisibility of Mahajana College. From that time onwards, his focus of life was Mahajana College.

I remember the time when the college was a " T" shaped building with principal's office on the side and the front fence with tin sheets. Principal started many ambitious and accelerated programs for the expansion of the school at different stages in all the necessary fields to give the students the best in Education, Sports and Fine arts.

To achieve his great goal, he reached for the whole hearted support of the teachers at that time and kept them as close advisors. He carefully selected the new teachers who were experts on their field. He made every body feel that they were very important, their services were very valuable and greatly appreciated.

My father was approached by him to start the first canteen in the college. He was given the funds and allowed to run the canteen the way he wanted. I also remember when he was recruiting Science Teachers from India, one of the teachers Mr. Idicula was staying in our house.

The College started expanding by acquiring more available lands in all directions. The direction of the playground was changed and made bigger. The ground level was raised by filling with more soil to avoid flooding. The students raised the money for this project. Once the temporary stage that was erected for the founders day celebration was blown off by heavy wind, this resulted in the construction of the present open air stage.

The biggest of all the project was the construction of the Assembly Hall. He organized

a carnival and a raffle (with two new cars as prizes) in Jaffna town to raise the necessary funds for this project.

He even went to Malaysia to collect more funds with the support of his friends and relations. The opening ceremony of his dream project, the assembly hall took place during the Golden Jublee celebration in 1960.

As the leader of the scout troop I went round the carnival grounds with the Chief guest and our principal to view the exhibits. During these visits, I

noticed that he was very happy and proud to elaborate the achievements and the progress of the College to the guests. He never used the word "I"

But always used the word "we". He always maintain this principle of

"Nann enru solvathai, Namm enru sonnal , Naadu ellaam valuum.

Our Principal had the rare distinction of identifying of the hidden talents and capabilities of the students. He brought them to light and gave them the directions and guidance accordingly. I am one of those who benefited by this approach. I used to be shy and nervous when I was growing up. He was my English teacher. I always admired his high command of English and his pronunciation of words in English. He coached me in English elocution and English dramas. He always gave me a push and encouragement by saying "you can do it". He said the same thing when I was a bit nervous and reluctant to address the College assembly after our trip to Japan to represent

Ceylon at the Asian Scout Jamboree in Japan.

His great success at Mahajana was due to his self confidence, his vision of the future, excellent support of the teachers, encouragement from the villagers and the endless support from his devoted wife and above all the unity he created with his problem solving techniques. The lesson from his dedicated life is "United we stand, Divided we fall" The Mahajana he created is an invisible force that connect all the students around the world as one "Mahajanans".

He continued to serve the community even after retirement. He was the president of the Tellippalai Durga Amman Temple. During his time, many expansion work were done.

I got another chance to associate with him. He was approached by two of his old students to start The Lion's Club of Tellippalai and to be the president. He refused to their suggestion first. Later under pressure by them, he told "if Mahendran is the Secetary , I will be the President".

I asked him in one of the club meeting "Sir, how is the College now?" . He replied with his beaming smile " now I am happy that Kanagasabapathy is there". Within a short time after this meeting, he had a sudden death. His last photograph was taken in that Lion's club meeting. After his death, I thought principal died with full satisfaction that the College was in good hands and in a progressive path.

The Lion of Tellippalai died as Lion Mr.T.T.Jeyaratnam.

Our principal was,a highly respected person, a leading Educationist,

a devoted public servant, a passionate religious leader and a true human being who never lost his common touch.

He elevated himself to the supreme position showing the path to the world for many children with the greatest gift of all, GOOD EDUCATION.

"Thannalamatta Thalaivan Jeyaratnam" will always remain as a "Rathinam", The Crown Jewell of Selfless Service.

## மகாஜனாவின் மகுடவாசகம்

# "KNOW THYSELF"

**நா.கணேசபிள்ளை**

மகாஜனாவின் சிற்பி என்று போற்றப் படுபவர் எமது மதிப்பிற்குரிய முந்நாள் அதிபர் திரு. தெ.து.ஜெயரத்தினம் அவர்கள்.இவரே இந்த மகுடவாசகத்திற்கும் காரணகர்த் தாவுமாவார். பல கல்விமான்களின் காலத்தில் மகாஜனாவின் சிற்பியாகிய அதிபர் அவர்களும் கல்வி உலகில் பவனி வந்ததுடன், கல்வி நிர்வாகச் செயற்பாட்டில் ஓர் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தவர். அதிசிறந்த அதிபராக மிளிர்ந்தமைக்கான காரணம் யாதென ஆராய்கிறபோது, அவரது அதி உச்சமான ஈர்ப்புச்சக்தியுடைய அவரது "ஆளுமையே" எனக் குறிப்பிடலாம். இவரது நடை உடை பாவனை யாவும் இத்தகைய ஆளுமைக்கு மெருகூட்டின எனலாம்.

இன்று அகில உலகிலும் மிடுக்குடன் பவனி வரும் எமது "மகாஜனா" சமூகத்திற்கு முக்கிய மூலகாரணமாக அமைவது அதிபர் அவர்களால் கைக்கொள்ளப்பட்ட "ஒழுக்கநெறி" என்றால் மிகையாகாது. ஐம்பதுகளில் அறுபதுகளில் கற்ற சகல மாணவரையும் ஞாபகப்படுத்தி அழைப்பார்.அவசியமல்லாது மைதானத்திற்குக் குறுக்கே போவது போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளைத் தடுத்து, இயல்பாகவே சீடத்துவத்தைச் சிறப்பாக நிலைநாட்டியவர். அதிபர் இல்லாத வேளையிலும் ஒரு கல்லூரி இயல்பாகவே இயங்கினால் அக்கல்லூரி ஒழுக்க நெறிக்கு உட்பட்டது எனக் கூறுவார்கள். இதனால் கல்லூரி உயர்வடைந்தது மட்டுமல்லாமல் சமூகமும் உயர்வடைந்ததைக் கண்கூடாகக் காண்கிறோம்.

பழம்பெரும் தத்துவஞானிகளான பிளேடோ சோக்கிரட்டீஸ் போன்றவர்கள், "நீ உன்னையே அறி, உலகம் உன் வசப்படும்" என்றார்கள். எமது மகாஜனா சிற்பியும் தன்னை அறிந்து தனது சந்ததியினரையும் வழிகாட்டி கல்லூரிக்காகவே வாழ்ந்துள்ளார். எடுத்துக் காட்டாக எமது அதிபர் காலத்தில் கற்றவர்கள், கற்பித்தவர்கள் கல்வி நிர்வாகத்திலும் ஏனைய துறைகளிலும் பிரகாசித்துத் தம் சமூகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர், இன்றும் பெருமை சேர்த்தவண்ணம் இருக்கின்றனர்.

பார் எங்கும் பரந்து வாழும் எமது மகாஜனா சமூகத்தவர் வியந்து பாராட்டிவரும் எமது அதிபரைப் பற்றிய சில மறக்கமுடியாத சம்பவங்களைப் பார்ப்போம். உதவி பெறும் கல்லூரியாக இருந்தபோது நிதி சேகரிப்பதற்கென மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சிரமத்தைப்பாராது சென்று வந்துள்ளார். அதில் வெற்றியும் பெற்றுள்ளார். நிதி இல்லாவிடில் அபிவிருத்தியை எவ்வாறு கொண்டு நடத்துவது? அதிபரின் மனதில் கல்லூரி அபிவிருத்தி

ஆழமாகப் பதிந்திருந்தது. எதனைச் செய்தாலும் ஒவ்வொரு நாளும் காலைக்கூட்டத்தில் ஒளிவு மறைவின்றிக் கூறுவார். அவர் கூறும் நல்லுரைகள் உயர்வகுப்பு மாணவர் மனதில் ஆழமாகப் பதிந்து விடும். இக் காலகட்டத்திலேயே சகல கல்வி நிறுவனங்களையும் அரசு பொறுப்பேற்கும் விவாதம் நடைபெற்று வந்தது. எவர் எதனைக் கூறினாலும் கல்வி நிறுவனங்கள் சுயமாக இயங்கும் போதே அவை எத்தகைய குறுக்கீடுகளும் இல்லாமல் தமது பணியைச் செய்யும். இதனை தன் பூரண அனுபவத்தில் உணர்ந்து கொண்டவர் எமது அதிபர். இச்சட்டமூலம் நிறைவேற்றப் பட்டபின், அடுத்த நாள் காலைக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் தனது ஆழமான கருத்தை வெளிப்படுத்தினார். நான் பாராட்டிச் சீராட்டி வளர்த்த பிள்ளையை வேறொருவர் கையில் ஒப்படைக்க வேண்டியுள்ளது. பிள்ளை எவ்வாறு வளரும் என்பதை என்னால் உறுதி கூறமுடியாது, என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

கல்வி நிர்வாகத்தில் காலத்திற்குக் காலம் பல சவால்களைச் சந்தித்தாலும் சளைக்காது தனது பணியைச் செவ்வனே செய்வதற்கு உறுதுணையாய் அமைந்தது கல்லுரியின் மகுடவாசகமாகும். வலி வடக்கில் பல கல்லுரிகளின் மகுட வாசகங்களையும் கவனிப்போம். காங்கேசன்துறை நடேஸ்வராவின்- "நேர்மை நெறி நில்":வயாவிளான் மத்திய ம.வி- "செம்மை நெறி நில்":புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தா- "கற்றாங்கு ஒழுகுக". இவ்வாசகங்கள் கல்லூரிகளின் வளர்ச்சிக்கு ஓர் உந்து விசையை வழங்கி வருகின்றன. அத்துடன் கல்லுாரியின் விம்பத்தை சமூகத்தில் உயர்ந்த நிலையில் பேணுவதற்கு மகுடவாசகங்களும் இலச்சினையும் துணைபுரிகின்றன.

எமது அதிபர் ஓர் சிறந்த ஆங்கில இலக்கிய வாதி. ஷேக்ஸ்பியரின் நாடகங்களை நல்ல முறையில் ரசனையுடன் விளக்குவார். எங்கெல்லாம் நல்ல ஆசிரியர்கள் இருக்கிறார்களோ அவர்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுவார். இதனால் மகாஜனாவின் மதிப்பு வளர்ந்துகொண்டு சென்றது. உயர் வகுப்பு மாணவர்களை ஒன்றிணைத்து ஆங்கில இலக்கியத்தைப் போதிப்பார்.கல்வி இலக்குகளை நிறை வேற்றுவதிலும் கல்லூரியின் வளர்ச்சியைக் கண்ணும் கருத்துமாகப் பேணுவதிலும் ஓர் சிறந்த சிவ பக்தனாகவும் திகழ்ந்தார். கல்லூரியிலேயே கோவிலைக் கட்டி, திருக்கேதீச்சரம், மாவிட்டபுரம் தெல்லியூர் துர்க்கா போன்ற தலங்களில் ஒழுங்கான திருவிழாக்களையும் மாணவர்களுடன் தாமே முன்னின்று நடாத்தி இன்புற்றார். பல சைவசித்தாந்த வாதிகளின் எண்ணப்படி கல்விப் போதனையில் சமையச் சூழலை நிலையாக இடம் பெற வைத்தார்.

இத்தகைய ஒரு தலைசிறந்த கல்விமானின் நற்குணங்களை, நற்சிந்தனைகளை எமது எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து அவற்றைக் கடைப்பிடிக்க நாம் என்ன முயற்சிகளை எடுத்தல் வேண்டும்? பொதுவாக இளவயதினருக்கு இவைகள் படிப்படியாக எடுத்துக் கூறப்பட வேண்டும். மகாஜனா சமூகமும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நம்புவோம். இளமையிற் கல் அதுசிலையில் எழுத்து, என்பது போல எமது சமூகத்தின் ஒவ்வொரு குழந்தையும் அதிபரின் பொன் மொழிகள் உறுதி மொழிகளாக உள்வாங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

அண்மைக் காலங்களில் எமது சிறுவர்கள் உளத்தாக்கத்திற்கும் மனச் சீரழிவிற்கும் உள்ளாக்கப்பட்டு அவதிப்படுகிறார்கள். இவர்களைச் சீராக்கி நல்வழிப்படுத்த உடனடிக் கண்காணிப்பு அவசியம். தகுந்த உளவள நிலையங்கள்,சிறுவர்க்கான ஆலோசனை மையங்கள் தேவைப்படுகின்றன. அத்துடன் எமது நிலம், நலக்கீழ் நீர், மாற்று வழிகளில் சக்தி உற்பத்தி, போன்றவற்றில் உடனடி ஆய்வு அவசியம். அதிபரின் மகுடவாசக அறக்கட்டளை மூலம் இந்த ஆய்வினை ஆரம்பிக்கலாம்.

மகாஜனா சிற்பியாக ஒளிரும் எமது அதிபரின் முகத்தை அவரது மகுடவாசகத்தில் காண்கிறோம். அதன் உட்கருத்தை உணர்ந்து விரிவாக்கி நிலைபெறச் செய்வது மகாஜனா சமூகத்தின் நற்பணியே.

# Lives of great men all remind us

***A.Jogaratnam***

I consider it a great priviledge to say a few words about our principal late Mr.T. T. Jayaratnam. During his period as a Principal of Mahajana College, he took great strides in studies as well as in sports. Admissions to universities from Mahajana gradually increased. It was during his time in 1962 the school was in urgent need for a Physical Trained teacher.

The transfer of Mr. P. Ehamparam from Mahajana to Jaffna Hindu College in December 1962 left a void which Mr. T.T Jayaratnam found difficult to fill. Mr. Ehamparam was serving as the Prefect of games for well over ten years at Mahajana college. Besides being an extremely lovable person he was very popular with the students and teachers as well as the general public of Tellipallai if not the whole of Jaffna town. During his regime Mahajana was moulded as school with a very successful soccer team. Mr. Jayaratnam reluctantly agreed for his transfer fully realizing Mr. Ehamparam's personal problems.

He had to find a suitable replacement. The department was willing to transfer anyone of his choice from any school. There were several Physical Trained teachers interested, some of them were old students who were extremely good soccer players of their times. However Mr. T.T J preferred me over them. I am an old student of Union College, a rival institution. I never dreamt that I would be the one to fill in Mr. Ehamparam's place. The reason was revealed at my first meeting with the Principal. He was quite pleased that the soccer teams at the school are of very high standard and that T.P Pathmanathan the football coach has been doing a fine job. I joined Mahajana in January 1963 and served as Prefect of Games for nineteen years.

Mr. Jayaratnam's desire was that in the game of cricket Mahajana's standard should be raised to the level of if not better than the town schools where cricket is supposed to be their stronghold. I took to coaching the first and second eleven cricket teams as well as the second and third eleven soccer teams. It is almost at this time that Jaffna schools Hockey Association was formed and I had to take coaching Hockey teams as well. It must go to his credit of this sport loving principal that he was willing to spend any amount of money to purchase any equipment that would enhance the standard of the game. Slip board, Scoreboard are examples. He often stayed after

school hours to watch students taking practice and often offered valuable suggestions at sports committee meetings.

I feel proud to state that his ambition was fulfilled in the year 1965. Mr. T.T.J dream came true when in 1965 , Mahajana under 17 cricket team became Jaffna schools champions and he was overjoyed and Mahajanas name as a cricketing institution was well known all over. Mahajana had successfully annexed championships in Hockey and several of the team members like Vamadevarajah, Mahendra, Logasundaram and Sugunendram were selected at different occasions to represent the Sri Lanka Schools Hockey team and Vamadevarajah, Mahendra even captained the All Schools team.

The first eleven soccer team became JSSA champions in 1967 and remained unbeatable for nine years till 1975 . The teams that annexed championships were fed by the second and third eleven who were coached by me. The team of 1979 can be hailed as the best as it annexed the All Ceylon Championship winning the coveted Singer Shield.

Besides Games, the school has been performing exceptionally well in Physical Trainingand won all Ceylon Championships several times during his tenure as Principal, He retired from service in December1970 but continued to support the games activities of the school by showing off at various matches.

Even though he has departed from this world, the exemplary life he led would always be remembered with love and gratitude by all who associated with him.

"Lives of great men all remind us,
We can make our lives sublime,
And departing leave behind us,
Footprints on the sands of time"

*It may be that the economic and even cultural advantages that I have in mind., could be gained throught any other world language; but to us English is the easiest and the most handy medium; the need for our children today is more English and better English.*

***Jeyaratnam***
***1959***

# A FOND TRIBUTE TO MR. T.T. JEYARATNAM

***Dr. Sarva Jagan***

Although my personal contact with Mr. Jeyaratnam was limited, I believe I was more than fortunate enough to have known him as an English teacher and an excellent principal of one of the best schools in Jaffna.

I started at Mahajana College when I was four years old. Thanks to Mr.Jeyaratnam, my parents had received permission for me to start school, even though I was one year younger than the others. I was at the school as a junior student for only three years, but the well dressed, charismatic and respectful image of Mr.Jeyaratnam always impressed me.

I returned to Mahajana College again to continue my higher studies. A lot of changes had taken place at the school since my earlier days and the school had almost doubled in size; in terms of the number of students and the number of buildings. Mr.Jeyaratnam had put Mahajana College on the Map as one of the top schools in the country and the institution was providing village students with a sound education and the opportunity to enter university. Without doubt, his father would have been proud that the school that he had established had continued to flourish under his son's leadership.

Mr.Jeyaratnam was my English teacher when I was doing my Advance Level. During this time, I came to know more about him. He was a well dressed, simple man, who was articulate, with a wealth of knowledge. I admired him, because he was honest and easy to communicate with; and he loved to teach the English language. As a humble and unassuming person; one would never have guessed his talents and capabilities with respect to the management and administration of the school; and ultimately its remarkable growth. In fact, under his leadership, not only did Mahajana College become well known for academic success; but the science laboratories in the school were considered to be one of the best among Jaffna schools and the athletic program was also successfully developed. The college provided local employment to many village people, and some old students were given the opportunity to teach; once their studies were completed. Even the small town of Thellippalai became well known, due to the success of the Mahajana College; attracting many students from other parts of the country.

In short, Mr.Jeyaratnam had not only dedicated his life to the growth and success of this wonderful institution; but he also contributed to the Tamil society in so many ways.

Unfortunately the institution that he built was partly damaged since these glorious days and it is our hope that with the dedicated help from old students and future generations; we can rebuild the school in the same manner as Mr.Jeyaratnam.

Mr. Jeyaratnam contributed to the success of so many people; and on his hundredth anniversary, I am certainly honoured to pay tribute.

# என்னால் மறக்க முடியாத பசுமையான காலம் !

## – அது ஒரு பொற்காலம்

**ந.ஜெகநாதன்**

எனது மகாஜனாக் கல்லூரிப் பயணம் 1952ம் ஆண்டில் தொடங்கியது. ஆமாம். எனது மாமனார், மறைந்த திரு. நாகலிங்கம் ஆசிரியரோடு அவரது துவிச்சக்கர வண்டியில்தான் முதன்முதலாகப் பாடசாலை செல்லத் தொடங்கினேன். நான் படித்த பாலர்வகுப்பறை , முதலாம் வகுப்பறை போன்ற கட்டிடங்கள் அமைந்திருந்த இடமே, பிற்காலத்தில் "ரெனிஸ்" பந்தாட்டத் திடலாக மாற்றி அமைக்கப்பட்டது.

ஆண்டுகள் கழிந்தன. நான் ஐந்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன்.எமது வகுப்பறைகள்இ தற்பொழுது ஆலயம் அமைந்துள்ள பகுதியில்தான் இருந்தன. ஆசிரியர்கள் "வடமாகாண ஆசிரியர் சங்கம்" நடாத்தும் பரீட்சைக்கு மாணவரைத் தயார் படுத்திக் கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் நானும் மகாஜனாவில் கல்வி பயின்று வருகின்றேன் என்ற உணர்வு மெல்ல மெல்ல என்னுள் ஏற்படத் தொடங்கியது.

அக்காலகட்டத்தில் சிறுவனாகிய எனக்கு அதிபர் திரு தெ.து.ஜெயரத்தினத்தோடு நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டிய வயதோ அல்லது வாய்ப்போ இருக்கவில்லை. காலை வேளைகளில் அதிபர் அவர்கள் பாடசாலை வளாகத்தைக் சுற்றி வருவதைப் பார்த்திருக்கிறேன். கையில் பிரம்பு ஒன்றை வைத்திருப்பதையும் பார்த்திருக்கிறேன். ஆனால், அதிபர் மாணவரை அப்பிரம்பால் அடிப்பதைமட்டும் நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை. ஏனோ தெரியவில்லை. அவரைப் பார்க்கும்போதெல்லாம் ஒருவித பயம் எப்பொழுதும் என்னுள்ளே இருந்தது. அப்பயம் காரணமாக, அதிபரை நேராகச் சந்திக்கும் சந்தர்ப்பங்களை விலக்கிக் கொண்ட காலங்களும் உண்டு.

பெருமழைக் காலங்களில் எமது விளையாட்டு மைதானத்தில் நீர் தேக்கம் ஏற்படுவதுண்டு. அதனால் மைதானம் ஒரு பெரிய குளம் போலக் காட்சியளிக்கும். அவ்வேளைகளில் பாடசாலை வகுப்புகள் நடைபெறமாட்டா. என் போன்ற பல மாணவருக்கு அத்தகைய விடுமுறை நாட்கள் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதில் வியப்பொன்றும் இல்லை. அக்கால கட்டத்தில்தான் அதிபர் ஜெயரத்தினம் அவர்களால் விளையாட்டு மைதானத்துக்கு மண் நிரப்பும் பணி தொடங்கப்பட்டது. மண் நிரப்பும் பணிக்காக நிதி திரட்டும் முயற்சியில் மாணவர் ஈடுபடுத்தப்பட்டனர். மாணவராகிய நாம் ஊரவரது ஏச்சுப்பேச்சுகளையும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு ஒரு ரூபாச் சீட்டுகளை வீடு வீடாகச் சென்று விற்றோம். அச்சிறுவயதில்இ கல்வி கற்கும் பாடசாலைக்காக எம்மால் இயன்ற உதவிகளைச் செய்வதற்குக் கிடைத்த வாய்ப்பை

எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைந்தோம். பெருமிதப்பட்டோம்.

மகாஜனாக் கல்லூரியின் "பொன்விழா" 1960ம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. அவ்விழாவைச் சிறப்பாகச் செய்து முடித்த பெருமை அதிபர் ஜெயரத்தினம் அவர்களையே சாரும். மாணவராகிய நாமும் அவ்விழாவில் பங்குபற்றியதையிட்டு மிகப் பெருமை கொண்டோம். அவ் வெற்றி விழாவின் பின்னரே, அதிபரோடு நேருக்கு நேர் நின்று தொடர்பாடக் கூடிய துணிவு எனக்கு ஏற்பட்டது எனலாம்.

அதிபர் அவர்கள், ஆசிரியர் இல்லாத அல்லது பாடசாலைக்கு வராத ஆசிரியரது வகுப்புகளுக்குத் தானே சென்று ஆங்கிலப் பாடம் கற்பிப்பார். A B C... ஆங்கில எழுத்துகள் வெவ்வேறு சொற்களில் உச்சரிக்கப்படும் விதங்களே அவரது அன்றைய கற்பித்தல் நிகழ்வாக இருக்கும்.

நாம் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் நாட்களில் ஆங்கிலம் வாரத்துக்கு ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டது. அதிபர் அவர்களே எமது ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். அவ்வேளையிலும் ABC' உச்சரிப்பு, வித்தியாசமான ஒலிச்சத்தங்கைள கற்பிக்கத் தவறவில்லை. சில வேளைகளில் அதிபர் வகுப்பறைக்குள் வருமுன்பே மாணவராகிய நாம் கரும்பலகையில் A B C... எழுத்துக்களை எழுதிவைப்பதும் உண்டு. கரும்பலகையில் அவ்வெழுத்துக்களைப் பார்க்கும்பொழுது அதிபரது முகத்தில் ஒரு புன்சிரிப்புத் தோன்றும்.

சிலவேளைகளில் அதிபர் அவர்கள் கோபமாகப் பேசுவதைப் பார்த்திருக்கிறேன், ஆனால் கண்மூடித்தனமான ஆத்திரம் அடைந்ததைக் காணவில்லை. கோபம் அடையும் வேளைகளில்கூட அவரது முகத்தில் உதிக்கும் புன்சிரிபபை எம்மால் மறக்கமுடியாது.

நாம் மாணவர் தலைவராக இருந்த ஆண்டுகளில் அவர் எம்மை மிகவும் அன்புடன் அழைத்துப் புத்திமதி கூறுவதோடு மாணவர் தலைவரது கடமைகள், செய்ய வேண்டியவை, வழிவகைகள், செய்யத் தகாதவை போன்ற பல அறிவுரைகளை எமக்குப் வழங்கத் தவறியதேயில்லை.

நான் உயர்தரப் பரீட்சை எழுதி முடித்தபின்னர், எமது கணித ஆசிரியர் திரு முருகையா அவர்களது ஆலோசனையின்படி அதிபர் என்னை அழைத்தார். "உனது பரீட்சைப் பெறுபேறுகள் வரப் பல மாதங்கள் ஆகும். அதுவரை, திரு முருகையா ஆசிரியரது மாணவருக்குக் கணித வகுப்புகளை எடுக்கவேண்டும்" எனக்கேட்டுக் கொண்டார். மகாஜனாவில் நானும் ஒரு ஆசிரியராகக் கடமையாற்ற உதவிய அதிபர் அவர்களை இன்றும் பணிவுடன் நினைந்து கொள்கின்றேன்.

பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வியை முடித்த பின்னர், 1971ம் ஆண்டுப் பிற்பகுதியில் மீண்டும் எனது கல்லூரிக்குச் சென்றேன். அப்பொழுது, திரு மகாதேவா அவர்கள் மகாஜனாக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவரது ஆசிகளைப் பெற்றேன். அதிபர் ஜெயரத்தினம் அவர்களை அவரது வீட்டில் சந்தித்து அவரது ஆசிகளையும் பெற்றேன்.

எமக்கு முன் மகாஜனாவில் கல்வி பயின்றோருக்கு அதிபராக இருந்தவர், மறைந்த பாவலர் துரையப்பா பிள்ளை அவர்களே. எமது காலத்தவருக்கு அதிபராக வாய்த்தவர் அவரது மகன் அதிபர் திரு ஜெயரத்தினம் ஆவார். எமது காலத்திலேதான், மகாஜனாக் கல்லூரி, அதி உயர்பிரிவுப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது என்னும் விடயத்தை இச் சந்தர்ப்பத்தில் பெருமையாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவ்வுயர்ச்சிக்குப் பக்கபலமாக இருந்தவர் சிற்பி திரு து. ஜெயரத்தினம் அவர்களே.

மகாஜனாவில் மாணவனாகவும் ஆசிரியராகவும் இருந்த அந்தப் பதினைந்து ஆண்டுகள் என்னால் மறக்க முடியாத பசுமையான காலமாகும்.

அது ஒரு இனிய பொற்காலம்

HOMELIFE

# HomeLife /Future Realty Inc.,

Brokerage, Independently Owned And Operated

205-7 Eastvale Dr., Markham Ont. L3S 4N8



## Real Estate Needs

My job is to list all homes, coordinate buyer showings, and negotiate all offers to get the best price, plan all the marketing and advertising, prepare marketing and Promotional campaigns for my listings to generate buyers, keep in touch with my current and past clients, talk to my networking group to generate new business and keep myself motivated to do the best job for my clients.

**Mathan Markandu**

Sales Representative

Office: 905-201-9977 | Mobile : 416-888-5730

# What's in it for You?

Our knowledge of **Residential, Retail** and **Commercial** property operations enable us to provide a high level of service to **Buying, Selling, Tenants** and **Investors**.

Continuously reinvent yourselves & respond to changing times with innovative new business models

Give yourself peace of mind.

**You deserve delight so call ... now**

HOMELIFE HIGHER STANDARDS

**HOMELIFE GTA REALTY INC.**
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
GTA SQUARE 5215 Finch Ave. E. #203 Toronto, M1S 0C2.
Bus: 419.321.6969 | Fax: 416.321.6963



**Prabha Balakrishnan**
*Sales Representative*
**416.357.5327**

**Siva Sivagnanam**
*Sales Representative*
**416.887.7052**

# The security of your home. and your mortgage taken care of




**The Mortgage Centre**

We work for **you**, not the lenders.

iBrokerPower Capital Inc.

101 Duncan Mill Road, Suite 400,
Toronto, Ontario, M3B 1Z3



**Ruban Sivagnanam**


*Agent* *(Lic#: M08000725)*

Cell: 647.281.2823

Off: 416.386.9911 / Fax: 416.386.9922

Email: sivagnanam.s@mortgagecentre.com

Each Mortgage Centre office is independently owned and operated
Licence Number: 10538


No One Beat Us!
On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PRO MAR
Awards & Promotions Ltd.
www.promarawards.com
One stop for all your promotional Ideas...
Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing
416-291 2344
Fax: 416-291 1231
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

# என்னை உணர்ந்து அறிந்து வழிப்படுத்திய தலைவரே அதிபர் தெ. து. ஜெயரத்தினம்

**செ. சந்திரசேகரி**

பரந்த வயல்வெளி, நீரோடும் வளுக்கையாறு, வளர்ந்து நிழல் தரும் மரங்கள், விசாலமான வீதிகள், வீதியோரம் வீடுகள் ஒருங்கேயமைந்த கிராமம்தான் அம்பனை. கீரிமலை, மூளாய் இரு வீதிகளும் சந்திக்கும் ஒரு முடக்கில், அமைந்துள்ள வாடகை வீடொன்று. 1957 ஆம் ஆண்டு பிற்பகுதிகளில் அன்று மகாஜனக்கல்லூரியில் கற்பித்த உயர்தரவகுப்பு ஆசிரியர்கள் சிலர், அங்குவந்து சேர்ந்து கூடி நேரப்பொழுதினைக் களித்து மகிழ்வதுண்டு. நான் பல்கலைக்கழக மாணவனாக இருக்கும்போது, விடுமுறைக்காலங்களில் சிலசமயம் அங்கு போவதுண்டு. அப்போது ஒருநாள் மகாஜனவின் அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் தற்செயலாக ஒருவரைச் சந்திப்பதற்கு அங்கு வந்திருக்கலாம். அன்றுதான் அவரது எழில்மிகு தோற்றத்தை நான் முதல் முதலாகப் பார்த்த நாள். பின்பு எனது பல்கலைக்கழகப் படிப்பினை முடித்து ஆசிரியர் நியமனம் பெற்று உயிரியல் ஆசிரியராக விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களை தென்மாகாணத்திலுள்ள சிறீ சுமங்களா கல்லூரியில் படிப்பிப்பதற்குச் சென்றேன். 1966ஆம் ஆண்டு இடமாற்றலாக யாழ் மாவட்டத்தை அடைந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கடமை புரிய நேர்ந்தது. அக்காலகட்டத்தில் எனது எதிர்பாராத விபத்து ஒன்றினால் பாதிக்கப்பட்டிருந்தேன். அந்நிலையில் பல்கலைக்கழகத் தெரிவுப் பரீட்சைக்கு தோற்றும் உயர்தர வகுப்பு செயல்முறை மாணவர்களுக்குத் தொடர்ந்து ஆயத்தம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அன்று அதிபராயிருந்த இரத்தினசபாபதி அவர்கள் வீடுவந்து என்னை அழைத்துச் சென்று, விடுதிச்சாலையில் தங்கவைத்து உயர் வகுப்புமாணவர்களை அருகேயிருக்கும் அறைகளுக்கு அனுப்பி பாடங்களைக் கவனிக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அவ்வாண்டு பல்கலைக் கழகத்தெரிவு பெறுபேற்றில் மாணவர்களின் தொகை நன்றாக இருந்தது. பின்னர், எனது உடல்நிலை காரணமாக இடமாற்ற ஒழுங்கொன்று நடைபெற்றது. 1968ஆம் ஆண்டு டிசெம்பர் மகாஜனக்கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது.

இவ்விடமாற்றம் ஓர் எதிர்பாராத விளைவு. விடுமுறைக்காலம். எனவே புதுவருடம் 1969ஆம் ஆண்டு ஆரம்பநாளில் அம்பனையருகே அமைந்துள்ள மகாஜனக் கல்லூரிக்குச் சென்றேன். காரியாலயத்தில் அதிபர் ஜெயரத்தினம் அவர்களைச் சந்தித்து அறிமுகம் செய்தேன். ஆசிரியர் அறையில் போயிருக்குமாறு பதில் கூறினார். அப்போது என்னோடு சேர்ந்து, விஞ்ஞான ஆசிரியரான இ.பஞ்சநாதன், இரசாயன ஆசிரியரான, உவைற்றர் எஸ். பாலசுப்பிரமணியம், வர்த்தக ஆசிரியரான கே. முத்துலிங்கம் ஆகியோர் ஆசிரியர் அறையில் தங்கியிருந்தோம். ஒருகிழமை கழிந்தும் நேரசூசி தரப்படவில்லை. எல்லோரும் திகைப்படைந்த நிலையில் இருந்தனர். இங்குதான் அதிபர் ஜெயரத்தினம் அவர்களின் உன்னதமான விழுமியங்களையும் உயர்ந்த இலட்சியங்களையும் அறிவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது என நான் என்னுள்ளே எண்ணினேன். ஒரு ஆசிரியர் பற்றிய விபரங்கள் நன்கு தெரியாத பட்சத்தில் அவரை ஒருபோதும் தனது கல்லூரியில் சேவையினைத் தொடர்வதற்கு தெரிவு செய்யமாட்டார் என்பது அறியக்கூடியதாயிருந்தது. இது அவர்பாலுள்ள ஓர் சாமர்த்தியம். என்னைப்பற்றிய விபரம் ஒன்றும் அவருக்குத் தெரியாது. நான் அக்கல்லூரிக்கு போக

வேண்டும் என்றும் நினைக்கவுமில்லை. விதி செய்த சதியோ என்றுதான் நான் சிந்திக்க வேண்டியிருந்தது. மறுநாள் இடமாற்றம் தொடர்பாக விஞ்ஞான அதிகாரியான எஸ். அற்புதநாதன் அவர்கள் தொலைபேசிமூலம் அதிபர் அவர்களுடன் தொடர்பு கொண்டு என்னைப்பற்றிய சகல விபரங்களையும் கூறியிருந்தார். காரியாலயம் சென்றேன். எனது நிலைமையைக் கூறினேன். நேரசூசி தருவதற்கு உங்களுக்கு முடியாவிட்டால் கடிதமொன்று கல்விப்பணிப்பாளருக்குத் தாருங்கள். நான் அதனை எடுத்துச் சென்று வேறு கல்லூரிக்கு போகமுடியும் என்று தயவாகக் கேட்டுக் கொண்டேன். அதேசமயம் கல்வித்திணைக் கழகத்திலிருந்து கல்விப்பணிப்பாளர் எஸ்.தணிகாசலம் அவர்களும் தொலைபேசியில் கல்லூரியில் எனக்கு உடனடியாக நேரசூசி கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்பிரகாரமாக, நேரசூசி போடுபவரை அழைத்து எனக்கு நேரசூசி கொடுக்குமாறு கட்டளையிட்டார். நேரசூசி தரப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்டு கல்லூரியில் விலங்கியல் ஆசிரியராக பதவியினை ஏற்றுக்கொண்டேன்.

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்"** என்பதற்கு இணங்க, தந்தையான தெ.அ.துரையப்பாபிள்ளை அவர்கள் விட்டுச்சென்ற பணியினை மைந்தன் மகாஜனக் கல்லூரியின் சிற்பி, அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் தலைமையை ஏற்றிருக்கின்றார் என்றால், நாம் ஓர் உன்னதமான எதிர்காலத்தை எதிர்பார்க்கலாம் என்றுதான் நான் நினைத்தேன். இளம் வயதிலேயே உதவி ஆசிரியராக இருந்து, பின்னர் ஆங்கிலப்பயிற்சிக் கலாசாலையில் கல்வி ஊட்டும் வளத்தினை மேலும்பெற்ற பின்னர், தலைமைத்துவ ஞானத்தையும் பெற்ற உயர்பீடமொன்றினை பொறுப்பேற்றார். அன்று தனியார் பாடசாலையாக இருந்தவேளை எதனையும் அவரால் விரும்பிச் செய்ய முடிந்தது. அரசாங்கம் என்று பாடசாலைகளைத் தன்வசம் எடுத்துக் கொண்டதோ, அன்று தொட்டு அதிபர் நினைத்தமாதிரி எதையும் செய்வது கடினமாகவே இருந்தது. காலத்தினை மையமாக்கிக் கொண்டு கல்வியினைப் பெருமையோடு உணர்ந்து தமிழ்வாழ் மக்கள் அனைவரையும் வாழவைக்கும் நோக்கில் கல்லூரியை வளம்படுத்திச் சென்றார். கல்லூரி வளவில் அதிபர் ஜெயரத்தினத்தின் கப்பீரமான தோற்றம், களங்கமில்லாத உள்ளம், கடமையுணர்ச்சி, கட்டுப்பாடு ஆகிய குணாதிசயங்கள் பிரதிபலித்தன. அவரது ஆத்மசிந்தனைகள் உன்னதமானவை. கல்லூரியில் அமைந்திருக்கும் ஆனந்த நடராஜர் ஆலயம் இதற்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. மேலும், விளையாட்டுத்துறையில் அதிபர் அவர்களால் காட்டப்பட்ட ஈடுபாடுகள் கல்லூரியின் பல சாதனைகளை ஈர்ப்பதற்கு வழிவகுத்தன அதிபர் ஜெயரத்தினத்தின் தலைமையின் கீழ் ஒருவருடகாலம் ஆசிரியராகக் கடமை புரிந்திருந்தாலும், அவரதுகாலத்தில் அவர், என்மீது நம்பிக்கை வைத்திருந்தமையால் என்னிடம் கேட்டுக்கொண்ட பதவிகளாகிய துரையப்பா இல்லப்பொறுப்பு, உயிரியல் ஆய்வுக்கூடப் பொறுப்பு, உயர்தர மாணவர் சங்கப் பொறுப்பு அனைத்தையும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன். 1970 ஆண்டு அவரது இளைப்பாறும் சேவைக்காலம் வந்து இளைப்பாறினார். அவரைத் தொடர்ந்து அவருக்குப் பின்னர் கல்லூரியில் எட்டு அதிபர்களுக்குக் கீழ், நான் கடமை புரிந்தேன். அதிபர் ஜெயரத்தினம் பதவி ஓய்வு எடுத்தபின்னரும் கல்லூரி வளர்ச்சிகளில் தன்னை நன்கு ஈடுபடுத்தினார். கல்லூரி வளர்ச்சிக்கான நிதிதேடல் முயற்சிகளில் மிகவும் பங்குகொண்டார். நான் கல்லுரரி பெற்றோர் சங்க காரியதரிசியாக இருந்தபோது அவரோடு சேர்ந்து ஜெயரத்தின மண்டபம் கட்டிடநிதி சேகரிப்பில் வீதி வீதியாக நடைபவனியில் பங்கு கொண்டமை எனக்கு நல்லொரு திருப்தியைத் தந்தது. எனது காலப்பகுதியில் ஆண்டு 1976இல் ஜெயரத்தின நினைவு மண்டபமும் ஜெயரத்தினம் சிலையும் நிறுவப்பட்டன.

நான் ஆண்டு 1983 வரை கல்லூரியில் சேவையாற்றினேன். பின்னர் இளைப்பாறிய நிலையில் தொழில்வாய்ப்பு ஒன்றினையேற்று நைபீரிஜா சென்றிருந்தேன். 1987ஆம் ஆண்டு நான் கனடா வந்து சேர்ந்தேன். இங்கு வந்தும் கல்லூரிப் பழைய மாணவர் சங்க வளர்ச்சிகளில் கலந்து இயலுமான அளவில் சேவைசெய்து வருகின்றேன். கல்லூரியின் வளர்ச்சிவேகம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. அபிவிருத்திப் பாதையில் பழைய மாணவர்கள் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து வருகின்றனர்.

**"உன்னை நீ அறி" எனும் கல்லூரிக் குறிக்கோள் வாசகமும், "கொடி பறக்குது கொடி பறக்குது கொடி பறக்குது பாரடா" எனும் கொடி வணக்கப் பாட்டும், "மாண்புறு மகனாம் மகாஜனச் சிற்பி ஜயரத்தினம் பணி நினைவோம்" எனும் கல்லூரிக் கீதமும்**

எங்கள் சிந்தனைகளில் மோதிக் கொண்டே இருக்கின்றன. உயர்வும், வீழ்ச்சியும் எங்கள் கைகளில் இருக்கின்றது. உலகரீதியில் வாழும் நாமெல்லோரும் இவ்வேளைதனில் அதிபர் ஜெயரத்தினம் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கல்லூரியின் நினைவுகளை ஆழ்ந்து சிந்தித்து, எடைபோட்டு, மகிழ்ச்சி அடைகின்றோம். மகாஜனக்கல்லூரி எதிர்காலத்தில் ஓர் உன்னத நிலையில் சிறந்த பல்கலைக்கழகமொன்றாகத் திகழவேண்டும். வெல்லுக வெல்லுக மகாஜன மாதா.

# தன்னலமற்ற சேவைகளோடு
# வெற்றிகளை தனதாக்கியவர்
# -மறைந்தும் மறையாதவர்

நா.சாந்திநாதன்

நூற்றாண்டைக் கடந்துவிட்ட மகாஜனாக்கல்லூ லியின் வரலாற்றிலே, அதிபர்கள் வரிசையிலே தனக்கெனத் தனியிடம் வகுத்த. உலகம் பூராக வாழ்கின்ற மகாஜனன்கள் மனதில் ஆழமாகப் பதிந்த அமரர். தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நூற்றாண்டு வேளையிலே, அவர் பற்றிய கண்ணோட்டங்கள் ஆவணப்படுத்துவது அவசியமாகின்றது. மகாஜனக் கல்லூரியில் அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களுடைய காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்லவேண்டும். தந்தை துரையப்பாபிள்ளையினால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்த மகாஜனவை அடுக்கு மாடல்களாக்கி சகல துறையிலும் அழகுறச் செய்த பெருமை அவருக்கே சாரும். தந்தையின் உழைப்பால் இவர் நிலைத்தாரோ? இவரின் உழைப்பால் தந்தை உயர்ந்தாரோ என்று சொல்லுமளவிற்கு இருவர் உழைப்பும் மகாஜனாவின் வரலாற்றில் இன்றியமையாதது. இவர்கள் மகாஜனாவின் இரு கண்கள் என்றே சொல்லவேண்டும்.

இவருடைய காலத்தில் மாணவர்களாக இருந்திருக்கின்றோம் என்பதால் நாமும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அவருடைய அறிவுரைகள் கேட்டுத்தெரிந்தவை சில. அவர் ஆற்றலைப் பார்த்துப் புரிந்தவை பலப்பல. இவரை நினைக்கும்போது பளிச்சென்று கண்முன்னே சில காட்சிகள் வரும். என்றும் முகத்தைவிட்டு அகலாத புன்சிரிப்பு, மடிப்புக்குலையாக ஆடை, நிமிர்ந்த கெம்பீரமான நடை, கைக்குள் அடங்கக்கூடிய மறைந்தும் மறையாமல் இருக்கும் இரண்டு அடித்தடியுடன் காலை, மாலை என்று மைதானத்தைச்சுற்றி வகுப்பறைகளுக்கூடாக நடந்துவரும் அழகு, நடந்து செல்லும் திசையிலே மழைவிட்டு ஓய்வதுபோல் மாணவர் சத்தங்கள் ஒழிந்து போவது, இவையெல்லாம் இவர் ஆளுமையைப் புலப்படத்துகின்ற கண் கொள்ளாக் காட்சிகள். இப்படியாக வகுப்பறைகளை வலம் வரும்போது ஏதாவது வகுப்பு ஆசிரியரின்றி அநாதையாக இருந்துவிட்டால் அந்தக் கணத்தில் அந்த வகுப்பின் கரும்பலகை அவருக்குச் சொந்தமாகிவிடும். அடுத்த வகுப்பாசிரியரிடம் குசலம் விசாரிக்கச் சென்ற அந்த வகுப்புக்குரிய ஆசிரியர் வந்து சிலகணம் காத்து நிற்பார். இது இவர் ஆசிரியர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக எடுத்த பெரிய தந்திரம்.

இவர் காலத்தில் ஈட்டிய சாதனைகள், ஆற்றிய சேவைகள் பலப்பல. ஓலைக் கொட்டில்கள், வளவைச்சுற்றி கட்டிடங்களாக மாறின. ஊரின் வெள்ளத்தை தாங்கி நின்ற நடுமைதானம் பெருமளவு மண்போட்டு நிரவி, அறுகம்புல் நாட்டப்பட்டு பசுமைநிறைந்த மைதானமாக ஆக்கப்பட்டது. என்றும்

மகாஜனாவை நினைவு படுத்தும் முன், மண்டபம் நிமிர்ந்தது, ஆலயம் அமைக்கப்பட்டது, இவையெல்லாம் ஒரே நாளில் சுவிச்போட நடந்த நிகழ்வல்ல. பணம் சேகரிப்பதற்கு வெளிநாட்டுப் பயணங்களும் உள்நாட்டுச் செல்வாக்காலும் விளைந்த உயர்ந்த பொக்கிசங்களே. இவர் காலத்தில் ஆசிரியர்தொகையை அதிகரித்தார். மாணவர்தொகை பன்மடங்காகியது. கல்வியில் மட்டுமல்லாது மகாஜனா சகல துறைகளிலும் முன்னிலை வகுக்கவேண்டும் என்ற ஆர்வத்தால் எல்லாத்துறைக்குமான சகல வசதிகளையும் இந்த வளவுக்குள் ஏற்படுத்தினார். நிர்வாகத்திறமை அங்கே தொனித்து நின்றது.

எந்தெந்தத் துறைக்கு யாரை நியமிக்க வேண்டுமென்பதில் உள்ள இவருடைய சாமத்தியம்தான் ஒவ்வொரு துறையிலும் மகாஜனா பல சாதனைகளையும் வெற்றிகளையும் தனதாக்கிக் கொள்ளக் காரணமாக இருந்தது.

அங்கு வருடம்தோறும் சந்திக்கின்ற விழாக்களை ஒழுங்கு செய்கின்ற விதங்கள், அதற்கான அவ்வப்போதுள்ள ஒத்திகைகள், மாணவர் ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பதற்கு கையாண்ட வழிவகைகள் எல்லாமே இவரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்.

ஒரு மனிதனால் எப்படி எல்லாவற்றையும் ஒரே சீராகக் கவனிக்க முடிந்தது என்பது இன்னும் எல்லோர் மனதிலும் உள்ள கேள்வியாகவே இருக்கின்றது. இவர் பள்ளியில் கொண்ட காதல், அல்லது ஒரு வகை வெறி மணிக்கூட்டுக் கம்பியில் டிக் டிக் ஓசைக்குப் பதிலாக மகாஜனா மகாஜனா என்று ஒலித்திருக்க வேண்டும். பேச்சிலும் மூச்சிலும் மகாஜனாவின் பெயரை உலகளாவிய வீதியில் பரவச் செய்ய முடிந்தது. இந்த தன்னலமற்ற சேவைதான் இன்றும் அவருடைய நூற்றாண்டு வேளையில் எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிவு செய்து மறைந்தும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்

வளர்க மகாஜனா, தொடரட்டும் அவர்நாமம் தொடர்ந்து'.

## கண்ணியக் கனவானே

ராகம்: தேசூ்

தாளம்: ஆதி

மின்னொளி ஓவியமே - மாசனா
மேன்மையின் இன்சுடரே
உன்னையே உன்னுகையில் - மாசனா
உருவமே உயருமால்

பொன்னின் எழிலோ நீ - மதலை
பேணும் குரலுரையில்
பண்ணும் புன்சிரிப்பால் - ஜெய
ரத்தினம் ஆனாயே

உள்ளக் கடலினிலே -உன்தன்
உணர்புப் பூத்திரைகள்
அள்ளி அளித்திடுமே - அகிலம்
உள்ளும் மாசனாதான்

எண்ணிய கல்விப்பணி - உள்ளம்
ஏத்தும் சைவத்திறன்
கண்ணிய கனவானே - ஜய
ரத்தின மாமணியே

வாழிய உன்நினைவு - நாளும்
வழங்கும் பணிமுறையில்
வாழிய வாழியவே - ஜய
ரத்தினம் வளமாக

**புலவர். நா. சிவபாதசுந்தரனர்**

## "அவர் ஒரு தீர்க்கதரிசி"
## மாண்புமிகு மனிதரை மறக்குமா நெஞ்சம்

**குரு அரவிந்தன்**

மகாஜனாக் கல்லூரியில் எனக்கு அனுமதி கிடைத்து சில நாட்களாகியிருக்கும். வழமைபோல காலையில் எழுந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மேற்கு வீதியில் இருந்த மகிழமரத்தில் சில பூக்களைப் பறித்துப் பையில் போட்டுக்கொண்டு, சைக்கிள் ஓடியபடியே கோபுரத்தைக் கடக்கும்போது ஒற்றைக்கையை நெஞ்சில் வைத்து மாவைக்கந்தனை மனதில் கும்பிட்டுக் கொண்டு காங்கேசந்துறை வீதிவழியே அவசரமாக கல்லூரி நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். அந்த நேரம் பார்த்து காங்கேசன்துறைவீதி வழியாக கனகசபாபதி மாஸ்டர், ஆறுமுகராஜா மாஸ்டர், தியாகராஜா மாஸ்டர், சண்முகசுந்தரம் மாஸ்டர், சுந்தரமூர்த்தி மாஸ்டர் என்று ஒரே ஆசிரியர் கூட்டமாய் கல்லூரி நோக்கி சயிக்கிளில் உலா வந்து கொண்டிருந்தார்கள். நேரத்திற்குப் போகவேண்டும் என்றால், மரியாதைக்காக மறுபக்கம் பார்த்துக் கொண்டு இவர்களை எல்லாம் முந்திக் கொண்டு வேகமாகச் சயிக்கிள் ஓடவேண்டும். புதிய நண்பர்களான பாலகோபால்ராஜாவும் சூரியகுமாரும் தெல்லிப்பழை சந்தியில் கதைத்துக் கொண்டு நின்றார்கள்.

"மச்சான் நானும் வாறேன்" என்றபடி ஓடி வந்த பாலகோபாலின் குரல் கேட்டு சயிக்கிளை நிறுத்தினேன். ஓடி அருகே வந்தவன் நேரத்தைப் பார்த்துவிட்டு "கொஞ்சம் பொறுத்துப் போகலாம் நின்றுகொள்" என்றான். "கொஞ்சம் பொறுப்பதா? ஏற்கனவே நேரம் போச்சு, நான் போறேன்" என்று சொல்லிவிட்டு விரைவாக நான் கல்லூரி நோக்கிச் சென்றேன்.

அன்று வாசல் கடமையில் ஈடுபட்டிருந்த மாணவர் தலைவராக இருந்த சுபாஸ் காலையில் தாமதமாக வந்த எல்லா மாணவர்களையும் அதிபர் ஜெயரத்தினத்தின் அறையின் முன்னால் நிரையாக நிற்கவைத்தார். நானும் அவர்களில் ஒருவனாக நின்றேன். காலை வழிபாடு முடிந்ததும் அதிபர் ஜெயரத்தினம் பிரம்புடன் வந்தார் ஒவ்வொருவராகக் காரணம் கேட்டார். சிலருக்குக் கையை நீட்டச் சொல்லி பிரம்பால் அடி விழுந்தது. சிலர் அவர் கேட்காமலே கையை நீட்டினார்கள். அச்சுவேலி பேருந்து சில சமயங்களில் தாமதமாக வருவதுண்டு. அந்த வண்டியில் வந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று கேட்டு அவர்களை மட்டும் வகுப்பிற்குப் போகச் சொன்னார்.

எனக்குக் கிட்ட வந்தபோது கையை நீட்டினேன். நிமிர்ந்து பார்த்தார், "முதற்தரம் லேட்டாய் வந்திருக்கிறாய், இனிமேல் லேட்டாய் வரக்கூடாது" என்று சொல்லி அடி போடாமலே என்னை அனுப்பிவிட்டார். தலை குனிந்தபடி வகுப்பை நோக்கிச் சென்றபோது வாசலில் பாலகோபால் சிரித்தபடி நின்றான். "சொன்னால் கேட்கமாட்டேன் என்றாய் இப்ப பார்த்தியா?" என்று ஒரு சிரிப்புச் சிரித்தான். அவன் எப்படித் தண்டனை பெறாமல் உள்ளே வந்தான் என்பது அப்போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஏன் எனக்கு அதிபர் தண்டனை தரவில்லை, முதற்தரம் என்று எப்படி நினைவில் வைத்திருந்தார்" என்று நான் அடிக்கடி நினைத்துப் பார்த்து அவரது ஞாபகசக்தியை வியப்பதுண்டு. அன்று தொடக்கம் அவர் என் மீது வைத்திருந்த நம்பிக்கையை காப்பாற்ற வேண்டும், நேரத்தின் முக்கியத்துவத்தை அவர்

எனக்கு உணர்த்தியிருந்ததால் இனிமேல் கல்லூரிக்குத் தாமதமாக வரக்கூடாது என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது. அன்று அவர் தண்டனை தந்திருந்தால், "என்ன இது ஒரு பிரம்படிதானே சமாளிக்கலாம்" என்று மேலும் மேலும் தாமதமாக வருவதற்கு வழி வகுத்திருக்கும். ஆனால் அன்று அவர் வாழ்நாளில் மறக்கமுடியாதபடி நேரத்தின் முக்கியத்துவத்தை ***(Punctuality )*** எனக்கு உணர்த்தியிருந்தார். கனடாவில் இருக்கும் அடுத்த தலைமுறையினருக்கு ஆசிரியர் மாணவர்களைப் பிரம்பால் அடிப்பது என்பது புதுமையான விடையமாக இருக்கும், ஆனால் இலங்கையில் பிறந்த எங்கள் தலைமுறைக்கு இது பழகிப் போனதொன்றாகும். ஏன், உங்கள் அப்பா அம்மாகூடப் படிக்கிற காலத்தில் தங்கள் ஆசிரியரிடம் அடி வாங்கியிருக்கலாம், கேட்டுப் பாருங்கள்.

மகாஜனன்களின் விழா என்றால் அது சொன்ன நேரத்திற்குத் தொடங்கும் எனவே நேரத்திற்குப் போகவேண்டும் என்ற நினைவை எல்லோர் மனதிலும் பரந்த அளவில் விதைக்க அதிபர் ஜெயரத்தினத்தின் இந்த உத்திதான் உதவியாக இருந்தது. இன்று எங்கள் மத்தியில் அவர் இல்லை என்றாலும் எங்கள் கல்லூ ரிக் கலைவிழாக்கள் எங்கே நடந்தாலும் சொன்ன நேரத்திற்கு தொடங்கும் போதெல்லாம், கல்லூரிக் கீதம் பாடும் போதெல்லாம் அவர்தான் எல்லா மாணவர்களின் நினைவிலும் நிற்கின்றார். எனது தமிழ் ஆசிரியரான வித்துவான் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள்தான் அதிபர் தெ.து. ஜெயரத்தினத்தின் வேண்டு கோளுக்கு இணங்க மகாஜனாக் கல்லூரிக் கீதத்தை இயற்றியிருந்தார். பின்நாளில் தன் வாழ்க்கையைக் கல்லூரிக்கு அர்ப்பணித்த மகாஜன சிற்பி அதிபர் தெ.து.ஜெயரத்தினத்தின் பெயரும் கல்லூரிக் கீதத்தில் இணைக்கப்பட்டது.

1945ம் ஆண்டு அதிபராகப் பதவி ஏற்ற தெ.து.ஜெயரத்தினம் அவர்கள் தெல்லிப்பழை மகாஜனாவைக் கிராமத்துப் பள்ளிக்கூடம் என்று மற்றவர்கள் கேலி செய்த போதெல்லாம் கொஞ்சங்கூட மனம் தளர்ந்து போகவில்லை. படிப்பிலும், விளையாட்டிலும் மட்டுமல்ல ஒழுக்கத்திலும் உயர்ந்து நின்றால் உலகமே திரும்பிப் பார்க்கும் என்ற நம்பிக்கையோடு கடினமாக உழைத்தார். இதனால் 1947ல் இரண்டாம்தரப் பாடசாலையாகவும், 1949ல் முதலாம்தர பாடசாலையாகவும் தரம் உயர்த்தப்பட்டது. அவரது காலத்திலேயே 1960ல் கல்லூரி பொன்விழாவைக் கொண்டாடியது. அவரது நம்பிக்கையும் உழைப்பும் வீண்போகாது என்பதை அதிக மாணவர்கள் மகாஜனாவில் இருந்து பல்கலைக் கழகம் புகுந்தபோதும் சரி, நாடகத் துறையிலும்சரி, அடுத்தடுத்து விளையாட்டுத் துறையில் குறிப்பாக ஹொக்கி, உதைபந்தாட்டத்தில் சாம்பியன்களாக வந்தபோதும் சரி மாணவர்களைக் கொண்டே சாதித்துக் காட்டினார். அகில இலங்கையையே மகாஜனாவின் பக்கம் திரும்பிப் பார்க்கவைத்த அதிபர் தெ.து. ஜெயரத்தினம் அடைந்த இந்த வெற்றிக்கு அவரது தந்தையான கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளையும் அவரைத் தொடர்ந்து அதிபராக வந்த அதிபர் கா.சின்னப்பாவும் முக்கிய பங்கு வகித்திருந்தார்கள் என்பதையும் மாணவர்களான நாங்கள் மறக்க முடியாது. இவரது கால கட்டத்தில் விடுதி வசதிகளோடு கூடிய கல்லூரியாக மகாஜனா மாற்றப்பட்டதால் கல்லூரி மாணவர் தொகை 1800 ஐயும் தாண்டியிருந்தது. 1978ல் அதையும் கடந்து சுமார் 2300 மாணவர்கள்வரை பதிவாகியிருந்தனர். அதிபர் தெ.து. ஜெயரத்தினத்திற்குப் பின் அதிபர்களாக பொறுப்பேற்றவர்களும் கஷ்டமான காலக்கட்டத்திலும் தளர்ந்துபோகாது மகாஜனாவைப் பேரும் புகழுடனும் கொண்டு நடத்தினர். துன்பம் வந்து உற்ற போதும் துவளத உள்ளம் கொண்டவர்

